MAHANAIM MINISTRIES
PREACH THE GOSPEL

மக்னாயீம் வெளியீடுகள்

விவிலியத்தில் குறளோவியம்

Rev. Dr. R. தனராஜ்

விவிலியத்தில் குறளோவியம்

R. தனராஜ்

MAHANAIM MINISTRIES
PREACH THE GOSPEL

மக்னாயீம் ஊழியங்கள்

குவளைக்கண்ணி - 627 753.

சங்கரன்கோவில் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்.

Cell : 98428 - 88929

நூல் விவரப்பட்டியல்

நூலின் பெயர்	:	விவிலியத்தில் குறளோவியம்
ஆசிரியர்	:	R. தனராஜ் பி.ஏ., டி.ஐ.சி.,
வெளியீட்டு முகவரி	:	மக்னாயீம் ஊழியங்கள் குவளைக்கண்ணி - அஞ்சல் சங்கரன்கோவில் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம். அஞ்சல் எண் - 627 753.
பதிப்பு	:	முதற்பதிப்பு
மாதம், ஆண்டு	:	நவம்பர் 2014
பிரதிகள்	:	1000
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	XIV + 94
நூல் அளவு	:	டெம்மி 1/8
எழுத்து உருவ அளவு	:	11 புள்ளிகள்
தாள்	:	70GSM JK பேப்பர்
பைண்டிங் மற்றும் அச்சிட்டோர்	:	ஜெயம் ஆப்செட் சங்கரன்கோவில்.
விலை	:	ரூ.30/-



அணிந்துரை

M. சுந்தர் யேசுவடியான்,
நிறுவனர்,
அனாரிய சமாஜ் ஊழியங்கள்,
22-A, பேட்ரிசன் தெரு, நாகர்கோவில்-1.
கைபேசி : 4652235604

'விவிலியத்தில் குறளோவியம்' என்ற தனது நூலுக்கு Rev.Dr.R. தனராஜ் அவர்கள் வழங்கிய 'அறிமுகவுரையில்', இந்த நூலுக்கு முன், தான் எழுதிய தனது முதல் நூலின் தலைப்பு 'திருக்குறளில் பரிசுத்த விவிலியச் சிந்தனைகள்' என்பதாக எடுத்துரைத்துள்ளார். அந்த நூலை நான் படித்திருக்கிறேன். **'விவிலியத்தில் குறளோவியம்'** என்ற இந்த இரண்டாவது நூலில், திருக்குறளின் 38 அதிகாரங்களின் இரத்தினச்சுருக்கம் தான் தரப்பட்டுள்ளது என்றும், இந்த நூலைத் தொடர்ந்து, மீதியான 95 அதிகாரங்களின் பிழிவை மூன்றாவதாக தான் வெளியிடவிருக்கும் அடுத்த நூலில் எதிர்பார்க்கவும் நம்மை அழைக்கிறார். **வாசகர்கள் அறிமுகவுரையை மிகவும் கூர்ந்து வாசித்து அதன் பின் இந்த நூலுக்குள் நுழைய நான் ஆலோசனை கூறுகிறேன். ஏனெனில் இந்த அறிமுகம் இல்லாமல் படித்தால் இந்த நூலின் சிறப்பைப் புரிவது கடினம்.** இந்த நூல் இதர மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

ஒரு சராசரி தமிழ் கிறிஸ்தவர் **'விவிலியத்தில் குறளோவியம்'** என்ற இந்தத் தலைப்பைப் படித்ததும் நூலை படிப்பதை நிறுத்திவிட்டு, நூலாசிரியரின் கிறிஸ்தவ நம்பிக்கையைப் பற்றி ஆய்வு செய்ய ஆரம்பித்து விடுவார் என்றே நான் கற்பனை செய்கின்றேன். ஏனெனில், இந்தியக் கிறிஸ்தவர்களாகிய நாம், ஐரோப்பியர்கள் நமக்குத் தந்த பரிசுத்த வேதாகமத்தை, அவர்கள் கற்றுத் தந்த பாணியில் படிப்பதோடு திருப்தியடைந்து விடுகிறோம். **மோசே, எகிப்தியரின் சகல சாஸ்திரங்களையும் கற்றுத் தேறினதைப்போலவோ, எஸ்றாவும் நெகேமியாவும் அன்றைய அரசர்களின் சாசனங்களை ஆய்வு செய்து தங்கள் உரிமைகளை எடுத்துரைத்து எருசலேம் தேவாலயத்தைக் கட்ட முயன்றது போலவோ, பவுல் அப்போஸ்தலர், அத்தேனே பட்டணத்துப் புலவர்களின் இலக்கியங்களைக் கற்றது போலவோ நாம், நமது தேசத்து சாஸ்திரங்களையும், நமது புலவர்கள் எழுதிய இலக்கியங்களையும் நமது வரலாற்றையும் கற்று, அவைகள் வழங்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தேடவுமில்லை, பவுல் செய்ததைப்போல அவைகளை ஊழியத்துக்காக பயன்படுத்தவுமில்லை.**

ஆகையால்தான் இந்தியாவில் சுவிசேஷம் வந்து 2000 ஆண்டுகள் தாண்டியும் இந்தியக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 2.3 விழுக்காடாகச் சுருங்கி விட்டது. **சுவாமி விவேகானந்தர்,** ஞானதீபம் என்ற இதழில் தோமாவின் ஊழியத்தால், முதல் நூற்றாண்டில் முப்பது லட்சம் கிறிஸ்தவர்கள் இந்தியாவில் இருந்ததாகக் கூறியுள்ளார். அவர்கள் பலுகிப் பெருகியிருந்தால், இன்று 90 கோடிக்கு மேலாக வளர்ந்து, இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு என்றே அறியப்பட்டிருக்கும். அந்த முப்பது லட்சம் ஆதி இந்தியக் கிறிஸ்தவர்கள் தான் இன்று இந்து மதத்தினர் என்ற பெயரில் அறியப்படுகின்றனர் என்ற செய்தி கூட எத்தனை இந்தியக் கிறிஸ்தவர்களுக்குத் தெரியும்?.

இந்தப் பின்னணியில், கீழே தரப்பட்டுள்ள சில இந்திய வரலாற்றுக் குறிப்புகள் '**விவிலியத்தில் குறளோவியம்**' என்ற இந்நூலின் சிறப்பையும், ஆற்றலையும், தேவையையும் புரிய உதவும்.

இந்தியாவின் மக்கள் தொகை இன்று 125 கோடியைத் தாண்டியுள்ளது. இவர்களில் தொண்ணூறு விழுக்காட்டினராகிய, பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் சமய சிறுபான்மையினர் (BC, SC, ST & Religious Minorities) ஆகிய அனைவரும் திராவிடர்கள். அவர்கள், தங்களையும் தங்கள் வரலாற்றையும் குறித்த முழுமையான சத்தியங்களை அறியாமல் அடிமைத்தளையில் சிக்கி வாழ்கின்றனர். விடுதலைக்கு வழி தெரியாமல் தவிக்கின்றனர். தாங்கள் அடிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதைக்கூட உணர இயலாமல் கட்டுண்டவர்களாக, ஒடுக்கப்படுகிறவர்களாக, குருடராக, சிந்திக்க இயலாத நடை பிணங்களாக பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில், 'சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்' என்று கூறி விடுதலை நாயகனாகிய இயேசு இந்திய மக்களை அழைக்கிறார் (யோவான் 8:32).

கி.மு.6-ஆம் நூற்றாண்டில் புத்தரும் மகாவீரரும் உருவாக்கிய பவுத்தம், சமணம் என்ற நாத்திக மதங்களுக்குப்பின், இந்திய மக்களை தம் வயப்படுத்த இரண்டு சித்தாந்தங்கள் போட்டியிடுகின்றன. அவைகளில் ஒன்று, சிந்துவெளி நாகரீகத்தை உருவாக்கியவர்களும், இந்தியா முழுவதும் பரந்து பட்டு வாழ்ந்து, ஆதி காலத் தமிழ் மொழி பேசி வந்த மண்ணின் மைந்தர்களுமாகிய 90 சதவீதம் திராவிடர்களின் வாழ்வியல் சித்தாந்தம். இந்த சித்தாந்தத்தில், 'அன்பே சிவம்' (தேவன் அன்பாகவே இருக்கிறார்) 'யாதும் ஊரே யாவரும் கேளீர்', (உலகனைத்தும் எல்லோருக்கும் சொந்தம் - மனிதர் அனைவரும் உறவினர்), 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்', 'வாய்மையே வெல்லும்', 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' (பிறப்பில் அனைவரும் சமம்) போன்ற அன்பின் கோட்பாடுகள் அடங்கும். இவை, திராவிட முனிவர்களின் இலக்கியங்கள் வெளிப்படுத்தும் இந்திய மண்ணின் மைந்தர்களின் வாழ்வியல் சித்தாந்தம்.

இதற்கு நேர் எதிராக, கி.மு.6-ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி.4-ஆம் நூற்றாண்டிற்கும் இடையே இந்தியாவில் படையெடுத்தும், நாடோடிகளாகப் பிழைக்கவும் வந்த ஆரியர்களால் திணிக்கப்பட்டது தான் 'வர்ணாசிரம தர்மம்', அதாவது, சாதி ஏற்றத்தாழ்வுக் கோட்பாடு என்ற ஆரியக் கலாச்சார - அரசியல் சித்தாந்தம். ஆரியரின் இந்த சமூக அமைப்புக் கோட்பாடு, இந்தியர்களை பிறப்பிலேயே பல ஆயிரம் சாதிகளாகப் பிரித்து, ஆரிய பிராமணர்களின் இந்துத்துவச் சித்தாந்தத்துக்கும் அதன் வழியாக அவர்களது அரசியலுக்கும் அடிமைப்படுத்தியுள்ளது. சாதி ஏற்றத்தாழ்வுக் கோட்பாடு இந்தியாவின் தேசிய பாவமாகவும் தேசத்தின் சாபமாகவும் திராவிட இந்தியருக்கு எதிராக செயல்படுகிறது. இந்த சித்தாந்தம் இந்துத்துவம் என்ற போலி ஆன்மீயத்துக்குள் புதையுண்டு கிடக்கிறது.

கடந்த சுமார் அரை நூற்றாண்டு காலத்தில், அநேகம் கிறிஸ்தவ அறிஞர்கள் இந்திய வரலாற்றையும், இந்திய சமய இலக்கியங்களையும் பரிசுத்த வேதாகமத்தையும் பல்கலைக்கழங்களில் ஆய்வு செய்து பல புதிய சத்தியங்களை வெளிக்கொண்டு வந்துள்ளனர்.

அந்த ஆய்வுகளின் படி, இந்திய மக்களை தங்கள் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்க, இயேசுவின் சீடராகிய தோமா அப்போஸ்தலரை தேவன் இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார் என்றும், அவர் கி.பி.49 முதல் கி.பி.72 வரை இந்தியாவில் நற்செய்திப்பணி செய்து 8 ஆலயங்களை அன்றைய தமிழகத்தில் கட்டி எழுப்பிய பின் சென்னையில் இரத்த சாட்சியாக மரித்தார் என்றும் நிரூபிக்கப் பட்டுள்ளன. ஆரியரின் சமூக அமைப்பின்படி பஞ்சமராகக் கருதப்பட்ட திருவள்ளுவரால் எழுதப்பட்ட திருக்குறளையும் அதினின்று பிற்காலங்களில் திராவிடத் தலைவர்களால் உருவாகிய தமிழ் பக்தி இயக்க இலக்கியங்களையும், சைவ சித்தாந்த இலக்கியங்களையும், தமிழ் சித்தர் பாடல்களையும் இருட்டடிப்புச் செய்து, ஆரிய சித்தாந்தமாகிய இந்துத்துவம், திராவிட இந்தியர்களை அடிமைத்தளையில் தொடரச் செய்கிறது என்ற உண்மையையும் இந்த ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. சமஸ்கிருத எழுத்துக்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தான் உருவாகின என்றும் சமஸ்கிருத மொழியில் உள்ள வேதங்களும் வேதாந்தங்களும் தமிழ் சமய இலக்கியங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்டவைகளே என்பது போன்ற பல உண்மைகள் இந்த ஆய்வுகளினூடே நாம் கிடைக்கப் பெறுகிறோம்.

நூலாசிரியரின் இந்த நூலின் தனிச்சிறப்பு என்னவெனில், தோமா வழி வந்த ஆதி இந்தியக் கிறிஸ்தவ இலக்கியமாகிய திருக்குறளையும் பைபிளையும் பயன்படுத்தி இந்திய மக்களுக்கு நற்செய்தி அறிவிக்க இயலும் என்பதாகும். **இந்த நூலில், பாயிரம் மற்றும் 44 குறட்பாக்களையும் அவற்றிற்கு இணையான பைபிள் வசனங்களையும் தொகுத்து, விளக்கப்பட்டதுடன், மேலும் சிந்தனைக்கான இதர வெளியீடுகளையும் நூலாசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார்.** இந்த நூல் இந்த வரிசையில் இனி வரும் நூல்கள் எப்படி அமையவேண்டும் என்பதற்கு ஒரு முன் மாதிரியாக தனிச்சிறப்புடன் அமைந்துள்ளது.

பலவிதமான தடைகளாலும் எதிர்ப்புகளாலும் இந்தியாவில் கிறிஸ்தவத்தின் வளர்ச்சி குறைந்து வரும் இந்த நூற்றாண்டில், ஆய்வடிப்படையிலான இந்த ஊழிய வழிமுறை வளரவேண்டும். அதற்காக, அனைத்து இந்தியக் கிறிஸ்தவ டினாமினேஷன்களும் இணைந்து ஒரு கிறிஸ்தவப் பல்கலைக்கழகம் ஆரம்பித்து இந்த ஆய்வுகளை மேலும் விரிவுபடுத்தி உறுதிப்படுத்தி உலகுக்குத் தெரியப்படுத்தவேண்டும். இது நம் காலத்தின் கட்டாயம். ஜெபத்துடன் செயல்படுவோம்.

'விவிலியத்தில் குறளோவியம்' போன்ற நூல்களை இறையியல் கல்லூரிகளிலும், திருச்சபைகளின் இறைக் கல்வித்திட்டங்களிலும் பயன்படுத்தவும், திருச்சபை போதகர்களும் சுவிசேஷ ஊழியர்களும் இவைகளையும் பைபிளையும் இணைத்துக் கற்று புதிய அணுகுமுறையுடன் நற்செய்திப்பணி விரிவடையச் செய்ய ஏற்ற சூழ்நிலை உருவாகவும் இறைவனை வேண்டுகிறேன்.

ஆசிரியருக்கு என் மனமுவந்த பாராட்டுக்கள். அவருடைய அடுத்த குறளோவியம் அதிவிரைவில் வெளிவர நாம் இணைந்து ஜெபிப்போம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வாராக.

நாகர்கோவில்
17-9-2014

(ஒம்) M. சுந்தர் யேசுவடியான்

விவிலியத்தில் குறளோவியம்

அறிமுகவுரை

இறைமைந்தன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் **'விவிலியத்தில் குறளோவியம்'** என்னும் இப்புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்.

திருக்குறளில் பரிசுத்த விவிலியச் சிந்தனைகள் குறித்து நான் எழுதின என் முந்தைய நூலில் இவ்வாறு எழுதியிருந்தேன். "**'திருக்குறளில் பரி.விவிலியச் சிந்தனைகள்'** என்னும் நூலின் முதலாவது தொகுதிதான் இந்தப்புத்தகம். பின்னும் இரண்டு தொகுதிகள் இதன் சார்புடைய தலைப்புகளில் எழுத விரும்புகிறேன்." இதன் பகுதி நிறைவேறுதல்தான் **விவிலியத்தில் குறளோவியம்** என்னும் இச்சிறிய நூல். ஓவியம் இன்னும் முற்றுப்பெறவில்லை. ஏனெனில், திருக்குறளில் உள்ள 133 மொத்த அதிகாரங்களில் 38 அதிகாரங்கள் மட்டுமே தொட்டுக் காட்டப்பட்டுள்ளது. எனவே, இம்முயற்சி தொடரவும், அடுத்து இதுபோன்ற தொகுதிகளை உருவாக்க எனக்கு வேண்டிய அறிவு, ஆற்றல், உதவிகளனைத்தையும் இறைவன் தந்தருளும்படியாகவும் வேண்டுதல் செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்விதமான ஒரு நூலை ஆக்குவதற்கான சிந்தை என்னுள் எழும்பிய வகை குறித்து சொல்லியே ஆகவேண்டும்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு, நான் **சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில்** இளங்கலை பட்டப்படிப்பு பயின்று கொண்டிருந்த வேளையில் **குமுதம்** என்னும் வார இதழ்ஒன்றில், சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டில் வரும் புறநானூற்றுச் செய்திகளை திருக்குறளோடு ஒப்பிட்டு **குறளோவியம்** என்னும் தலைப்பில் சிலகட்டுரைகளை **தமிழக முன்னாள் முதல்வர். டாக்டர். கலைஞர். கருணாநிதி** அவர்கள் எழுதிவந்தார்கள். கல்லூரி நூலகம் சென்று அந்த வார இதழில் அந்த ஒரு கட்டுரையை மட்டும் படித்துவிட்டுச் செல்வேன். அந்த நினைவுகள் என்னைவிட்டு ஒருபோதும் மறையவில்லை. பல ஆண்டுகளுக்குப்பின்பு, திருக்குறளையும் விவிலியத்தையும் ஒப்பிட்டு நோக்கும்போது **விவிலியத்தில் குறளோவியம்** பற்றிய இந்த நூலை வடிவமைக்கும் எண்ணம் எனக்குள் உண்டானதில் வியப்பேதுமில்லை.

பொதுவாகவே, கிறிஸ்தவ மக்கள் நம் நாட்டு இலக்கியங்கள்மீது அத்தனை விருப்பு காண்பிப்பதில்லை. இவ்வெண்ணம் எவ்விதம் உருவாகி வலுப்பெற்றது என்று கூறஇயலவில்லை. மேலைநாட்டு அறிஞர்களான **ஜி.யு.போப், ராபர்ட் கால்டுவெல், வீரமாமுனிவர்** போன்ற மக்களெல்லாம் செந்தமிழ் இலக்கியங்களைக் கையிலெடுத்தபின். அவற்றை ஒருபோதும் கீழே வைக்க மனங்கொடாமல், செம்மொழி தமிழில் உள்ள இலக்கியங்களை ஆராய்வதும், அவைகுறித்து எழுதுவதுமே தாம் பெற்ற வாழ்வுப் பயன் என இறும்பூதெய்திருந்த நிலையில் இந்திய கிறித்தவ மக்கள் ஏன் தமிழ் இலக்கியங்களை அந்நிய காரியமாக எண்ணினார்கள் என்பது விந்தையிலும் விந்தையே! கிறிஸ்தவத்தில் பெந்தேகோஸ்தே இயக்கம் துவங்கிய பின்னரே கிறிஸ்தவ மக்களிடம் இந்த மனநிலை உண்டாயிருக்க வேண்டும் என்று என்னால் ஊகிக்க முடிகிறது.

இந்தியாவில் நற்செய்தி அறிவிக்கும் பணியில் நேர்ந்த சுணக்கத்திற்குக் காரணமே கிறிஸ்தவர்களிடம் நமது சொந்த இலக்கியங்கள்மீதும், நாம் ஊழியம் செய்யும் மக்களின் பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் குறித்த அறியாமையும் ஒவ்வாமையுமேயாகும்! ஆசியாக்கண்டத்திலுள்ள இரண்டு மிகப் பெரிய தேசங்கள் சீனாவும், இந்தியாவும். இந்திய தேசத்திற்குள் கிறிஸ்துவின் நற்செய்தி வந்து 2000 ஆண்டுகளாயிற்று. ஆனால் சீனாவில் கி.பி. 15-ம் நூற்றாண்டிற்குப் பின்னர் தான் கிறிஸ்தவம் நுழையலாயிற்று. அதிலும் 19-ம் நூற்றாண்டின் பின்பகுதியிலிருந்து தான் நற்செய்திப்பணி துரிதமாக நடந்தேறியது. இன்று ஆசியாக் கண்டத்திலேயே அதிகமான கிறிஸ்தவர்கள் வாழும் நாடு சீனா (சுமார் 6%) என ஆய்வுக்குறிப்புகள் கூறுகின்றன. அதிலும் குறிப்பாக 1948-ல் கம்யூனிச அரசு ஏற்படாமல் இருந்திருக்குமானால் இன்று குறைந்தது 50% ஆவது சீனாவில் கிறிஸ்தவர்கள் உருவாகியிருப்பார்கள். ஆப்பிரிக்க நாடுகளுக்குள் 18-ம் நூற்றாண்டிற்குப் பின்னரே கிறிஸ்தவம் சென்றாலும் அங்கு இன்று 50% க்கு மேல் கிறிஸ்தவர்கள் உள்ளார்கள். அங்கெல்லாம் நற்செய்தி அறிவிப்பில் காணப்பட்ட இந்த வெற்றிக்கு என்ன காரணம்? சீனாவிற்குள் சென்ற நற்செய்திப் பணியாளர் **ஹட்சன் டெய்லரின்** பணி குறித்த ஒரு விமர்சன வரி : "Tailor was a creative missionary who adopted, to the embarassment of other mission organizations, the dress and manners of the Chinese he was trying to convert. **Tailor's focus was on Evangelism...**" (Christian Faith by John Schwarz P.138). இந்தியாவிலே

இதற்கு எதிரிடையான வழிமுறையே பின்பற்றப்பட்டுவிட்டது. இந்திய கிறிஸ்தவர்கள் நமது மக்களின் கலாச்சாரம், பண்பாடு இவற்றை விட்டு, அத்தேனே பட்டணத்தில் வாழ்ந்த புறஇனத்தார் மத்தியில் பவுலடிகளார் செய்த ஊழிய வழிமுறைகளையும் அறியாது, கிறிஸ்தவம் என்றால் மேற்கத்தியக் கலாச்சாரம், பண்பாடு, மொழி, வாழ்க்கை நெறி என்னும் தோற்றத்தை உருவாக்கிவிட்டதே இந்தியாவில் எழுப்புதல் ஏற்படாவண்ணம், வெகு ஜனத்திற்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே மாபெரும் பகைஉணர்வும், வேற்றுமையுணர்வும் உண்டாகக் காரணமாயிற்று. இந்தியாவில் கிறிஸ்தவர் எண்ணிக்கை இன்று 2.3% குறைவு என்பதை மிகுந்த மனவேதனையுடன் குறிப்பிடுகிறேன். இங்கே, Dr. S. ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறுவதை உற்றுநோக்குதல் அவசியம், "The study of the sacred books of religions other than one's own is essential for speeding up this process. Students of Christian religion and theology, especially those who wish to make Indian Christian thought not merely 'geographically' but 'organically' Indian, should understand their great heritage which is contained in the Upanisads" ('An Anthology' - Radhakrishnan Reader, Bharatiya Vidhya Bhavan - (1990) P.208).

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பாராளுமன்றத்திலும், மாநில சபைகளிலும், கனடா நாட்டின் பாராளுமன்றத்திலும், இந்திய வழிமுறையிலான பக்திப்பாடல்கள் கொண்ட வழிபாடுகள் செய்யப்படுகின்றன. மேலைநாட்டவரெல்லாம் அவர்களுடைய பண்பாடு, கலாச்சாரத்தைக் காட்டிலும் நமது பண்பாடு கலாச்சாரம் உயர்ந்தது என அறிந்து இந்திய சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நிற்கின்றபோது, இந்திய கிறிஸ்தவமோ மேலைநாட்டு பண்பாடு கலாச்சாரத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு திரிவது கிறிஸ்தவ நற்செய்திப்பணியை பல நூற்றாண்டுகள் பின்னுக்குத் தள்ளிவிட்டது.

இயேசு கிறிஸ்துவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான தோமா அப்போஸ்தலர் கி.பி. முதல் நூற்றாண்டில் இந்தியாவில் வந்து செய்த 25 ஆண்டுகால ஆதி ஊழியத்தின் தாக்கத்தால் விளைந்தவையே நம்முடைய சொந்தமான அறுவகை சமயங்கள். அறுவகை சமயங்களுமே கிறிஸ்து இயேசுவின் அறுவகை லட்சணங்களின் பிரதிபலிப்பாகும்.

சமயம்	முழுமுதற்கடவுள்	இயேசுகிறிஸ்துவின் தன்மை
சைவம்	சிவபெருமான்	அன்பு
வைணவம்	விஷ்ணு	மீட்பு
சாக்தம்	சக்தி	வல்லமை
காணாபத்தியம்	கணபதி	பாவநிவர்த்தி
கௌமாரம்	முருகப்பெருமான்	வெற்றி
சௌரம்	அய்யப்பன்	ஜோதி, ஒளியாகிய முதல்வர்

இந்திய இலக்கியங்கள் அனைத்திலும் இறைவன் இயேசுகிறிஸ்து நீக்கமற நிறைந்து நிற்கும் பாங்கு விருப்புவெறுப்பற்ற நிலையில் ஆராய்ந்தால் புலனாகும். நமது இலக்கியங்களில் காணும் கிறிஸ்துவின் செய்திகளை சாத்தானின் செயல் என ஒருபுறம் கிறிஸ்தவர்கள் ஒதுக்கிவிட்ட நிலையில், என் இந்துமத சகோதரர்களோ அறியா வெறுப்பினால் அவர்களும் ஒதுக்கிவிட்டார்கள். இந்நிலையில் கிறிஸ்துவோ வாசலண்டை நின்று இருதிறத்தாரின் இதயக்கதவுகளையும் தட்டிக்கொண்டு வெளியே நிற்கிறார். இந்தக் கருத்தை Dr. S. இராதாகிருஷ்ணன் அவர்கள் எவ்வளவு அழகுபட எடுத்தியம்புகிறாரென்பது உற்றுணரத்தக்கது.

"When Christian theologians found many affinities and similarities between Christian and other religions, some of them imagined that they were the devices of the devil to ensnare men while **the more sensible treated them as praeparatio evangelica for Christianity"** (Ibid p.90 emphasis is mine)

தமிழகத்தின் சிறந்த அறிவர்களும், சிறந்த புரட்சியாளர்களுமான 'சித்தர்கள்' தாங்கள் சொல்ல வேண்டுமென்றிருந்த அநேக சத்தியங்களை, அப்போதிருந்த சூழ்நிலையில் வெளிப்படையாகப்பேச முடியாமல், சூட்சுமமாகவே எழுதிவிட்டுச் சென்றுள்ளார்கள். அவ்விதம் சொல்லப்பட்ட எண்ணிலடங்காத கவிகளுள் **பட்டினத்தாரின்** இரண்டு கவிகளுக்கு நேராக உங்களை அழைத்துச் செல்ல விரும்புகிறேன்.

நீற்றைப் புனைந்தென்ன? நீராடப் போயென்ன? நீ மனமே!
மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லை; மாமறைநூல்
ஏற்றிக் கிடக்கும் எழுகோடி மந்திரம் என்ன கண்டாய்?
ஆற்றில்கிடந்தும் துறையறியாமல் அலைகின்றையோ! (124)

முக்திநிலையடைய மனிதன் மறுபடியும் பிறக்க வேண்டும் (யோவான் 3:3). அவ்வாறு மறுபடியும் பிறக்கும் வகையறியாது செய்யும் எவ்விதமான மதசடங்குகளும், மந்திர உச்சரிப்புகளும் பிரயோஜனமற்றதே! இந்த மறுபடியும் பிறத்தல் என்பது (இரட்சிப்பு, மீட்பு) மனிதர்க்கு 'எட்டாக்கனி' என பட்டினத்தார் சுட்டுகின்றார். அப்படியானால் அதை எவ்விதம் பெறுவது? அடுத்த கவியில்,

ஓங்காரமாய் நின்ற வத்துவிலே ஒருவித்து வந்து
பாங்காய் முளைத்தபயன் அறிந்தால் பதினாலுலகும்
நீங்காமல் நீங்கிநிறையா நிறைந்து நிறையுருவாய்
ஆங்காரமானவர்க்கு எட்டாக் கனிவந்தமர்ந்திடுமே. (125)

(சித்தர்பாடல்கள், பாவை பப்ளிகேஷன்ஸ் - பக். 344)

ஓங்காரம் - கடவுள் ஆங்காரமானவர் - பாவமனிதர். மும்மூர்த்திக்கடவுளுள் (ஓம், ஆம்) ஒருவர் வந்து (குமரக்கடவுள்) அவர் சிறப்பாகச் செய்து முடித்த செயல் அறிந்தால் (மீட்பு) அந்த பாவமீட்பாகிய எட்டாக்கனி பாவமனிதர்மேல் வந்தமர்ந்து அவரை புனிதராக்கிடும். இவ்விதம் ஆழ்ந்தமர்ந்து விருப்புவெறுப்புகளகற்றி சத்தியத்தை அறிந்துணர முற்பட்டால் மதத்தின் பெயரால் இன்று காணப்படும் காழ்ப்புணர்ச்சியும் பகைமையும் மறைந்து மனிதநேயம் செழிப்புறும். தங்கள் சுயலாபம் கருதி புல்லறிவு படைத்த ஆரியர் ஆதிக் கிறிஸ்தவராகிய அறுவகை சமயத்தினருக்கும் நவீன ஐரோப்பிய வழிக் கிறிஸ்தவருமான திராவிட மக்களிடையே சண்டை சச்சரவுகளை உருவாக்கி அதனால் உருவாகும் நெருப்பின் ஜுவாலையில் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறார்கள். நமது அறுவகை திராவிட சமயங்களையும், சமீபத்தில் எழுந்த சமயக் கருத்துக்களுக்குமிடையே காணப்படும் ஒற்றுமைகளையும் சரிவரக்கண்டு கொண்டால் வேற்றுமைகள் மறந்து சகோதர அன்பில் திராவிட மக்களாய் இந்திய தேசத்தின் 90% மக்கள் அதாவது, சுமார் 110 கோடி மக்களை ஒன்றிணைத்து உலகிலேயே பலமான தேசமாக நமது தேசத்தை உருவாக்கலாம். **நம்மை வேறுபடுத்தி, நேயத்தை அழித்து நமது திராவிட இலக்கியங்கள் அனைத்திலும் இடைச்செருகல்கள் உண்டு பண்ணி அவைகளின் தூய்மையைக் கெடுத்து, இன்றும் திராவிட இனத்தையே அடிமை இனமாக மாற்றிக் கொண்டிருக்கும் ஆரியத்தின் நச்சுதனை அகற்றுவதே இன்றைய மிகப்பெரிய பணியாகும்.**

இந்நிலையிலேதான், தோமாவழி கிறிஸ்தவக் கையேடாகிய உலகப்பொதுமறை, செந்நாப்போதரின் 'திருக்குறள்' ஆதிக் கிறிஸ்தவத்திற்கும், நவீன ஐரோப்பிய வழி கிறிஸ்தவத்திற்குமிடையே பாலமாக நின்று இந்திய திராவிட மக்களனைவரையும் ஒருங்கிணைக்கிறது என்கிற சத்தியத்தைப் பறைசாற்றும் ஒரு முயற்சியாக இந்நூல் வெளிவருகிறது.

இந்நூலில் நான் எடுத்தாண்டுள்ள குறள்களுக்கு மக்கள் இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையில் பொருள் தர முயன்றுள்ளேன். திருச்சபைகளிலும், சிறிய குழுக்கூடுகைகள்,

குடும்ப வழிபாடுகளிலும் கிறிஸ்தவர்களுக்கானதொரு தியான, வழிபாட்டுக் கையேடாக திருவிவிலியத்தையும், திருக்குறளையும் ஒப்பிட்டு நோக்கதக்கதாக இந்நூல் விளங்க வேண்டுமென்பதே என் இதய விருப்பம்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள அய்யா திரு. சுந்தர் யேசுவடியான், நிறுவனர், அனாரிய சமாஜ் ஊழியங்கள் அவர்களுக்கும், இந்நூலினை நான் எழுதிவந்த காலத்தில் எல்லா நிலையிலும் எனக்கு உதவியாயிருந்த என் துணைவியார் திருமதி. C. தேவகிருபைதனம் அவர்களுக்கும், புத்தக அட்டையினை வடிவமைப்பதில் உதவின எங்கள் மகன் திரு. தியாப்பிலஸ் A.S. இராஜையா அவர்களுக்கும், நூலை நேர்த்தியாக அச்சு செய்து உதவிய சங்கரன்கோவில் ஸ்ரீ ஜெயம் ஆப்செட் அச்சக நிறுவனத்தாருக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சிறுநூலை என் இந்திய தேச சகோதர சகோதரிகள் அனைவரின் சகோதர அன்பின் எழுச்சிக்கும், மனிதநேயத்தின் அரவணைப்பிற்கும், சத்தியத்தின் புரிந்து கொள்தலுக்கும் ஒரு சிறிய கருவியாக எல்லாம் வல்ல இறைவனின் பாதத்திற்கு சமர்ப்பணம் செய்கிறேன்.

இடம் : குவளைக்கண்ணி

நாள் : 1-11-2014

தங்கள் அன்புள்ள சகோதரன்,

(R. தனராஜ்)

கைபேசி : 98428 88929

பொருளடக்கம்

அணிந்துரை

அறிமுகஉரை

அத்தியாயங்கள்

பக்கம்

பாயிரம்

1.	விவிலியமும் குறளும் உலகிற்கு வழங்கும் செய்தி	1
2.	விசும்பின் துளி - வானத்தின் ஒரு மழைத்துளி	4
3.	ஆன்மாவிற்கு இறைவனே உணவும் நீருமாவான்	5
4.	ஐந்து அவித்தான் ஆற்றல்	7

அறம்

1.	மனத்துக்கண் மாசு இலன் ஆதல்	8
2.	பண்பும் பயனுமுடைய இல்வாழ்க்கை	9
3.	மனைமாட்சி இல்லாள் கண்	10
4.	அவள்தான் சோர்விலாள் பெண்	12
5.	மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி	14
6.	அன்பு ஈனும் நட்பு	15
7.	அன்பின் வழியது உயிர்நிலை	17
8.	விருந்தின் வேள்விப்பயன் - உபசரிப்பின் பலன்	18
9.	இனிய உளவாக இன்னாத கூறல்	20
10.	உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு	21
11.	ஒரு பால் கோடாமை சான்றோர்க்கு அணி	23
12.	அடக்கம் அமரருள் உய்க்கும்	25
13.	யாகாவாராயினும் நாகாக்க	27
14.	ஒழுக்கம் உயிரினும் மேலானது	29
15.	விளியாது நிற்கும் பழி / அழியாது நிற்கும் குற்றம்	31
16.	இகழ்வார்ப் பொறுத்தல் தலை	34
17.	அழுக்காறு இலாத இயல்பு	35
18.	நடுவின்றி நன்பொருள் வெஃகின்	38
19.	புறங்கூறான் என்றல் இனிது	39
20.	சொல்லற்க பயனிலாச் சொல்	42

அத்தியாயங்கள்

பக்கம்

21. தீய பயக்கும் தீயவை	44
22. ஒத்த தறிவான் உயிர் வாழ்வான்	47
23. அற்றார் அழிபசி தீர்த்தல்	49
24. ஈதல் இசைபட வாழ்தல்	51
25. புகழொடு தோன்றுக	52
26. பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள	54
27. இல்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை	56
28. மாமிசம் உண்ணாதிருத்தல்	58
29. தவம்	60
30. தன்னுயிர் தானறப் பெற்றான்	62
31. தன்நெஞ்சம் தானறிகுற்றம்	65
32. நெஞ்சில் துறவார்	66
33. கள்ளாமை காக்கத்தன் நெஞ்சு	68
34. பொய்மையும் வாய்மையிடத்த	71
35. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்	74
36. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க	75
37. மாசற்றார் கோள்	76
38. இன்னா செய்தாரை ஒறுத்தல்	78
39. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்	81
40. புல்லறிவாண்மை	83
41. இன்மை உடைமை	86
42. மெய் உணர்தல்	87
43. தூய்மை என்பது அவாவின்மை	90
44. ஊழிற் பெருவலியாவுள	93

விவிலியத்தில் குறளோவியம்

(பாயிரம்)

1. திருவிவிலியமும் திருக்குறளும் உலகிற்கு வழங்கும் செய்தி

1. துவக்கத்தில் இறைவன் விண்ணுலகமும் மண்ணுலகுமாகிய முழு உலகையும் படைத்தார் (ஆதியாகமம் 1:1).

"**ஆதிபகவன் முதற்றே உலகு**" - ஆதியிலே இறைவன் வானம் பூமியாகிய உலகைப் படைத்தார் என்னும் விவிலியத்தின் துவக்க வார்த்தைகளையே திருவள்ளுவரும் கூறுகின்றார் (திருக்குறள் 1:1).

2. கடவுள் சர்வ ஞானமும் அறிவும் உடையவராதலால் படைக்கும் போது அனைத்தையும் செம்மையாய் படைத்தார் (பிரசங்கி 7:29).

திருவள்ளுவரும் கடவுளை "**வாலறிவன்**" எனக் கூறுவதால், அந்த சகல ஞானம், அறிவு படைத்த இறைவன் மனிதன் உட்பட சகலவற்றையும் செம்மையாய்ப் படைத்தார் என உணர்த்துகின்றார் (திருக்குறள் 1:2).

3. செம்மையாக உருவாக்கப்பட்ட மனிதன் செய்த பாவம் அவனைத் தாங்கக் கூடாத துன்பத்தினுள் அமிழ்த்திப்போட்டது. அந்த பாவப்பாரம் அவனால் தாங்கக் கூடாத பாரமாகி, தண்டனைக்குட்பட்டு கிடக்கிறான் (சங்கீதம் 38:1-10).

திருக்குறளிலும், வாலறிவனான அந்த ஞானம் படைத்த இறைவனால் உருவாக்கப்பட்ட மனிதனுக்குள் துன்பமும், வேதனையுமாகிய '**இடும்பை**' வந்து சேர்ந்தது (திருக்குறள் 1:4) என திருவள்ளுவர் உணர்த்துகிறார்.

4. மனிதனின் பாவத்தை விவிலியம் இரண்டு வகையாகப் பிரிக்கிறது. அதை, **ஜன்மபாவம்** - "இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (சங்கீதம் 51:5) என்றும், **கர்ம பாவம் - நான் செய்த பாவம்** - "என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன், என்பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது" (சங்கீதம் 51:3) என்றும் விவிலியம் கூறுகிறது.

இதையே திருவள்ளுவரும் "**இருள்சேர் இருவினை**" என்றுரைக்கிறார். பாவத்தைச் சேர்க்கின்ற அல்லது கூட்டுகின்ற இரண்டு வகை என்பது பொருள் (திருக்குறள் 1:5).

5. திருவிவிலியத்தின் ஒரே பாரம், நோக்கம் என்னவெனில், இந்த இருவகைப் பாவத்தில் உழன்று கிடக்கும் மனிதனை மீட்டு,

அவன் இழந்த மகிமையை அவனுக்கு ஈந்து, மீண்டும் மனிதனைத் தம்முடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்கிற இறைவனின் விருப்பம் நிறைவேற்றப்படுதலே! இதற்காக இறைவனிடமிருந்து வந்த பரம் பொருளாகிய மெய்ப்பொருளைக் கண்டு கொள்வதே! "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நீடு வாழ்வு" (யோவான் 17:3) என விவிலியம் உரைக்கிறது.

இதையே திருவள்ளுவரும்,

"**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (திருக்குறள் 1:5)

மனிதனிடம் பாவத்தைச் சேர்க்கும் இந்த இருவகைப் பாவங்களிலிருந்தும் விடுபட இறைவனிடமிருந்து வந்த பொருளை, அவர் அனுப்பிய மெய்ப்பொருளை அடைந்து கொள்வதே என்பதாகும்.

6. இறைவன் இந்த மீட்பை எப்படி உண்டாக்கினார்? இறைவனிடமிருந்து வந்த பரம்பொருளாகிய இயேசு கிறிஸ்துவின் "**இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது**" (எபேசியர் 1:7; கொலோசெயர் 1:14).

"அவர் (இயேசு) சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை (மீட்பை) உண்டாக்கி... அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் (தம்மிடம் சேர்த்துக் கொள்ள) அவருக்குப் (இறைவனுக்கு) பிரியமாயிற்று (கொலோசெயர் 1:20). அப்போஸ்தலர் பேதுரு மூலமாயும் இந்தச் சத்தியமே வலியுறுத்தப்படுகிறது. "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் (இயேசு) தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1 பேதுரு 2:24).

இந்தச் சத்தியமே திருவள்ளுவரால் மிக ஆணித்தரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

"**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
நெறிநின்றார் நீடுவாழ் வார்" (திருக்குறள் 1:6).

"பொறி" என்றால் உயிரைப் பறிக்கும் ஒரு சாதனம், கண்ணி என்றும் சொல்வார்கள். அன்று ரோமானியர் உலகின் பெரும் பகுதியை ஆண்டு கொண்டிருந்தபோது மரண தண்டனைக்கு, மனிதனின் உயிரைப் பறிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பொறி தான் **சிலுவை** என்றழைக்கப்படுகிறது.

சிலுவையாகிய பொறியில், உயிரைப் பறிக்கும் மரண சாதனத்தில் தமது ஐந்து புலன்களையும் (மனிதன், மெய், வாய், கண்,

மூக்கு, செவி என்கிற ஐந்து புலன்களால் ஆனவன்) பலியாக்கிப் போட்டவர் (அவித்தான் என்றால் பலியாக்கினான்) காட்டும் நெறியில், வழியில் நிற்போர் நீடு வாழ்வு பெறுவர் என்றுரைக்கிறார். இறைவன் இயேசுவாகிய குமரக்கடவுள் அன்று சுமந்து சென்ற சிலுவையையே இன்று நம் மக்கள் 'காவடி' (காவு தடி - உயிரைப் பறிக்கும் தடி - சிலுவை) என்று குமரக்கடவுளாகிய முருகப் பெருமானின் கோவில்களுக்கு மட்டும் எடுத்துச் செல்கின்றனர்.

7. தன்னைத் தந்து என்னைத் தடுத்தாட்கொள்ள, அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்க வந்த, பொறிவாயில் ஐந்தவித்தானாகிய குமரக்கடவுள் இயேசுவை மனிதர்களின் **இருதயமாகிய மலரில் வாசம் செய்பவன்** (திருக்குறள் 1:3, நீதிமொழிகள் 23:26) என்றும், **தனக்குவமை இல்லாதான்** என்றும் **அறவாழி அந்தணன்** (சகல ஒழுக்கத்தின் தலைவன்) என்றும் எண்குணத்தான் என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார் (திருக்குறள் 1:7,8,9).

இறைவனின் எட்டு லட்சணங்கள் என்னவென்பதையே இன்றும் இறையியல் மாணவர்கள் முதலாவது கற்கின்றனர். இறைவன்,

1. சர்வ வல்லவர் (Omni - Potent)
2. சர்வ ஞானம் படைத்தவர் (Omni - Scient)
3. சர்வ வியாபகர் (Omni - Present)
4. பரிசுத்தர் (Holy)
5. அன்புள்ளவர் (Loving)
6. நீதிபரர் (Righteous)
7. மாறாதவர் (Immutable)
8. நித்தியர் (Eternal)

இந்த எட்டு லட்சணங்களையுடைய இறைவனின் வழிகளைக் கைக்கொண்டு நடப்போர் பிறவியாகிய பெருங்கடலைத் தாண்டி இறைவனின் மகிமையை அடைவர்.

திருவிவிலியம் : "வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக, ஆமென்." (யூதா.24-25).

திருக்குறள் : **"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
இறைவனடி சேராதார்" (1:10).

மேலும் சிந்தனைக்கு : இறைவன் மனிதனை மீட்ட விதம் :

“ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு
அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே.”

(சிவஞானபோதம் 8-ம் சூத்திரம்)

ஐம்புலன்களாகிய வேடரின் நடுவே சிக்குண்டு, தான்யார் என்பதை அறியாத நிலையில் மயங்கி நிற்கும் மனித ஆன்மாவிற்கு, தாம் சிலுவையில் பட்டபாடுகள், பலியின் வழியாக ஆன்மாவை அதன் மயக்க நிலையிலிருந்து விடுவித்து இறைவன் தம்முடன் இணைத்துக் கொண்டார் என்பது.

இறைவனின் எட்டு லட்சணங்கள் :

“ஆதியந்த மில்லாதான் மாறாதான் சர்வ வல்லோன்
ஏதுமறிந்தோன் அளவிலா ஞானன் ஓத
வெங்கு நிறைந்தோன் பரிசுத்தன் கூர்நீதன்
நல்கிருபையான நமலன்”

(N.J.S. சிவசுந்தரம் அவர்களின் முக்தி வழி, பக்.340 காண்க)

2. விசும்பின் துளி – வானத்தின் ஒரு மழைத்துளி

லூக்கா 19:1-9 திருக்குறள் : வான் சிறப்பு (2)

எரிகோ என்னும் மாபெரும் பட்டணம். அங்கே சகேயு என்னும் ஒரு மனிதன். ரோமைய சாம்ராஜ்யத்தின் ஆயத்துறை என்றழைக்கப் படும் வரி வசூலிப்புத்துறை அதிகாரியாக விளங்கிய மனிதன். பல தவறான வழிகளில் அளவுக்கு அதிகமாக செல்வமீட்டி மிக ஆடம்பர வாழ்வு வாழ்ந்த மனிதன். எவ்வளவுதான் செல்வங்களிருப்பினும் மனதில் மகிழ்ச்சியும், நிம்மதியும், அமைதியும் இல்லையெனில் அவனிலும் வறியவன் வேறுயாருமில்லை. இதுவே இந்த மனிதனின் நிலை.

நாளொன்று வந்தது. அவன் வாழ்ந்த பட்டணத்தின் ஊடே ஈசன் சென்றார். அவரைக் குறித்து அவன் ஏற்கனவே கேள்வியுற்றிருந்ததால் இந்த ஈசன் எப்படிப்பட்டவரோ எனப் பார்க்க அவனுக்கு மிகுந்த ஆசை. அவன் குள்ளனாக இருந்த படியால் மக்கள் திரளுக்குள் அவரைக் காண இயலவில்லை. ஓடினான், வழியிலே நின்ற ஒரு மரத்தின் மேல் ஏறி அமர்ந்தான். இறைவனும் அவ்வழியே வந்து அவனை நோக்கிப் பார்த்தார், அவ்வளவு தான் அந்த ஒரு பார்வையிலிருந்து கனிந்து வந்த அருள் அந்த மனிதனின் வாழ்வை அடியோடு மாற்றிவிட்டது.

இது வரையிலும் வறண்டு கிடந்த அவன் உள்ளத்தில் ஒரு புதிய ஜீவன், வாழ்வு துளிர்த்தது. இறைவனின் அந்த ஒரு பார்வை அவனுக்கு வேண்டிய மகிழ்ச்சி, நிம்மதி, நம்பிக்கை அனைத்தையும் அவனில் துளிர்க்கச் செய்தது (லூக்கா 19:1-10).

இதையே திருவள்ளுவரும்,

விசும்பின் துளி வீழின் அல்லால் மற்றாங்கே
பசும்புல் தலைகாண்ப தரிது (திருக்குறள் 2:6) என்றார்.

வறண்டு கிடக்கும் நிலத்தின் மீது வானத்திலிருந்து ஒரு மழைத் துளி வீழாவிட்டால் அங்கே பசும் புற்கள் துளிர்க்காது என்பதாகும். அதுபோல மகிழ்ச்சி, நம்பிக்கை, நிம்மதி இவையின்றி வறண்டு கிடக்கின்ற உள்ளத்தில் இறைவனுடைய ஆவியின் அருள் ஒரு துளி இறங்கும் வரை அந்த உள்ளத்தில் எவ்வித நம்பிக்கையும் துளிர்க்காது. ஈசனின் மலரடியே மனித உள்ளத்திற்கு வேண்டிய வாழ்வுச் சிறப்புகளைத் தரும் எனக் கொள்தல் தகும்.

மேலும் சிந்தனைக்கு :

"அன்பினால் யாக்கை ஏற்ற ஐயனே! போற்றி போற்றி
மன்பதை பாவந்தீர்க்க மரித்தவா! போற்றி போற்றி
இன்புற உயிர்த்தெழுந்த ஈசனே! போற்றி போற்றி
என் பிழை பொறுக்கும் ஏசு எந்தையே! போற்றி போற்றி"

(திரு.வி.க. அவர்களின் "கிறிஸ்துவின் அருள்வேட்டல்" - சிலவரிகள்)

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கை போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே"

(திருநாவுக்கரசர் (அப்பர் அடிகளார்) அவர்களின் தேவாரம் 884-ம் பாடல்)

3. ஆன்மாவிற்கு இறைவனே உணவும் நீருமாவான்

யோவான் 6:51-55 திருக்குறள் : வான் சிறப்பு (2)

ஈசன் அவதார புருடனாக இவ்வுலகில் உலாவித் திரிந்தபோது மனுமக்களுக்கு தம்மையே உணவு என்றும் அவர்கள் பருகுவதற்கான தண்ணீர் எனவும் கூறி நின்றார். "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே... எனது சரீரம் உண்மையான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம் (நீர்)" (யோவான் 6:51,55).

திருக்குறளின் முதல் மூன்று அத்தியாயங்கள் பாயிரம் என்றழைக்கப்படுகிறது. அதில் திருவள்ளுவர் தமது இறையியல் உண்மைகளை எடுத்துரைக்கிறார். இறைவனை "இயல்புடைய மூவர்"

(திருக்குறள் 5:1) என்று கூறும் திருவள்ளுவர் முதல் மூன்று அத்தியாயங்களில் அந்த இயல்புடைய மூவராகிய மும்மூர்த்திகளை (திரித்துவம்) கடவுள் (தந்தை), வான் (ஆவி), நீத்தார் (குமரன்) என்னும் சொற்களால் சுட்டுகிறார். தூய ஆவியாகிய கடவுளை வானிலிருந்து இறங்கும் மழைக்கு ஒப்பனையாகக் கூறுகிறார். விவிலியம் தூய ஆவியை வான்மழை என்றே குறிப்பிடுகிறது. "... அவர் (தூய ஆவி) மழையைப் போலவும், பூமியின் மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார்" (ஓசியா 6:3).

இந்த ஒப்பற்ற உண்மையையே செந்நாப் போதரும்

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரல் பாற்று (திருக்குறள் 2:1)

என்றுரைக்கிறார். உலகிற்கு மழை எவ்விதமோ அவ்விதமே ஆன்மாவிற்கு இறைவன் எனப் பொருள் கொள்தல் சிறப்பு.

இறைவனிடமிருந்து இறங்கும் தூய ஆவியால் ஒரு ஆன்மா செழிப்படையும் போது, அவனுள் உறையும் தூய ஆவியால் பிற ஆன்மாக்களும் உணவு பெற இயலும்.

இந்தப் பேருண்மையையே திருவள்ளுவரும்,

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு
துப்பாய தூவும் மழை" எனக் குறிப்பிட்டார் (திருக்குறள் 2:2).

வாழ்வுணவு தேவைப்படும் ஆன்மாவிற்கு வான்மழையாகிய இறைவனின் ஆவி உணவாகுவதுமன்றி, அந்த ஆன்மா மூலம் உணவு தேவையுள்ள பிற ஆன்மாக்களுக்கும் உணவாக விளங்குவார்.

மேலும் சிந்தனைக்கு :

M.A. வெங்கடகிருஷ்ணன், "இறைவனை அறிந்து கொண்ட மனிதன் உணவை அனுபவிப்பவன்"

('தைத்திரிய உபநிடதம்' சொற்பொழிவு The Hindu 30-11-2013)

"உணவே பிரம்மன். இந்த உணவாலேயே ஜீவராசிகள் உருவாகின்றன. அவை வாழ்வதும் உணவாலேயே, இவ்வுலகை விட்டுப் பிரியும் போது அந்த உணவிடமே சேர்ந்து விடுகிறது"

"From food, verily, are produced whatsoever creatures dwell on the earth. Then by food alone, they live. And then into it also they pass at the end."

(Upanisads by T.M.P. Mahadevan மோதிலால் பனார்சிதாஸ் பப்ளிஷர்ஸ். பக்.109-112) - தமிழாக்கம் என்னுடையது.

4. ஐந்து அவித்தான் ஆற்றல்

(ஐந்து புலன்களையும் பலியாக்கியவனின் மாபெரும் செயல்பாடு)

மத்தேயு 28:1-7 திருக்குறள் : நீத்தார் பெருமை (3)

ஈசன் (இயேசு) என்னும் குமரக்கடவுள் மனிதனை பாவசாபங்களிலிருந்து மீட்டு, விடுவித்து, வாழ்வளிக்கவே விண்ணுலகை விட்டு மண்ணுலகம் வந்தார் என்பது விவிலியத்தின் மையப்பொருள். அவ்வாறு அவதாரம்கொண்டு வந்த குமரக்கடவுள் தம்மை சிலுவை என்னும் பொறியில் பலியாக்கிப் போட்டதினால், அவரிடமிருந்து வழிந்த பரிசுத்த தூய இரத்தம் அவர் மீது நம்பிக்கை கொண்ட மனிதர்களை பாவ சாபங்களிலிருந்து விடுதலையாக்குகிறது. தம்மை பலியாக்கிய குமரக்கடவுளாம் ஈசனை சிலுவையிலிருந்து இறக்கி கல்லறை ஒன்றில் அடக்கம் செய்தனர். ஆனால், உலக வரலாற்றில் முதல் முறையாக அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்ட மூன்றாம் நாளில் கல்லறை திறந்திட உயிரோடு எழும்பிய அவருடைய ஆற்றல், செயல்பாடு தான் அனைத்து செயல்களிலும் வல்லமை படைத்தது. அவர் கல்லறை விட்டு எழுந்தார் என்பதற்கு தேவ தூதர்களின் தலைவனே சாட்சியம் கூறினான் (மத்தேயு 28:1-7) என விவிலியம் உரைக்கிறது.

தெய்வப்புலவரும் இக்கூற்றினையே வியந்து உரைக்கிறார்.

ஐந்து அவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும் கரி. (திருக்குறள் 3:5)

தமது ஐந்து புலன்களையும் மனுமக்களுக்காகப் பலியாக்கிப் போட்டவர் உயிரோடெழுந்த அவர்தம் ஆற்றல், செயல்பாட்டிற்கு விண்ணிலுள்ள தேவ தூதர்களின் தலைவனே (இந்திரன்) சாட்சியம் கூறினான் என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

"ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்து யிர்த்தனன் நாள்ஒரு மூன்றில்
நேசமா மரியா மக்த லேநா
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்."

(மகாகவி பாரதியார் கவிதைகள் - இந்து பப்ளிகேஷன்ஸ் பக்.229)

அறம்

1. மனத்துக்கண் மாசு இலன் ஆதல்

(மனதில் குற்றமில்லாதிருத்தல்)

லூக்கா 18:10-14 திருக்குறள் : அறன் வலியுறுத்தல் (4)

ஒரு நாள் தேவாலயத்தின் வாசலண்டை இரண்டு மனிதர்கள் வந்தனர். அதில் ஒருவன் மதத்தலைவன்; மதரீதியான சடங்குகளை மிகச் சரியாக அனுசரிப்பவன். மற்றவர்கள் பார்த்து எவ்விதத்திலும் குற்றம் காணக்கூடாத நிலையில் மத அனுசாரங்களில் ஊறிப்போன மனிதன். மற்றவனோ அரசாங்க வரிவசூலிப்புத் துறையில் பணி செய்பவன். வரிவசூலிப்பவன் என்றாலே மக்களால் தவறாகவே பார்க்கத் தக்கவன். முந்தினவன் மிக வேகமாக தேவாலயத்தின் கர்ப்பக்கிரகம் வரை சென்று இறைவனிடம் கூறினான் : “கடவுளே, நான் கொள்ளையர், நேர்மையற்றோர், விபச்சாரர் போன்ற மற்ற மக்களைப் போலவோ, இந்த வரி வசூலிப்பவரைப் போலவோ இல்லை; வாரத்தில் இருமுறை நோன்பிருக்கிறேன்; என் வருவாயில் எல்லாம் பத்தில் ஒன்றை உமக்குக் கொடுக்கிறேன்...” என்றவாறு சத்தமிட்டுக் கூறிக் கொண்டிருந்தார்.

ஆனால், வரி வசூலிப்பவரோ தொலைவில் நின்று கொண்டு வானத்தை அண்ணாந்து பார்க்கக் கூடத் துணியாமல் தம் மார்பில் அடித்துக் கொண்டு, “கடவுளே, பாவியாகிய என் மீது இறங்கும்” என்று கெஞ்சினார். இறைவன் இருவருடைய உள்ளங்களையும் உற்று நோக்கினார். முந்தினவன் வெளிப்படையாக பார்வைக்கு நல்லவன் போல் தோன்றினாலும் அவன் மனமோ மேட்டிமை, திமிர், சுயநீதி, மற்றோரைக் குற்றப்படுத்துதல் போன்ற அழுக்குகளால் நிறைந்திருந்தது. பிந்தினவரோ பார்வைக்குப் பாவியாக நினைக்கத் தோன்றினும், மனதில் இறைபக்தியும், அன்பும், எளிமையும் கொண்டவராக விளங்கினார். எனவே, அந்த மதத் தலைவர் அல்ல, இந்த வரி வசூலிப்பவரே இறைநீதி பெற்றவராக இல்லம் திரும்பினார் (லூக்கா 18:9-14).

இந்த செய்திகளையே ‘அறன் வலியுறுத்தல்’ என்னும் அத்தியாயத்தில் திருவள்ளுவர் இவ்விதம் கூறுகிறார்.

மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற. (திருக்குறள் 4:4)

மனதில் குற்றமற்று விளங்குவதே சிறந்த நீதியாகும்!

மேலும் சிந்தனைக்கு :

“நீற்றைப் புனைந்தென்ன? நீராடப் போயென்ன? நீ மனமே!
மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லை; மாமறை நூல்
ஏற்றிக் கிடக்கும் எழுகோடி மந்திரம் என்ன கண்டாய்?
ஆற்றில் கிடந்தும் துறையறியாமல் அலைகின்றையோ!”

(பட்டினத்தார் பாடல்கள் பக்.344 - சித்தர் பாடல்கள் - பாவை பப்ளிகேஷன்ஸ்)

2. பண்பும் பயனுமுடைய இல்வாழ்க்கை

11 ராஜாக்கள் 4:8-37 திருக்குறள் : இல்வாழ்க்கை (5)

சூனேம் என்னும் ஒரு பட்டணம். அதில் மரியாதைக்குரிய ஒரு பெண். தன் மனைவியிடம் அன்பும் ஆதரவும் கொண்ட ஒரு கணவன். தன் கணவனுடைய சகல நம்பிக்கைக்கும் பாத்திரமாக விளங்கியவளாக அந்த மனைவி. திருமணமாகி சில வருடங்களாகியிருந்தும் பிள்ளைப்பேறற்றவராக இருந்தனர். இருப்பினும் அவர்கள் வாழ்வில் அன்புக்கும் தாழ்ச்சியில்லை; பண்புக்கும் குறைவில்லை.

ஒருவருக்கொருவர் காண்பித்த பரஸ்பர அன்பிற்கு இதோ ஒரு உதாரணம். எலிசா என்னும் பேர் கொண்ட இறைத் தொண்டர் ஒருவர் அந்தப்பட்டணத்திற்கு அடிக்கடி வந்து இறைப்பணியாற்றிச் செல்வார். அந்த இறைத் தொண்டரை கூர்ந்து கவனித்த ‘சூனேமியாள்’ தன் கணவனைப் பார்த்துக் கூறுவாள், ஐயனே, நமது ஊருக்கு அடிக்கடி வந்து இறைப்பணியாற்றும் இந்த ஊழியரைக் கண்டால் அவர் ஒரு இறைவாக்கினர் எனக் காண்கிறேன். எனவே, அவர் வந்துபோகும் நேரங்களில் அவர் சற்று இளைப்பாறும்படி நமது வீட்டின் மேலறையை அவருக்கு ஆயத்தம்செய்து தரலாமே என்றாள். கணவனோ அதற்கு எவ்வித மறுப்பு மொழியுமுரைக்காமல் அதற்கு ஒப்புக் கொள்ளும் பாங்கு அந்த தம்பதியினரிடம் விளங்கிய ஏக மனதிற்கு எடுத்துக் காட்டானது.

இந்த உபசரிப்புகளினிமித்தம் இறைவனின் பார்வையில் தயவு பெற்று ஒரு உற்பவ காலத்தில் குமாரன் ஒருவனைப் பெற்றெடுக்கின்றனர்.

ஒரு சமயம் தன் கணவன் வீட்டிலில்லாத போது, இறைவாக்கினரும் வேறொரு தலத்தில் இருந்தபோது திடீரென அவர்களின் மகன் மரித்துப்போகிறான். தன் கணவனிடம் கூட இன்னதென்று கூறாமல் தான் இறைவாக்கினரை உடனே பார்க்கவேண்டும்; தனக்கு பிரயாண ஏற்பாடுகளை செய்து தரும்படி கூற, அவள் கணவனும் எவ்வித மறுமொழியுமின்றி அவள் விருப்பத்தை நிறைவேற்ற, இறைவாக்கினரின் வேண்டுதலால் பிள்ளை மீண்டும் உயிர் பெறுகிறான். அவர்களுடைய வாழ்வில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு

அளவேது! எந்த சூழ்நிலையிலும் கணவன் மனைவி இருவரிடம் பரஸ்பர அன்பும், ஒழுக்கமும், நம்பிக்கையும் காணப்படுமாயின் அதுவே இன்பமான இல்லற வாழ்க்கையாக அமைந்து விடும். அந்த சூனேம் ஊர் தம்பதியினரால் வாழ்ந்து காட்டப்பட்ட குடும்ப வாழ்வின் சூத்திரமே திருவள்ளுவரால் இவ்விதம் சொல்லப்படுகிறது.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (திருக்குறள் 5:5)

அன்பிலும், ஒழுக்கத்திலுமே குடும்ப வாழ்வின் சிறப்புள்ளது.

மேலும் சிந்தனைக்கு :

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று. (திருக்குறள் 5:9)

பிறரால் குற்றம் சாட்டப்படாத ஒழுக்கம் நிறைந்ததே குடும்ப வாழ்வு.

"அன்பனே அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன்தானே
முன்பெரு நிதியம் ஏந்தி மொழி வழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க என்றே அருள்செய்தான் எவர்க்கும் மிக்கான்"

தங்களிடம் ஒன்றுமில்லாதிருந்த நிலையிலும், கணவனும் மனைவியும் ஒன்றிணைந்து செய்த சேவையால் மகிழ்வுற்ற இறைவன் அவ்விருவருக்கும் வீடு பேற்றினை அருளிச் செய்த நிலையின் விளக்கம்.

(சேக்கிழார் பெருமானின் 'பெரிய புராணம்' - வர்த்தமானன் பதிப்பக வெளியீடு - இளையான்குடி மாறநாயனார் புராணம் தொகுதி 19- பக் 259. பாடல் எண் 465.)

3. மனைமாட்சி இல்லாள்கண்

(குடும்பத்தலைவியின் பண்பு)

2 சாமுவேல் 6:12-23 திருக்குறள் : வாழ்க்கைத் துணைநலம் (6)

மீகாள் - இஸ்ரேல் தேசத்தின் முதல் ராஜாவாகிய சவுலின் மகள். தாவீதோ ஓர் இடைச்சிறுவன். தகப்பனுடைய கொஞ்சம் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த மனிதன். ராஜாவின் மகளுக்கும் இடைச்சிறுவனான தாவீதுக்கும் திருமணம். இப்போது அவன் சிறுவனல்ல; அழகும் இளமையும் பொருந்திய வாலிபன். எவ்விதம் இவன் ராஜாவுக்கு மருமகனானான்? அது ஒரு மிகப்பெரிய வீர வரலாறு! கோலியாத் என்னும் மாபெரும் இராட்சதன், அரக்கன். அவனைக் கண்டு சவுல் ராஜாவும், அவன் சேனைகளும் கதிகலங்கி, அரண்டு மிரண்டு நின்ற நேரம்; தாவீது இறையாவியின் உந்துதலால் அவனை எதிர்த்துச்

சென்று, தன் கையிலிருந்த கவண் கல்லினால் அந்த பெலிஸ்திய வீரனைக் கொன்று போடுகிறான். அந்த அரக்கனை எவன் கொல்கிறானோ அவனுக்கு என் மகள் மனைவியாவாள் என்று ஏற்கனவே ராஜா பிரகடனப்படுத்தியிருந்த படியால், அவ்வாறே கோலியாத்தை வீழ்த்திய தாவீதுக்கு ராஜாவின் மகள் மீகாள் மனைவியாகிறாள். இஸ்ரவேலிலே புகழ்பெற்ற, தேசமே உயர்த்திப்பிடித்த ஒரு மாபெரும் வீரன் தாவீது! இப்போது ராஜாவின் படைத்தலைவன்! ராஜாவின் மகள் மீகாள் - செல்வப்பெருக்கு, அளவிடற்கரிய ஏவலர் கூட்டம், ஆணைக்காகக் காத்து நிற்கும் பணிப் பெண்கள். இப்படி வாழ்விற்குத் தேவையான அனைத்தும் குறைவின்றி காணப்படும் வசதிகள். அற்புதமாக நடந்தேற வேண்டிய இவர்களின் வாழ்க்கை ஒரு சோகக்கதையாக முடிந்து போயிற்று! அதற்கு என்ன காரணம் என நோக்கினால், மனைவியாக, கணவனுக்கு உற்ற துணையாக, தன்னைக் கொண்டவனின் மனமறிந்து நடக்கின்ற வாழ்க்கைத் துணை நலத்தின் இந்த சிறப்புகளறியாமல் வாழ்ந்த மீகாளின் நடத்தையே அவர்களுக்குள் பெரும் மனப்பிளவை ஏற்படுத்திவிட்டது.

இறைவன் பால் தன் கணவனுக்கு இருந்த பக்தியைப் போற்றும் அறிவில்லை! புகழும் துணிவில்லை! மாறாக பழித்தும் இழித்தும் பேசியதன் விளைவு இறைவனிடமிருந்து புறப்பட்டு வந்த சாபம் அவர்களை மக்கள்பேறற்றவர்களாக மாற்றிவிட்டது. வாழ்க்கை சோபிக்கவில்லை. இறுதியில் பல தீமைகள் வாழ்வில் நிகழ்ந்து விட்டன. எனவே, வாழ்வில் பெண்களிடம் காணப்படவேண்டிய நல்லொழுக்கங்கள் காணப்படாவிட்டால் அவர்களுடைய வாழ்வில் எத்தனை செல்வமும், பெருக்கமும், வளமும் பெற்றிருந்தாலும் அதனால் ஒரு சிறப்பும் உண்டாகாது; குடும்பம் நிலை நிற்காது என்பதை ஒவ்வொரு குடும்பத் தலைவியும் அறிந்து கொள்தல் வேண்டும். இதையே விவிலியம்; "குணசாலியான பெண்ணைக் கண்டு பிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் அதிகம்" (நீதி 31:10) என்று கூறுகிறது.

நமது தெய்வப்புலவரும் இதை அழகுற வடிவமைத்துத் தருகிறார்.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்".   (திருக்குறள் 6:2)

அதாவது, குடும்பத்திற்குரிய நற்பண்புகள் குடும்பத் தலைவியிடம் இல்லாது போனால், அவர்களுடைய வாழ்வில் வேறு எத்தனை சிறப்புகள் உண்டாயிருந்தாலும் அதனால் பயனில்லை என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

காதலொருவனைக் கைப்பிடித்தே, அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து,
மாதரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி!
(பெண்கள் விடுதலைக்கும்மி - மகாகவி பாரதியார் கவிதைகள்
ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் பக்.273.)

4. அவள்தான் சோர்விலாள் பெண்

நீதிமொழிகள் 11:16;12:4;14:1;31:26,30 திருக்குறள் : வாழ்க்கைத் துணைநலம் (6)

ஒரு நல்ல வாழ்க்கைத் துணையான குடும்பப் பெண்ணின் நற்குணங்கள், பண்புகள் குறித்து விவிலியம் கூறும் ஒப்பற்ற வார்த்தைகள் தாம் இவை :

1. "**நல்லொழுக்கமுள்ள பெண் மானத்தைக் காப்பாள்**" (நீதி 11:16) பெண்ணின் நற்பண்புகளில் முன்னே நிற்பது அவள் தன்னைக் கற்புடையவளாக (மானம்) காத்து நிற்பதே! அப்படிப்பட்ட பெண்ணே தன் கணவனுக்கு மிகப்பெரும் புகழ்ச்சியாக விளங்குவாள்.

2. "**பண்புள்ள மனைவி தன் கணவனுக்கு மணி முடியாவாள்**" (நீதி 12:4) இந்தப் பண்புள்ள மனையாள் தன் கணவனின் புகழ்ச்சிக்கு எவ்விதத்திலும் பங்கம் நேராது காத்து நிற்பாள். அவளுடைய இந்த பண்புள்ள வாழ்க்கை முறையே குடும்பத்தை சிறப்பாக எழுப்பிக்கட்டும் ஆற்றல் பெற்றதாக விளங்கும். அவளிடம் விளங்கும் இந்த ஞானம் அறிவு குடும்பத்தை உயர்த்தும் சிறந்தகாரியங்களாகும். இதை விவிலியம் எவ்விதம் உரைக்கிறதென்று காண்போம்.

3. "**ஞானமுள்ள பெண்கள்** தம் இல்லத்தைக் கட்டியெழுப்புகின்றனர்" (நீதி 14:1)

இப்படிப்பட்ட பெண் ஒரு குடும்பத்திற்கு இறைவன் அருளும் ஈவு. அவள் தன் வாயின் வார்த்தைகளையும் காத்து தன்னைக் கொண்டவனின் புகழுக்கு ஏற்புடையவளாக விளங்கும் சிறப்புக் கொண்டவள்.

4. "மனைவியைக்கண்டடைகிறவன் **நன்மையானதைக்** கண்டடைகிறான்" (நீதி 18:22). "விவேகமுள்ள மனைவியோ ஆண்டவர் அளிக்கும் கொடை" (நீதி 19:14).

இவளுடைய நடக்கைகளினால் அவள் கணவன் **புகழ்ச்சியடைகிறான்.**

5. "அவளை மணந்த கணவன் ஊர்ப் பெரியோருள் ஒருவனாய் இருப்பான்; மக்கள் மன்றத்தில் புகழ் பெற்றவனாயு மிருப்பான்" (நீதி 31:23).

6. அவள் **ஞானம் விளங்கத்** தன் வாயைத் திறப்பாள் (நீதி.31:26).

7. அவள் தன் வாழ்வில் **சோம்பலில்லாதவள்** எனவும் பேறெடுப்பவள் (நீதி.31:27).

8. "அவளுடைய பிள்ளைகள் அவளை **நற்பேறு பெற்றவள்** என வாழ்த்துவார்கள்; அவளுடைய கணவன் அவளை மனமாரப் புகழ்வான்" (நீதி 31:28).

9. **அவள் ஆண்டவரிடம் அச்சம் கொண்டுள்ள பெண்** (நீதி 31:30).

விவிலியம் கூறும் ஒரு இல்லத்தரசியிடம் காணப்பட வேண்டிய இத்தனை பண்புகளையும் திருவள்ளுவர் இரண்டே வரிகளில், ஒரே குறளில் கூறியிருக்கும் அழகே அழகுதான்.

"**தற்காத்து தற்கொண்டான் பேணித் தகைசான்ற**
சொற்காத்துச் சோர்வுஇலாள் பெண்". (திருக்குறள் 6:6)

தன் மானம் காத்து, தன்னைக் கொண்டவனையும் அவன் புகழையும் காத்து, தன் வாயின் வார்த்தைகளையும் காத்து, சோர்வற்ற நற்குண வதியாக விளங்குபவளே சிறப்பான பெண் என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

செல்லல் நீங்கப்ப கல்வித் தியசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக்கொடு வந்தால்
வல்ல வாறமுதாக்கலும் ஆகும் மற்று
அல்ல தொன்றறியேன் என்றயர்வுற

மற்ற மாற்றம் மனைவியாள் கூறமுன்
பெற்ற செல்வம் எனப்பெரி துளமகிழ்ந்து
உற்ற காதலி னால் ஒருப் பட்டனர்
சுற்ற நீர்வயல் செல்லத் தொடங்குவார்!

வீட்டில் ஒன்றுமில்லாநேரம் திடீரென வந்துவிட்ட சிவனடியாருக்கு உணவு கொடுக்க வழியேதும் தோன்றா நிலையில் கலங்கி நிற்கும் கணவனிடம் காலையில் வயலில் விதைத்த நெல்விதைகளை அரித்தெடுத்து வந்தால், அதை வறுத்து குத்தி அரிசியாக்கி சிவனடியாருக்கு அமுது படைக்கலாம் என்ற தன் மனையாளின் மாற்று வழிகுறித்து பரவசமடைந்து வயலேகினார் என்பது,

(இளையான்குடி மாறநாயனார் புராணம் கவிகள் 452, 453; பன்னிருதிருமுறைகள் தொகுதி - 19 - வார்த்தமானன் பதிப்பக வெளியீடு பக்கம்.258)

5. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி

ஆதியாகமம் : அதிகாரங்கள் 41-49 திருக்குறள் : மக்கட்பேறு (7)

யாக்கோபு பெற்றெடுத்த மகன்கள் பன்னிருவர். அவருள் யாக்கோபின் புகழ் மணக்க இலங்கிய ஒரே மகன் யோசேப்பு. தந்தையின் சொற்கேட்டு, அவர் விருப்பம் நிறைவேற்ற தன்னிடம் வெறுப்பைக் காட்டும் பத்து சகோதரர்களைக் கண்டு பட்சணங்கள் தந்து, சுகபெலன் விசாரித்து வரச் சென்ற இளவல் யோசேப்புக்கு நேர்ந்த துன்பங்களைத்தான் சொல்ல இயலுமோ? குழியில் தள்ளினர்; அடிமையாக விற்றனர் உடன் பிறந்தவனின் கண்ணீர் கண்டும் கனிவில்லா இதயம் படைத்தோர்! கர்த்தரோ என்னுடன்; அவர் தம் வார்த்தைகளோ என் பெலன்; நாள்வரும், இறைவன் என்னை உயர்த்தும் நேரம் வரும் என சற்றும் களைப்பில்லா இதயத்துடன் தன் உத்தமத்தில் நிலைத்து நின்றான் யாக்கோபின் மகன் யோசேப்பு. நாளும் வந்தது. இறைவனின் நோக்கம் வென்றது; இளைஞனின் பொறுமை உயர்ந்தது. இப்போது அவன் எகிப்தென்னும் பேரரசின் பிரதான மந்திரி.

எகிப்தின் பேரரசன் பார்வோன் யோசேப்பைக் குறித்து தன் வேலைக்காரரிடம் “இறை ஆவியைப் பெற்ற இந்த மனிதனைப்போல் வேறொருவன் உண்டோ என்றான்” (ஆதி 41:38). பின்னொரு நாள் யோசேப்பின் தகப்பனாகிய யாக்கோபைப் பார்த்து பார்வோன் மிக மகிழ்ச்சியுற்று அவரையும் அவருடைய இதர மக்களையும் நன்றாகப் பராமரிக்கும் ஏற்பாட்டைச் செய்தான். பஞ்சம் தீர்க்க உணவுகோரி தன்னிடம் வந்த தன் எகிப்து மக்களைப் பார்த்து பார்வோன்; “நீங்கள் யோசேப்பினிடத்துக்குப் போய், அவன் உங்களுக்குச் சொல்கிறபடி செய்யுங்கள்” என்று எங்கிருந்தோ அடிமையாக வந்த யோசேப்பைக் குறித்துக் கூறினான். யோசேப்பிடம் கண்ட ஞானம், விவேகம், ஒழுக்கம், செயல்திறன் ஆகியவைகளே பார்வோனை வியப்படையச் செய்தது; அவனுடைய குடும்பத்தின் மீதும் மிகப்பெரும் கரிசனை கொள்ளச் செய்தது. இதையே திருவள்ளுவரும்,

> **“மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
> **என்நோற்றான் கொல்எனும் சொல்”** (திருக்குறள் 7:10)

இவனை மகனாகப்பெற்றெடுக்க இவன் தந்தை என்ன தவம் செய்தானோ என்று பிறரைக் கூறச் செய்வதே ஒரு நல்ல மகன் தந்தைக்குச் செய்யும் உதவியாகும் என்பதே!

மேலும் சிந்தனைக்கு :

"நிருப நின்குல மன்னவர் நேமிபண் டுருட்டிப்
பெருமை எய்தினர் யாவரே இராமனைப் பெற்றார்?
கரும மேயிது கற்றுணர்ந்த தோய்க்கினிக் கடவ
தரும மும்மிது தக்கதே நினைத்தனை தகவவோய்

"மனிதர் வானவர் மற்றுளார் அறங்கள்காத் தளிப்பார்
இனியிம் மன்னுயிர்க்கு இராமனிற் சிறந்தவர் இல்லை
அனையன் ஆதலின் அரசநிற் குறுபொருள் அறியின்
புனித மாதவம் அல்லது ஒன் றில்லெனப் புகன்றான்"

(கம்பராமாயாணம் - மந்திரப்படலம், பாடல்கள் 35,41)

கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார் விளக்கம் காண்க, வசிட்டர் தசரதனிடம் : "அரசர் பெரும! உமது குலமரபில் ஆழியுருட்டி அகிலமும் பரந்து பெருமாண்புடன் முன்னர் நிலவி நின்ற மன்னருள் உம்மைப்போல் உயர்ந்த மகிமையை எவரும் அடைந்திலர்; இனியாரும் அடையவும் முடியாது. திவ்விய மங்கள குணகண சொரூபியான இராமனை மகனாகப் பெற்றிருக்கிறீர்! பெறலரும் பேறான இம்மகப் பேறொன்றால் மிகப்பேரெய்தி விண்ணும் மண்ணும் தொழநீர் விளங்கி நிற்கின்றீர்; ... மனிதர் தேவர் இயக்கர் சித்தர் கந்தருவர் முதலிய எந்த மரபிலும் இந்த இராமனுக்குச் சமமானவர் எவரும் இலர்".

6. அன்பு ஈனும் நட்பு

1 சாமுவேல் 20-ம் அதிகாரம் திருக்குறள் : அன்புடைமை (8)

இஸ்ரவேல் தேசத்தின் ராஜா சவுல். அவனுடைய பிரியமான குமாரன் யோனத்தான். தனக்குப் பின் அரியணை ஏறுவது தன் புதல்வனே என இறுமாப்புற்றிருந்த சவுல் ராஜாவுக்கு மிகப் பெரிய சவாலாக எழும்பினவரே தாவீது. கோலியாத்தை தாவீது வீழ்த்தின சமயம் இஸ்ரவேலின் பெண்கள் பாடின பாட்டு சவுலுக்கு மிகப் பெரிய அச்சத்தையும் கோபத்தையும் உண்டாக்கியது. எங்கே, இந்த தாவீது என் மகனுக்குரிய ராஜபதவியைப் பறித்துக் கொள்வானோ? என்கிற பயம் சவுல் ராஜாவின் மனதில் பெரும் சஞ்சலத்தை ஏற்படுத்தியது. இவைகள் எது குறித்தும் கவலை கொள்ளாத இளைஞர்களாக, நண்பர்களாக விளங்கினர் தாவீதும் யோனத்தானும்.

இருவரும் ஒரிவரிலொருவர் மிகுந்த அன்பைச் செலுத்தினர். அவர்கள் பாராட்டிய அன்பு ஒருவர்மேல் ஒருவர் மிகுந்த ஆர்வமுடையவர்களாக விளங்கும் இன்ப உறவாகிய நட்பை அவர்களிடம் உருவாக்கிற்று. ஒரு விசை தன் கோபத்தின்

உச்சியிலிருந்து சவுல் உரைத்தார் : "ஈசாயின் மகன் (தாவீது) பூமியின் மேல் உயிரோடிருக்கும் நாள்வரையும் நீயானாலும் உன் ராஜ்ய பாரமானாலும் நிலைப்படுவதில்லை; இப்போதே அவனை அழைப்பித்து, என்னிடத்தில் கொண்டு வா; அவன் சாகவேண்டும் என்றான்" (1 சாமு 20:30). ஆனால் யோனத்தான் தாவீதை மிகவும் சிநேகித்தான்; தன் உயிரைச் சிநேகித்ததுபோல அவனைச் சிநேகித்தான்.

நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய்; உன் நட்பு ஆச்சரியமாயிருந்தது; பெண்களின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது," என்று புலம்பல் பாடினார்.

அன்பு மற்றவரிடம் நாம் கொண்டுள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தி, அவர்களும் நம்மீது ஆர்வம் கொள்ளும்படி செய்கிறது. அந்த அன்பு இன்னும் வளரும்போது அது நீங்கா நட்பாக மலருகின்றது. இதனையே வள்ளுவப் பெருந்தகையும்,

"அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு" (திருக்குறள் 8:4) என்று பாடினார்.

மேலும் சிந்தனைக்கு :

"ஆழ்நீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பிநின் தம்பி; நீ
தோழன்; மங்கை கொழுந்தி, எனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்."

"அரசர்கள் எவ்வளவு பழகினவராயினும் அந்தப் புரத்தில் அதிக கவனமுடையவர்; யாருக்கும் அதனை அறிமுகப்படுத்தார்; தங்கள் பெண்களைப் பிறர் கண்கள் யாதும் பாராவகை என்றும் பாதுகாத்து நன்கு பேணி வருவார்.

கிழமை மீதூர்ந்து பழமை பாராட்டி எத்துணை உரிமையோடு பேசினும் மனைவியரை எவரிடமும் அவர் கிளைமுறை சொல்லமாட்டார்.

அத்தகைய அரச குலத்தில் தலைமைச் சக்கிரவர்த்தியாய் நிலவியுள்ள இக்குலமகன் தனது அருமை மனைவியை ஒரு வேடனிடம் இங்ஙனம் (கொழுந்தி) உரிமை காட்டியிருக்கிறான்.

இந்த அன்புரிமை அரிய நிலையது; பண்பு மிகவுடையது. இராமனுடைய குணங்களுள் நண்பு (நட்பு) நலங்களிந்த இப்பெருந்தகைமை பலரையும் பரவசப்படுத்தியுள்ளது."

(கம்பன் கலைநிலை (4) - கவிராஜபண்டிதர் ஜெகவீரபாண்டியனார் - தமிழ்நிலையம் - சென்னை. பக்கம்.312,313)

7. அன்பின் வழியது உயிர்நிலை

1 கொரிந்தியர் 13-ம் அதிகாரம் திருக்குறள் : அன்புடைமை (8)

"அன்பே பெரியது" (1 கொரி 13:13) என்பது விவிலியம் உணர்த்தும் உன்னத நிலை. "இறைவன் அன்பாகவே இருக்கிறார்" (1யோவான் 4:8). இதையே சைவ சித்தாந்தத்திலும் **அன்பே சிவம்** என்றுரைக்கின்றனர். விவிலியத்தில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பெரும்பகுதிகள் உள்ளன. பழைய ஏற்பாட்டின் பிரதான கட்டளை யாதெனில், "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்பு கூறுவாயாக" என்பதே (உபாகமம் 6:5); இதற்கு ஒப்பனையான இரண்டாம் கற்பனை, "உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே" (மத்தேயு 22:39).

எனவே, அன்பே மனிதனின் உயிர்; அன்பு செய்ய அறிந்தவனே மனிதன்; இறைவனிடத்திலும், சகமனிதனிடத்திலும் அன்பு செய்ய அறியாதவர் மனிதன் என்னும் நிலைக்குள் வரமாட்டார். இறைவனே இதனை செம்மையாகச் செய்து வெளிப்படுத்தியவர். "கடவுள் மனிதரை நேர்மையுள்ளவராகவே படைத்தார். ஆனால், வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்தும் மனிதர் தேடிக் கொண்டவையே" (பிரசங்கி 7:29). மனிதரின் வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்திற்கும் காரணம் ஆதிமனிதர் ஆதாமின் பாவமும், அவர் வழி வந்த நாம் கூட்டிக் கொண்ட தீச்செயல்களுமே! எனவே இந்த பாவ தீச்செயல்களுக்குள் அமிழ்ந்து, அதனால் தூயவரான இறைவனை என்றென்றும் பிரிந்து நிற்காமல், மனிதரை இறைவன் பால் திருப்புவதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு தான் இறைமைந்தன் இயேசு கிறிஸ்து.

"தம்முடைய ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே பலியாக ஒப்புக்கொடுக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் (மனிதர் மேல்) அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16). இறைவனுடைய அன்பின் வெளிப்பாடாக வந்து, மனிதரை மீட்கும் பொருளாகத் தமது உயிரைக் கொடுத்து, மீண்டும் தமது உயிரை எடுத்து, அதனை தம்மை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் கொடுத்து மனிதரை அழியா நிலையடையச் செய்வதே இறைமைந்தன் இயேசு கிறிஸ்துவின் ஒப்பற்ற செயல். "உயிர்த்தெழுதலும் வாழ்வும் (உயிரும்) நானே" (யோவான் 11:25) என்றார் இயேசு.

எனவே, கடவுளின் அன்பாக இருப்பவர் இயேசு; அவர் மனிதருக்கு உயிராக விளங்குகிறார். **இந்த உயிரான இயேசுவை நாம் ஏற்றுக் கொள்வதே உண்மையான அன்பு நிலையாகும். இவ்வாறு செய்ய மறுப்போர்**

இவ்வுலகில் தோலால் மூடப்பட்ட எலும்புருவாக விளங்குவரேயன்றி வேறு எந்த சிறப்பையும் அடையமாட்டார்.

இதையே தெய்வப்புலவரும்,

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" என மொழிகின்றார்

மேலும் சிந்தனைக்கு :

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே" (சிவஞானபோதம் 12-ம் சூத்திரம்)

மனுமக்கள் மீது கொண்ட அன்பினால் தம்மைப் பலியாக்கியபோது வழிந்த இரத்தம் இறைவனின் மலரடிகளை செந்நிறமாக்கியிருக்கிறது. அந்த பாதங்களை அடைய விடாமல் தடுக்கும் பாவத்தை நீக்கி, தமது சாயலை ஈந்து, மனிதனின் இதயத்தையே தான் உறையும் ஆலயமாக்கிக் கொண்டவரைத் தொழுவோம் என்பது.

8. விருந்தின் வேள்விப்பயன் – உபசரிப்பின் பலன்

ஆதியாகமம் 18-ம் அதிகாரம் திருக்குறள் : விருந்தோம்பல் (9)

ஆபிரகாம் என்னும் ஒரு யுகபுருஷனின் முதிர்வயதிலும் அவருக்கு மகப்பேறு இல்லை. தன் மனைவி சாராளுடனும், தன் தத்துப்புத்திரன் லோத்து என்பானுடனும் இறைவன் காட்டிய தேசத்தினுள் வந்தார். இறைவனோ, லோத்து அல்ல உன் புத்திரன்; உன் கர்ப்பப் பிறப்பானவனே உனக்குப் புத்திரனாயிருப்பான் என வாக்குரைத்திருந்தார். வந்துசேர்ந்த அயல் தேசத்தில் சில பிரச்சினைகளினிமித்தம் லோத்து ஆபிரகாமை விட்டுப் பிரிந்து சோதோம் என்னும் பட்டணத்திற்குச் சென்று அங்கு வாழ ஆரம்பித்தார். ஆபிரகாமும் சாராளும் தனியே தங்கள் வேலைக்காரர்களுடன் தனித்து விடப்பட்டனர்.

இந்நிலையில் ஒருநாள் இறைவன் தனக்கு புத்திரபாக்கியம் குறித்து வாக்குரைத்திருந்த போதிலும், அது இன்னும் நிறைவேற வில்லையே என்னும் ஏக்கப் பெருமூச்சுடனே தன்னுடைய கூடார வாயிலில் சோகக்களையுடன் மம்ரே என்னும் இடத்தில் ஆபிரகாம் அமர்ந்திருக்கிறார். மத்தியான வேளையது. சூரியனின் வெப்பமான கதிர்களால் பூமி அனலாகத் தகித்துக் கொண்டிருந்த வேளை. தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்த ஆபிரகாமுக்கு முன்னே மூன்றுபேர் அடங்கிய ஒரு குழு சற்று தூரத்தில் இவருடைய கூடாரம் நோக்கி வருவதைக் கண்டார்.

ஆபிரகாம் என்ற அந்த வயதான மனிதர் எழுந்து ஓடினார். அந்த மூவர் குழுவைச் சென்றடைந்தார். அவர்களைப் பார்த்து ஐயன்மீர், இந்த பகலின் உஷ்ணவேளையில் என் இல்லம் நாடி வந்தீர், வாருங்கள், வாருங்கள், சற்றே இந்த மரத்தில் சாய்ந்து கொண்டு அதன் நிழலில் இளைப்பாறுங்கள். நான் தரும் உணவு, தண்ணீர் உங்கள் பிரயாணத்திற்கு வேண்டிய புத்துணர்வைத் தரும், அமருங்கள் என ஆபிரகாம் கூறிய வார்த்தைகள் அந்த மூவரையும் பரவசமடையச் செய்தது. அவர்கள் மரத்தினருகே சாய்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்த வேளையில் ஆபிரகாம் உடனே கூடாரத்தினுள் சென்று தன் மனைவி சாராள் அம்மாவுடன் சேர்ந்து தக்க உணவுப் பதார்த்தங்களைத் தயார் செய்து அந்த மூவருக்கும் பரிமாறினர்.

வந்த அந்த விருந்தினர்களோ சாதாரண மானிடர் இல்லை. இறைவன் தன் இரண்டு தேவ தூதர்களுடன் மனித உருக் கொண்டு பூமி வந்து, பாவத்திலும் அக்கிரமத்திலும் குறிப்பாக ஓரினச்சேர்க்கை என்ற மிகப்பெரிய பாவத்தினுள் அமிழ்ந்து கிடந்த சோதோம் கொமாரா என்ற பட்டணங்களை அழித்துப் போடவே வந்தனர். ஆபிரகாமின் விருந்தோம்பலை வெகுவாக அனுபவித்த அந்த இறைமாந்தர் ஆபிரகாமைப் பார்த்து இரண்டு வரங்கள் கொடுத்தனர்.

1. அவருடைய மனைவி சாராள் ஒரு கரு உற்பத்தி காலத்தில் ஒரு குமாரனைப் பெற்றெடுப்பாள்.

2. அப்போது சோதோமில் வாழ்ந்து கொண்டிருந்த ஆபிரகாமின் உறவினர் லோத்துவும் அவர் குடும்பமும் நிகழ விருக்கின்ற அழிவிலிருந்து காப்பாற்றப்படுவார்கள்.

விருந்தோம்பல் என்பது எத்தனை சிறப்புடையது என்பதே இந்நிகழ்வால் விவரிக்கப்பெறுகின்றது. பல தவங்களின் பலன்களை மனிதர்க்கு விருந்தோம்பல், அதாவது அறியாதமக்களை உபசரிக்கும் பண்பு பெற்றுக் கொடுக்கும். எனவே தான் தெய்வப்புலவர் விருந்தோம்பலை 'வேள்வி' என்றும் அதனால் வரும் பலனை 'வேள்விப் பயன்' என்றும் உரைக்கிறார்.

"**இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்**
துணைத்துணை வேள்விப் பயன்" (திருக்குறள் 9:7)

விருந்தோம்புதலின் சிறப்பை இவ்வளவுதான் என்றெடுத்துரைக்க இயலாது; விருந்தோம்பலினால் உபசரிக்கப்படும் மக்களின் தகுதிக்கேற்றவாறு பலன் உண்டாகும் என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

"அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு" (திருவிவிலியம் - எபிரேயர் 13:12).

9. இனிய உளவாக இன்னாத கூறல்

1 இராஜாக்கள் 12:1-20 திருக்குறள் : இனியவை கூறல் (10)

இஸ்ரவேலின் மிகப்பெரிய அரசர் தாவீதின் மகன் சாலமோன். இவரும் மாபெரும் அரசர். இறைவனிடமிருந்து ஞானத்தையே வரமாகப் பெற்றவர். இவருடைய காலத்தில் இவரை எதிர்த்து எந்த நாட்டின் அரசனும் போரிடத் துணிந்ததில்லை. சமாதானம் நிறைந்த நாட்கள் இவருடைய ஆட்சியின் நாட்கள். இருப்பினும் இவரது ஆடம்பர வாழ்வினிமித்தம் மக்கள் அதிக வரி செலுத்தவேண்டிய சூழ்நிலை காணப்பட்டுள்ளது. 40 ஆண்டுகள் இஸ்ரவேலை ஆளுகை புரிந்து 12 கோத்திரங்களடங்கிய ஒரு மாபெரும் தேசத்தை தனக்குப் பின் தன் குமாரனான ரெகொபயாம் வசம் விட்டு மரித்தார்.

ரெகொபயாம் ஆட்சி பீடம் ஏறினவுடன் தேசத்திலிருந்த தலைவர்களையெல்லாம் வரப்போகும் தனது ஆட்சி பற்றி விவாதிக்க தம்மிடம் கூட்டினார். இவரைச் சுற்றிலும் இளம் வயதொத்த நண்பர்கள் குழுமியிருந்தனர். அவ்வேளையில் தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த தேசத்தின் தலைவர்கள் அனைவரும் ராஜாவை நோக்கி : “உம் தந்தை பளுவான நுகத்தை எங்கள் மேல் சுமத்தினார். இப்போது நீர் உம் தந்தை சுமத்திய கடும் வேலைகளைக் குறைத்து, அவர் எங்கள் மேல் வைத்த பளுவான நுகத்தை எளிதாக்க வேண்டும். அப்படிச் செய்தால் நாங்கள் உமக்காகப் பணியாற்றுவோம்” என்றார்கள் (1 ராஜா 12:4). அரசனாகிய ரெகொபயாம் இன்முகத்துடன் அவர்களுடன் பேசி, நல்வார்த்தைகளினால் அவர்களுடன் உறவாடி தனது ராஜ்ய பாரத்தை நிலைநிறுத்தியிருக்கலாம். அதைவிட்டு, அவர் கூறிய மிகக் கடுமையான வார்த்தைகள் அன்று தேசத்தைத் துண்டாடி, மிகப்பெரும் சேதத்தை உண்டு பண்ணிவிட்டது. இதோ அவன் பேசிய வார்த்தைகள், “என் தந்தை பளுவான நுகத்தை உங்கள் மேல் சுமத்தினார்; நானோ அதை இன்னும் பளுவாக்குவேன். என் தந்தை உங்களை சாட்டையால் அடித்தார்; நானோ உங்களை முள் சாட்டையால் அடிப்பேன் என்று கூறினான்” (1 ராஜா 12:14). ரெகொபயாமின் இந்த கடும் வார்த்தைகள் அரசைத் துண்டாடி ஒரு மிகச் சிறிய கூட்டம் யூதேயா என்னும் பெயரில் அவருடனும், பிற 10 கோத்திரங்கள் இஸ்ரவேல் என்னும் பெயரில் அவரை விட்டுப் பிரிந்தும் போயிற்று.

கட்டி அரவணைத்துப் போக வேண்டிய தேசத்தை ரெகொபயாமின் ஒரு வார்த்தை திட்டுத் திட்டாக பிரித்துப்போட்டது. எனவே, இனிய வார்த்தைகளையே பேசுதல் வேண்டும். இந்த ரெகொபயாமின் செயலையே செந்நாப்போதரும்,

"இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" - என்றுரைத்தார்.

(திருக்குறள் 10:10).

இன்பமான சொற்கள் இருக்கும்போது கடுஞ்சொற்களைப் பேசுதல் இனிப்பு நிறைந்த கனி இருக்கும் போது புளிப்பு நிறைந்த காயைத் தெரிந்து கொள்தல் போன்றதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

சூதாட்டத்தில் தோற்ற பாண்டவர்கள் துரியோதனின் கூற்றுப்படி தங்கள் நாட்டை இழந்து 12 ஆண்டுகள் வனவாசமும் ஓராண்டு அஞ்ஞாத வாசமும் முடித்தனர். முடிவில் கண்ணபிரான் பாண்டவர்கள் சார்பாக தூது சென்று இவ்விதம் கூறுகிறார். "துரியோதனா! என்னுடைய வார்த்தைகளைக்கேள்; உன்னைச் சேர்ந்தவர்களின் நன்மையை நாடு... தீயவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு பாண்டவர்களிடம் பகை கொள்ளாதே; போரை விரும்பாதே... பாண்டவர்கள் உன்னை இளவரசனாக்கி, உன் தந்தையான திருதராஷ்டிரரையே அரசராக வைப்பார்கள். அவர்களுக்கு பாதியைக் கொடுத்துவிடு. மீதம் உள்ள பெருஞ்செல்வத்தை நீ அடை; அவ்வாறு செய்தால், நீ நெடுங்காலம் மகிழ்வுடன் வாழலாம்" என்றார். இத்தனை நல்வார்த்தைகளையும் புறம்பே தள்ளி செருக்கான வார்த்தைகளை துரியோதனன் பேசுகிறான் : "கூர்மையான ஊசி முனையினால் குத்தப்படும் அளவு நிலம் கூடப் பாண்டவர்களுக்குக் கொடுக்கமாட்டேன்" என்று கூறி போரை வலிய அழைத்து முடிவில் அனைத்தையும் இழந்து மடிந்த துரியோதனின் செயல் "கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" என்ற வள்ளுவரின் வாய்மொழியை நினைவு படுத்துகிறது. (வியாசர் பாரதம், வர்த்தமானன் வெளியீடு தொகு 2 பக் 1166 - 1168)

10. உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு

1 சாமுவேல் 25-ம் அதிகாரம் திருக்குறள் : செய்ந்நன்றியறிதல் (11)

நாபால் என்கிற ஒரு பெரும் செல்வந்தன். மாகோன் என்னும் பட்டணத்தில் இருந்தான். ஆயிரக்கணக்கான ஆடுகளுக்கு அதிபதி. அவனுடைய மேய்ப்பர்கள் ஆடுகளை மலைப்பாங்கான பிரதேசங்களில் ஓட்டிக் கொண்டு போய் அங்கேயே கூடாரங் களமைத்துத் தங்கி பராமரித்து வருவார்கள். வருடந்தோறும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மந்தைகளின் அதிபதி ஆடுகளை முடிகத்தரிக்கும்

தொழிலாளர்களைக் கூட்டிக் கொண்டுபோய் பல நாட்கள் முடிகத்தரித்து, அவற்றைச் சேகரித்து கம்பளி ஆடைகள் செய்யும் தொழிலகங்களுக்கு அனுப்புவது வாடிக்கை. இச்சமயம் கர்மேல் என்னும் மலைப்பகுதியில் அவன் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அந்தப்பகுதி பயங்கரமான மிருகங்களால் நிறைந்தது. அந்தப் பிரதேசத்தில் தான் சவுல் ராஜா தன்னைக் கொன்று போடுவார் என்று பயந்து தாவீதும் அவரோடிருந்தவர்களும் மறைந்து வாழ்ந்து வந்தனர்.

நாபாலின் ஆடுகள் அங்கே மேய்ந்து வந்த காலத்திலெல்லாம் அவைகளை மேய்த்து வந்த இடையர்களான மக்களுக்கு மாபெரும் யுத்த புருஷர்களான தாவீதும் அவருடைய மக்களும் அரண் போலிருந்து பாதுகாப்பாயிருந்தனர். அப்போது நாபால் வழக்கப்படி ஆடுகளுக்கு ரோமம் கத்தரிக்கும்படி தன் பணியாட்களுடன் அங்கு வந்து மிகப் பெரிய விருந்து செய்து கொண்டிருந்தார். இதைக் கேள்வியுற்ற தாவீது தமது மக்களில் பத்துப்பேரை அழைத்து, “நீங்கள் கர்மேலுக்குச் சென்று அங்கே நாபாலைக்கண்டு என் பெயரால் அவனுக்கு சமாதான வாழ்த்துக் கூறுங்கள்... உம் இடையர்கள் எங்களோடு இருந்தார்கள்; நாங்கள் அவர்களைத் துன்புறுத்திய தில்லை; கர்மேலில் அவர்கள் இருந்த காலமெல்லாம் எதையும் இழக்கவுமில்லை... நாங்கள் ஒரு திருவிழா நாளில் வந்துள்ளோம். உம்மால் கொடுக்க முடிந்ததை உம் அடியார்களுக்கும் உம்புதல்வன் தாவீதுக்கும் தந்தருள்க! எனக் கூறுங்கள் என்று சொல்லியனுப்பினான்.”

இந்த வார்த்தைகளைக் கேட்ட நாபால் மிகக் கடுமையான வார்த்தைகளால் திட்டி, சிறிது உணவுப்பதார்த்தங்களைக்கூடத் தராது விரட்டியடித்தான். இதைக்கேள்வியுற்ற தாவீது வெகு சினங்கொண்டு தம்முடன் இருந்தவர்களில் நானூறு பேரை ஆயுதமணிந்தவர்களாகக் கூட்டிக் கொண்டு, நாம் செய்த நற்செயல்களுக்கு நன்றிமறந்த நாபாலும் அவனுடைய மக்களும், மந்தைகளும் பொழுது விடியும் மட்டும் உயிரோடிருப்பதில்லை; நன்மையே செய்த எனக்கு பதிலாக தீமையே செய்தான். செய்ந்நன்றி கொன்ற அவன் உய்வடைவதில்லை எனக்கூறி சென்றபோது மிகுந்த அறிவும் அழகுமுடைய நாபாலின் மனைவி அபிகாயில் தாவீதுக்கு எதிர்ப்பட்டு, வேண்டிய பட்சணங்களைக் கொடுத்து தாவீதின் கோபத்தை ஆற்றினாள்; பின்னர் தன் கணவனிடம் அவனுடைய மூடத் தனத்தைக் குறித்தும் எடுத்துரைத்தாள். தாவீது தம் மக்களுடன் அன்று அங்கு வந்திருந்தால் சுவரில் நீர்விடும் ஒரு நாய் கூட நாபாலுக்கு மிஞ்சியிருக்காது என்பதறிந்து, அந்த பயத்திலேயே பத்து நாளில் நாபால் செத்துப் போனான். செய்ந்நன்றி கொன்றல் அவன் உயிரையே கொன்று விட்டது. இதை வலியுறுத்தும் விதமாகவே வள்ளுவப் பெருந்தகையின் குறள் அமைந்திருக்கிறது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (திருக்குறள் 11:10)

எவ்வித நன்மைகளையும் நினையாமறபோனாலும் தப்பிக்கும் வழி உண்டு; ஆனால் தமக்கு ஒருவர் செய்த உதவியினை நினையாமறபோனால் அதின் தீமையிலிருந்து விலகும் வழியே இல்லை என்பதாம்.

மேலும் சிந்தனைக்கு :

வானரங்களின் தலைவனும், பேரரசன் வாலியின் தம்பியுமான சுக்கிரீவன் தவறொன்றும் இழைக்காதிருக்க, தனக்கு மாபெரும் துரோகம் செய்து விட்டதாகத் தவறாக எண்ணி, சுக்ரீவனின் மனைவியையும் மற்றும் அனைத்து உடைமைகளையும் பறித்துக் கொண்டு வாலி அவரை நாட்டை விட்டுத் துரத்தி விடுகின்றார். இதையெல்லாம் விபரமாகக் கேட்டறிந்த இராமபிரான் சுக்ரீவனுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி வாலியைக் கொன்று சுக்ரீவன் இழந்ததை இராமபிரான் மீட்டுக் கொடுப்பார். சீதா பிராட்டியை இழந்து, அவரைத் தேடிவரும் பணியில் சுக்ரீவன் இராமபிரானுக்கு உதவி செய்யவேண்டும். வாலி கொல்லப்பட்டார்; சுக்ரீவன் அனைத்தையும் பெற்று அரசரானார். ஆனால் தான் வாழ்ந்திருந்த போது, மாரிக்காலம் முடிந்தபின்பும், இராமன் செய்த பேருதவியை சுக்ரீவன் மறந்து விட்டார். இராமர், இலட்சுமணரின் நிலையும் தாவீதின் நிலையை ஒத்ததாகவே காணப்பட்டது. அங்கு இலக்குவன் கூறிய வார்த்தைகள் மேலே கூறப்பட்ட குறளின் பொருளைச் சுட்டுவதாகவே அமைந்தது. "சுக்ரீவ! காம மயக்கத்திற்கு அடிமைப்பட்டு நன்றியை மறந்து விட்டாய்; **எத்தகைய பாவத்தைச் செய்தவனுக்கும் பரிகாரம் உண்டு. ஆனால் செய்ந்நன்றி மறந்தவனுக்குப் பரிகாரம் இல்லை;** என் தமயன் இராமர் செய்த உதவியை அதற்குள் மறந்து விட்டாய்; ... அவர் கோபம் கொண்டால் என்ன நடக்கும் தெரியுமா? வாலிக்கு ஏற்பட்ட முடிவுதான் உனக்கும் ஏற்படும்; இதனை மறக்கவேண்டாம்" எனக் கூறினார். நாபாலைப் போலல்ல; சுக்ரீவன் தவறை நினைத்து மனம் வருந்தி உய்வு பெற்றார், வாழ்வடைந்தார்.
(வால்மீகி இராமாயாணம், வர்த்தமானன் வெளியீடு தொகுதி 2 பக் 885-887)

11. ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி

(ஒரு தலைப் பட்சமாக தீர்ப்பு வழங்காதிருத்தல்)

யோவான் 8:1-11 திருக்குறள் : நடுவுநிலைமை (12)

இயேசு பெருமான் ஒரு நாள் தேவாலயத்தில் அமர்ந்து அங்கே வந்த மக்களுக்கு உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தபோது, விபசாரத்திலே கையும், மெய்யுமாய்ப் பிடிபட்ட ஒரு பெண்ணை,

நியாயப்பிரமாண புத்தகத்தில் எழுதியிருக்கிறபடி, அவள் மேல் கல்லெறிந்து கொலை செய்யும்படி மதத் தலைவர்கள் அவளை இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள். "இப்படிப்பட்டவர்களை கல்லெறிந்து கொல்ல வேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள்" (யோவான் 8:5). நியாயப்பிரமாணத்தின் படி அவளைக் கொலை செய்யுங்கள் என்று சொல்வாரோ அல்லது அவளை விட்டு விடுங்கள் என்று சொல்வாரோ? அவர் என்ன சொல்லுவார் என காத்துக் கொண்டிருந்தனர். இறைமைந்தன் இயேசு குனிந்து தரையில் ஏதோ எழுதுகிறவராக அமர்ந்திருந்தார். நியாயப்பிரமாணத்தின்படி செய்யுங்கள் என மதத் தலைவர்களைப் பிரியப்படுத்தும் வார்த்தைகளைச் சொல்வதா? அல்லது குற்றம் சுமத்தப்பட்ட பெண்ணுக்கு இறங்கி அவள் சார்பாகப் பேசுவதா? எப்படிப் பேசினும் அவர் மேல் கட்டாயம் குற்றம் சொல்வார்கள். என்ன செய்வது?

இரண்டு தரப்பினரையும் ஏறெடுத்துப் பார்த்தார். ஒரு புறம் கைகளில் கற்களை ஏந்தினவர்களாக கொலை செய்யும் வெறியுடன் ஒரு கூட்டம்; மறுபுறம் ஏக்கத்துடனும் பயத்துடனும் தான் மனந்திரும்பி வாழ ஒரு சந்தர்ப்பம் ஏற்படாதா என காத்திருக்கும் ஓர் அபலைப் பெண். சீக்கிரம் முடிவைக் கூறும்படி இயேசு பெருமானை நெருக்கிக் கொண்டிருந்தார்கள். ஆண்டவர் அவர்களைப் பார்த்து, "உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" என்று சொல்லி மறுபடியும் குனிந்து தரையிலே எழுதத் தொடங்கினார். ஒவ்வொருவனும் தன் மனசாட்சியிலே குத்தப்பட்டவனாக கல்லை கீழே எறிந்து விட்டு அவ்விடம் விட்டு அனைவரும் சென்று விட்டார்கள். ஆண்டவர் அவளைப் பார்த்து "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை, நீ போ, இனி பாவஞ் செய்யாதே என்றார்" (யோவான் 8:11).

இச்சம்பவம் நீதிமான்களாகிய சான்றோர்கள் எவ்விதம் தங்கள் முன் காணப்படும் காரியங்கள் மேல் தீர்ப்புரைக்கிறார்கள் என்பதை இனிதாக வெளிப்படுத்துகிறது. இந்த **ஒரு பால் கோடாமையே** (ஒரு பக்கத்தைச் சார்ந்தவர்களுக்காகப் பேசாதிருத்தல்) சான்றோர்க்கு அணி என்னும் உண்மையை ஈண்டு அழகுற எடுத்தியம்பப்படுகிறது.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி" (திருக்குறள் 12:8)

எடைகளை சரிசமமாகக் காட்டும் தராசு முள்போல, எப்பக்கமும் சாயாமல் நீதி வழங்குவது நீதிமான்களுக்கு அழகாகும்.

மேலும் சிந்தனைக்கு :

பாதிக்கப்பட்ட மக்கள் அரசனிடம் நீதி கோருவதற்காக ஓர் ஆராய்ச்சி மணி அரண்மனை வாயிலில் உள்ளது. மனுநீதிச் சோழனின் அருமை மைந்தன் தேரேறி செல்லுங்கால் ஒரு பசுங்கன்றின் மீது சக்கரத்தை ஏற்றி கொன்று விடுகிறான். தாய்ப்பசு கதறிய வண்ணம் சென்று அரண்மனை வாயிலில் உள்ள ஆராய்ச்சி மணிக் கயிற்றை இழுத்து மணி ஓசை அரசனின் செவிகளில் விழுமாறு செய்கிறது. இதைக் கண்ணுற்ற மனுநீதிச் சோழனோ நீதிகோரவே ஏற்றப்பட்ட ஆராய்ச்சிமணியின் ஓசைக்குக் காரணமாயிருந்தது மனிதனோ, மிருகமோ அதுகோரும் நீதியைச் செய்வதே உகந்தது என்கிறார். மந்திரிகளும், பிரதானிகளும் தடுத்து, பசுதானே மணி அடித்தது; பசுங்கன்றுதானே மடிந்தது; அதற்காக அரசகுமாரன் சாவதா? கூடாது, கூடவே கூடாது என்றுரைக்க, அரசனோ நீதிகோரும் அந்த பசுவுக்கு நான் என் பதில் செய்வேன் என மயங்கி, என்குமாரனை அவ்விதமே இழந்து அந்த பசுவின் வேதனையை நான் அடைவேன் எனத் துணிந்து, தேர்ச்சக்கரமேற்றி தன் மகனைக் கொன்று நின்றதும் இம்மண்ணின் புனித வரலாறுகளில் ஒன்று. மனிதனுக்கு ஒரு நீதி, மிருகத்துக்கு ஒரு நீதியா என்ற அரசனின் நோக்கு இன்று பலவிவாத மேடைகளில் ஏறி நிற்பினும், அந்நிலை நோக்கு **ஒரு பால்கோடாமை** என்னும் சான்றோரின் அணிக்கு அணியாக விளங்குகிறது.

"வாழி மனுச்சோழர் வாழியவர் மைந்தன்
வாழியவர் மந்திரியாம் வல்லவனும் - வாழியவர்
செங்கோன் முறையவர் தஞ் சீர்கேட்பவர்வாழி
எங்கோன் பதம்வாழியே"

(வள்ளலார் உரைநடைநூல், வர்த்தமானன் பதிப்பகம் பக்.79-143 காண்க.)

12. அடக்கம் அமரருள் உய்க்கும்

1 சாமுவேல் 2-ம் அதிகாரம் திருக்குறள் : அடக்கம் உடைமை (13)

இஸ்ரவேலில் சீலோ என்னும் பட்டணம். அதில் இறைவனின் ஆலயம் இருந்தது. அங்கே மூன்று பேர் வளர்ந்தனர். ஒருவன் பெயர் சாமுவேல்; இறைப்பணிக்காக இளைஞனாக இருக்கும் போதே அவன் தாய் அன்னாள் ஆலயத்தில் கொண்டுபோய் விட்டிருந்தாள். மற்ற இருவர் ஓப்னி, பினெகாஸ் என்னும் பேர் கொண்டோர்; ஆலய ஆசாரியன் ஏலி என்பாரின் குமாரர்.

மூவரும் ஒரே சூழ்நிலையில் தான் வளர்ந்து வந்தனர். மூவருமே இறைப்பணியாளர் என்னும் நிலையில் வளர்ந்தோர் தான். ஆனால், அவர்களுடைய செயல்பாடுகளிலும், இறைப்பணியிலும், பண்பிலும் மிகப்பெரும் வித்தியாசமுடையோராய் காணப்பட்டனர். அவர்களைக் குறித்து விவிலியம் கூறும் சாட்சிகள்:

"சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து, கர்த்தருக்கும் மனிதருக்கும் பிரியமாக நடந்து கொண்டான்" (1 சாமு 2:26).

"ஏலியின் புதல்வர்கள் (ஓப்னி, பினெகாஸ்) கீழ்த்தரமானவராக இருந்தனர். அவர்கள் ஆண்டவர் மீது அக்கறை கொள்ளவில்லை" (1 சாமு 2:12).

"ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது, மனிதர் கர்த்தரின் காணிக்கையை (ஆராதனை, தொழுகை) வெறுப்பாய் எண்ணினார்கள்" (1 சாமு 2:17).

ஓப்னி, பினெகாஸ் என்னும் அந்த இறைப் பணிவிடைக் காரரின் நடக்கைகள் மிகவும் பொல்லாததாக இருந்தது. அவர்கள் தங்கள் தகப்பனின் வார்த்தைகளுக்கும், இறைவனின் சட்டத்திற்கும் அடங்காதவர்களாக, துர் நடக்கையுடையோராய் விளங்கினர். எனவே மக்கள் தேவ ஆலயத்தையும், தேவ ஆராதனையையும் வெறுக்கும்படி நேர்ந்தது. அதே சமயம் சாமுவேல் என்னும் இறைப்பணியாளனோ மிகுந்த அடக்கமுடையவனாக, அதற்கு அடையாளமான சணல்நூல் ஆடையைத் தரித்துக் கொண்டு கர்த்தருக்கு முன்பாக பணி விடை செய்தார். இந்நிலையிலேயே அவர்கள் வளர்ந்தார்கள். சாமுவேலின் மீது இறைவனின் கருணையும், ஓப்னி பினெகாஸ் மீது இறைவனின் கடுஞ்சினமும் வெளிப்பட்டது. (1 சாமு 2:7-18).

இஸ்ரவேலருக்கும், பெலிஸ்தியருக்கும் இடையே பெரும் போர் மூண்டது. அதில் அடங்காத் தன்மையுடைய ஓப்னி பினெகாஸ் என்னும் கொடியோர் இறைவனின் கோபத்தால் மடிந்தனர். அடக்கமும், தாழ்மையும் எளிம்மயும் கொண்ட சாமுவேல் பெரும் சிறப்படைந்தார்.

"சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிதான் என்று தாண்முதல் பெயர்செபா மட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்கும் விளங்கினது."

"கர்த்தர் பின்னும் சீலோவிலே தரிசனம் தந்தருளினார்; கர்த்தர் சீலோவிலே தம்முடைய வார்த்தையினாலே சாமுவேலுக்குத் தம்மை வெளிப்படுத்தினார்."

சாமுவேலின் அடக்கம் இறை அன்பைப் பெற்றது; ஓப்னி பினெகாஸ் ஆகியோரின் அடங்காமை இறைவனின் கோபாக்கினை விழக்காரணமாயிற்று. இந்நிலைதான் திருக்குறளில் விளக்கப் பெறுகின்றது.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்" (திருக்குறள் 13:1)

அடக்கம் தேவ அன்பைத்தரும்; அடங்காமை தேவகோபமாகிய இருளைத் தரும். "அடக்கம் தேவலோகத்தைத் தரும்; அடங்காமை நரகத்தைத் தரும்" (சாமி சிதம்பரனார்).

மேலும் சிந்தனைக்கு :

கண்ணபிரானைச் சந்திக்க பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனனும், துரியோதனனும் ஒரே நாளில் துவாரகையை அடைந்தனர். முதலில் துரியோதனனே கண்ணபெருமானைச் சந்திக்க விரைந்து சென்றான். அப்போது பெருமான் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். உள்ளே சென்ற துரியோதனன் பெருமானுக்குத் **தலைப் பக்கத்தில் கிடந்த ஆசனம் ஒன்றில் கம்பீரமாக உட்கார்ந்தான்.**

"சற்று நேரம் கழித்து அங்கு சென்ற தனஞ்செயன் (அர்ச்சுனன்)... கிருஷ்ணருக்கு **வணக்கம் செலுத்திப் பணிவுடன் அவர் கால் பக்கத்தில் நின்றான்"**

இதை வாசிக்கும் போது துரியோதனனின் அடங்காமையும் அர்ச்சுனனின் அடக்கமும் கையிடை நெல்லிபோல் துலக்கமுற விளங்குகிறது. முடிவு, அர்ச்சுனன் இறை அன்பாகிய வெற்றியை அடைந்தான். துரியோதனன் தேவகோபமாகிய தோல்வியையும் இகழ்ச்சியையுமே அடைந்தான்.

வியாசபாரதம் - வர்த்தமானன் பதிப்பகம் தொகுதி 2 பக்கம் 1090 - 1091.

13. யாகாவா ராயினும் நாகாக்க

ஆதியாகமம் 4-ம் அதிகாரம்   திருக்குறள் : அடக்கமுடைமை (13)

உலகில் பெண்ணின் வயிற்றில் பிறந்து வந்த முதல் மனிதன் என்னும் சிறப்புப் பெற்றவன் காயீன். அவனுக்குப் பின் பிறந்தவன் ஆபேல். ஆதாம் ஏவாள் என்னும் உலகின் முதல் தம்பதியினருக்குப் பிறந்த பிள்ளைகள். காயீன் உலகின் முதல் தொழிலாகிய உழவுத்தொழில் செய்கிறவனானான். ஆபேல் அதைச் சார்ந்த ஆடு மேய்க்கும் தொழிலைச் செய்து வந்தான். உலகையும் அதன் பின்பு அதில் வாழும் மனிதனையும் படைத்த படைப்பாளராகிய இறைவனைக் குறித்தும், அவரே எல்லா நன்மைக்கும் ஊற்றும் காரணமுமாயிருப்பவர் என்றும், அவரைத் தொழுது கொள்வது இறையன்பையும், அவரின் இரக்கத்தையும் பெற்றுக் கொள்ள வழி செய்யும் என்னும் கருத்தியல்களை பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்லியிருக்க வேண்டும்.

மனிதனை இறைவன் படைத்தபோது மிகச் செம்மையான வனாகவே படைத்தார். ஆனால் இறைவார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் சத்துருவாகிய சாத்தான் என்னும் பிசாசின் வார்த்தைகளை உண்மையென்று நம்பி இறையன்பிலிருந்து விழுந்து முதல் தம்பதியினர் பாவத்திற்குட்பட்டு இறைவனின் சமூகத்தை இழந்து போனார்கள். எப்பொழுதெல்லாம் இறைவனின் சமூகத்திற்குள் வர மனிதன் விரும்புகிறானோ, அப்பொழுதெல்லாம் ஒரு மிருகத்தைப் பலி கொடுத்து அதன் இரத்தத்தைத் தன் பாவப்பரிகாரமாக கையிலேந்திக் கொண்டு தமது சமூகத்திற்குள் வந்து இறைவனைத் தரிசிக்கும் ஏற்பாட்டை இறைவன் செய்திருந்தார். எனவே, பலி இரத்தத்துடனேயே இறைவனுடைய சமூகத்திற்குள் செல்ல முடியும் என்பது இறைவனின் ஏற்பாடு. இதை மதித்து பின்பற்றுவோரை கடவுள் ஆசீர்வதித்து வந்தார்.

இந்தப் பின்னணியிலேதான் காயீனும் ஆபேலும் இறைவனுடைய சமூகத்தைத் தேடி வந்தனர். காயீன் பயிர்த்தொழில் செய்தவனாகையால் தன் நிலத்தில் விளைந்த காய்கனிகளை பலிபீடத்தின் மேல் வைத்து நின்றான். ஆபேலோ ஒரு ஆட்டுக்குட்டியை அடித்து அதன் இரத்தத்தைப் பலிபீடத்தில் சிந்தி அவனும் வந்து நின்றான். இறைவன் ஆபேலையும் அவன் காணிக்கையையும் ஏற்று, அங்கீகரித்து ஆசீர்வதித்தார். காயீனையும் அவன் படைத்தவைகளையும் ஏற்கவில்லை. காரணம் காயீன் கடவுளின் ஏற்பாட்டை மதிக்காமல் தன் எண்ணப்படிதான் கடவுள் நடக்கவேண்டுமென எண்ணித் துணிந்தான். எனவே அவன் தவறு செய்தவனானான். இறை அனுக்கிரகத்தை இழந்தான். இதனால் கடுங்கோபம்கொண்ட காயீன் பொறாமை நிறைந்தவனாய் தன் தம்பி ஆபேலை கொடூரமாகக் கொலை செய்து உலகின் முதல் கொலைகாரனாக மாறிவிட்டான். கணநேரம் பொங்கியெழுந்த கோபத்தை அடக்காதவனாக மாபெரும் பாவத்தைச் செய்து விட்டான். இருப்பினும் இறைவன் காயீனைத் தேடி வந்தார். காயீனைப் பார்த்து, “உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே? என்றார்”

குற்றம் புரிவது மனித இயற்கை; ஆனால் செய்த குற்றத்திற்காக மனம் வருந்தித் திருந்துவதே மனிதனுக்கு தேவன் கொடுத்திருக்கும் மிகப்பெரிய ஆற்றல். ஒரு நிமிடம், எவ்வளவு பெரிய, கொடிய பாதகத்தைச் செய்துவிட்டேன்; இறைவா, அருள் கூர்ந்து என்னை மன்னிக்க வேண்டும் என காயீன் இறைவனிடம் கெஞ்சியிருப்பானேயாகில் கடவுளும் அவன் பாவத்தை மன்னித்து அவனுக்கு இரக்கம் காட்டியிருப்பார். ஆனால் காயீன் துணிகரமாகவும், துடுக்கான வார்த்தைகளையும் பேசி, என்றென்றும் பழியேற்கும் கடின வார்த்தைகளைப் பேசி விட்டான். என் சகோதரன் எங்கே என்று “நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவல்காரனா?” என்று திமிர் நிறைந்த வார்த்தைகளைப் பேசினான். விளைவு கடவுளின் மாபெரும் சாபத்தையே தனக்கும் தன் சந்ததிகளுக்கும் உரிமையாக்கிக் கொண்டான்.

அவனுடைய நாவை அடக்காது, எண்ணத்தைக் கட்டுப்படுத்தாது பேசியவார்த்தை சொல்லொண்ணா தீமையை காயீனின் வாழ்வில் ஏற்படுத்தி விட்டது. எனவே, மனிதர் தாங்கள் பேசும் வாயின் வார்த்தைகள் குறித்து எவ்வளவு கவனமாக இருக்க வேண்டுமென்பதற்கு காயீன் ஒரு அடையாளம். இதையே வள்ளுவப்பெருந்தகை,

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகப்பர் சொல் இழுக்குப்பட்டு" என்றார் (திருக்குறள் 13:7)

யாராக இருப்பினும் நாவைக் காக்கணும். இல்லையேல் அவர்களுடைய வார்த்தையாலேயே தீமைக்குட்படுவர் என்பது.

மேலும் சிந்தனைக்கு :

யுதிஷ்டிரர் (தருமர்) சக்கிரவத்தியாக முடிசூட்டு முன் வழக்கப்படி ராஜசூய யாகம் தொடங்குகிறது. யாகத்திற்கு முதல் மரியாதை கிருஷ்ணருக்கே கொடுப்பது என பீஷ்மர், விதுரர் போன்ற மாபெரும் மனிதர்களின் ஒப்புதலுக்குப் பின்னர் முடிவெடுக்கப்படுகிறது. அதன்படி கிருஷ்ணர் வருகிறார். அங்கேயிருந்தவர்களில் சிசுபாலன் மட்டும் இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொள்ளவில்லை; அத்துடன் அனைத்து பெரியவர்களையும் மிகக் கீழ்த்தரமான, கண்ணியமில்லா, சபை ஒழுக்கமில்லா வார்த்தைகளால் திட்டுகிறான். விளைவு அந்த வார்த்தைகளினிமித்தமே கிருஷ்ணரின் சக்ராயுதத்தால் சிசுபாலன் சிரசறுந்து விழுகிறது. சிசுபாலன் மடிந்தான். ஒருவர் பேசும் வார்த்தைகள் கண்ணிய மற்றுப்போனால் அந்த வார்த்தைகளே அவருடைய அழிவுக்கு வித்தாகி விடும் என்பது. (காண்க. Mahabharata by C. Rajagopalachari P. 80-81 also, வியாசபாரதம் தொகுதி 1 பக். 545 - 553)

14. ஒழுக்கம் உயிரினும் மேலானது

ரூத்தின் சரித்திரம் திருக்குறள் : ஒழுக்கமுடைமை (14)

யூதேயா நாட்டில் பஞ்சம் ஏற்படவே எலிமலேக்கு என்னும் மனிதன் தன் மனைவி நகோமி மற்றும் இரண்டு ஆண் பிள்ளைகளான மக்லோன், கில்லியோன் என்பவர்களுடன் பஞ்சம் பிழைக்கும் எண்ணத்துடன் தன் சொந்த நாட்டைவிட்டு மோவாப் தேசம் வந்தடைகிறான். அங்கே மக்லோனுக்கு ரூத் என்னும் பெண்ணையும், கில்லியோனுக்கு ஓர்பாள் என்னும் பெண்ணையும் மணமுடித்து வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். காலப்போக்கில் பல சோகமான சம்பவங்கள் இந்தக் குடும்பத்தில் நேரிடுகின்றன. குடும்பத் தலைவனான எலிமலேக்கு மரிக்கிறான், தொடர்ந்து இரு மகன்களும் மரித்து, நகோமி, ரூத், ஓர்பாள் என்னும் மூன்று பெண்களும் தனிமரங்களாகி விடுகின்றனர். இந்த சமயத்தில் யூதேயா நாட்டில்

ஏற்பட்ட செழிப்பு பற்றியும், வளமை பற்றியும் இவர்களுக்கு செய்தி வந்தது. எனவே, நகோமி தன் சொந்த தாய் நாட்டிற்குச் செல்ல முடிவெடுத்து தன் இரண்டு மருமக்களான ரூத், ஓர்பாளைப் பார்த்து, "நீங்கள் இருவரும் உங்கள் தாய் வீட்டிற்குத் திரும்பிப் போங்கள்; மரித்துப் போனவர்களுக்கும் எனக்கும் நீங்கள் தயை செய்ததுபோல, கர்த்தர் உங்களுக்கும் தயை செய்வாராக. கர்த்தர் உங்கள் இருவருக்கும் வாய்க்கும் புருஷனுடைய வீட்டிலே நீங்கள் சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வாராக என்று சொல்லி, அவர்களை முத்தமிட்டாள்."

தன் மாமியாரின் சொல்லைக்கேட்டு ஓர்பாள் அவளை முத்தஞ் செய்து தன் தாய் வீட்டிற்குச் சென்று விட்டாள். ஆனால் ரூத்தோ தன் மாமியாரை முத்தஞ்செய்து, அதெப்படி அம்மா, இந்த வயதான காலத்தில் தங்களை தனியே போக விட்டு நான் மட்டும் என் சுகம் தேடிச் செல்வது ஒழுக்கமாகுமா? நற்செயலாகுமா? நான் தனியே செல்லும் பேச்சுக்கே இடமில்லை; உம்மோடே நானும் வந்து உங்களைப் பராமரிப்பேன் என்றாள். ரூத் பேசுகிறாள், அம்மா, "நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மை விட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து என்னோடே பேச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும், அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்," என்றுரைத்தாள்.

இருவரும் யூதேயா நாட்டிற்குச் சென்றார்கள். தன் கைப் பிரயாசத்தினாலும், உழைப்பாலும் வயதான தன் மாமியாரை பராமரித்து வந்தாள். தனக்கென்று ஒரு வாழ்வைத் தேடி வாலிபர்களின் பின்னே ஓடாமல், தன் ஒழுக்கத்தையும், உத்தமத்தையும் சிறப்பாகக் காத்துக் கொண்டாள். ஒழுக்கமான இவளுடைய பொறுப்புள்ள நடக்கையைக் கண்ட இறைவன் போவாஸ் என்னும் பேர் கொண்ட, நகோமி, ரூத்துக்கு மிகவும் உறவின் முறையான மிக செல்வந்தனான, பல சிறப்புகள் கொண்ட மனிதன் ரூத்துக்கு கணவானாகும்படி அருள் செய்தார். ரூத்தைப் பார்த்து போவாஸ் பேசுகிறார்; "பெண்ணே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக, நீ தரித்திரமும் ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது... நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள்," என்றார்.

போவாஸ் ரூத் திருமணம் நடந்தது. ஓபேத் என்னும் குமாரனைப் பெற்றெடுத்து வரப்போகும் தாவீது பேரரசரின் கொள்ளுப்பாட்டியாகவும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பூர்வீக பாட்டியாகவும் வரலாற்றில் வாழ்ந்த பேறுபெற்றாள். இது அவளுடைய ஒழுக்கமான வாழ்விற்குக் கிடைத்த பரிசு. ரூத்தின் சரித்திரம் திருவள்ளுவரின் அழியா அமர வார்த்தைகளுக்கு சாட்சியம் கூறுவதாக அமைந்தது.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (திருக்குறள் 14:1)

ஒழுக்கமே உயர்வைத் தரவல்லது; எனவே சான்றோர் ஒழுக்கத்தையே தமது உயிரினும் மேலானதாகக் கருதி வாழ்வார்கள்.

ஓர்பாள் அவ்விதம் வாழாத காரணத்தால் வயதான மாமியாரை விட்டு ஓடிப்போனவள் என்னும் பழி சுமந்தவளானாள். இதையே திருவள்ளுவர்,

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி" (திருக்குறள் 14:7)

ஒழுக்கத்துடன் வாழ்பவர் மேன்மையடைவர்; அவ்விதம் வாழாதார் பழியை அடைவர் என்றுரைத்தார்.

மேலும் சிந்தனைக்கு :

ஒழுக்கங்கெட்ட ராவணனுடன் சேர்ந்து தர்மத்தை எதிர்த்துப் போரிட்டு மடிந்து வீழ்ந்தான் கும்பகர்ணன். ராவணனாகிய அதர்மத்தை விட்டு நீங்கி ஒழுக்க சீலனாகிய இராமபிரானையடைந்து மேன்மையடைந்தான் விபீடணன்.

" In the Ramayana, Kumbhakarna and Vibheeshana represent these two different types"

ஒழுக்கமே மேன்மைதரும்; ஒழுக்கமின்மை அழிவை உண்டாக்கும். (for further details Read 'Raamaayana' by C. Rajagopalachari (Rajaji) P.266).

15. விளியாது நிற்கும் பழி / அழியாது நிற்கும் குற்றம்

11 சாமுவேல் 11-ம் அதிகாரம் திருக்குறள் : பிறன்இல் விழையாமை (15)

"எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி" (திருக்குறள் 15:5)

இது மிகவும் எளிதானதென எண்ணிப் பிறர் மனைவியிடம் முறைதவறிச் செல்பவன் எந்நாளும் அழியாத பழியை அடைவான்.

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு" (திருக்குறள் 15:8)

அடுத்தவரின் மனைவியை விரும்பி நோக்காத குணமே சான்றோர்க்கு அறமும் ஒழுக்கமுமாக அமையும் என்பது.

பேரரசன் தாவீது, இறைவனின் இருதயத்திற்கு மிகவும் ஏற்றவனாக விளங்கிய மனிதன். இறைவன் தமது கருணையாலும், இரக்கத்தாலும், ஒரு சாதாரண ஆடு மேய்க்கும் சிறுவனாக இருந்த அவரைத் தமது இஸ்ரவேல் என்னும் மக்களுக்கு அதிபதியாகவும் ராஜாவாகவும் ஏற்படுத்தியிருந்தார். ராஜாக்கள் யுத்தத்திற்குச் செல்லும் காலத்தில் தாவீதரசனின் படைகளும் யுத்தகளத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்த வேளை. தாவீதரசனோ படைகளுடன் செல்லாது தன் அரண்மனையில் தங்கிவிட்டார்.

அது ஒரு பொன்மாலைப்பொழுது; துயில் விட்டெழுந்த அரசன் அரண்மனை உப்பரிகைமேல் உலாவிக் கொண்டிருக்கிறார். அரண்மனையைச் சுற்றிலும் படைத்தலைவர்களின் இல்லங்கள். அவ்வித இல்லங்களுள் ஒன்று உரியா என்னும் படைத்தலைவனுடையது. அவன் மனைவி பேர் பத்சேபாள், "வெகு சௌந்தரவதியாயிருந்தாள்". அரசன் உப்பரிகைமேல் உலாவும் சமயம் அந்தப் பெண் தன் வீட்டில் ஸ்நானம் பண்ணிக்கொண்டிருந்தாள். அவளுடைய அழகைக் கண்ட தாவீதரசர், பிறன் மனைவியாயிற்றே என்று கருதாமல் அவள் யார் என்று விசாரித்து, பின்னர் அரண்மனைக்கு அழைத்து வரச்சொல்லி அவளைக் கெடுத்து விடுகிறார்.

தான் செய்துவிட்ட இந்த தவறை மறைக்க பின்னர் அவளுடைய கணவனான உரியாவைக் கொன்றுபோட வகை செய்கிறார். உரியா என்னும் இந்த படைத்தலைவனோ ராஜபக்தியும், தேசபக்தியும் கொண்ட நேர்மையான மனிதன். தன் படைகளின் தளபதியான யோவாபிடம் கூறி கொடூரமான விதத்தில், யுத்தத்தில் மடிந்து விட்டான் என்று மற்றவர்கள் கருதும் சூழ்நிலையை ஏற்படுத்தி, உரியா என்னும் பத்சேபாளின் கணவனைக் கொன்று, அவன் மனைவியை தன்னகப்படுத்திக் கொள்கிறார். அரசனாகிய தான் தன் குடிமக்களைக் காப்பாற்றவேண்டியவன் என்னும் நிலை மறந்து, தனக்கு எளிது என்னும் நிலையைப் பயன்படுத்தி, அபலைப் பெண்ணைக் கற்பழித்து, அவள் கணவனையும் கொன்ற இந்த செயல் இறைவனின் பார்வையில் மிகக் கொடுமையானதாகக் காணப்பட்டது.

தன் தவறுகளுக்காக மனம் மிக வருந்தி இறைவனிடம் மன்னிப்பு பெற்றுக் கொண்ட போதிலும், தாவீதரசரின் அற்புதமான வாழ்க்கையில் மிகப்பெரிய கரும்புள்ளியாக, என்றென்றும் அழியாப் பழியையுடையதாக இந்நிகழ்வு விளங்கியது. இந்தப் பழியினிமித்தம்

தாவீது அனுபவித்த அவமானங்களும், துன்பங்களும் சொல்லத் தரமன்று. நாடு இழந்து, தான் ஒளிப்பிடத்திலே செய்ததை தன் வயிற்றில் பிறந்த சொந்த மகனே தன் மனைவியருடன் உப்பரிகைமேல் பட்டணத்தின் அனைத்து மக்களும் காண அவன் செய்த அருவருப்பு, தாவீதரசரின் வாழ்வில் அழியா அவமானமாக அமைந்து விட்டது. எனவேதான், மனுமக்களுக்கு திருவள்ளுவர் கூறும் மேலே காணும் அறிவுரை எக்காலத்திற்கும் ஏற்றதாகவும் பொருத்தமுடையதாகவும் விளங்குகிறது.

மேலும் சிந்தனைக்கு :

"கெட்டாய் கிளையொடு; நின்வாழ்வை எலாம்
சுட்டாய்; இது என்ன தொடங்கினை? நீ
பட்டாய் எனவே கொடு பத்தினியை
விட்டு ஏகுதியால் விளிகின்றிலையால்"

"பேதாய்! பிழை செய்தனை பேருலகின்
மாதா அனையாளை மனக் கொடு நீ
யாதாக நினைத்தனை? எண்ணம் இலாய்!
ஆதாரம் நினக்கினி யார் உளரோ?"

(கம்பராமாயாணம் சடாயு உயிர் நீத்த படலம் 94,95)

கபடவேடம் பூண்டு கயவனான இராவணன் அன்னை சீதா பிராட்டிமுன் நிற்கிறான். அன்னையைக் கவரும் எண்ணத்துடன் இராவணன் பேசியதைக் கேட்ட அன்னை சீதை திடுக்கிட்டாள். அடாதகோபம் கொண்டாள்; பாம்பு போலச் சீறினாள்; "துஷ்டா! யாரைப் பார்த்து என்ன வார்த்தை சொன்னாய்? மூடனே! நான் மற்றொருவரின் மனைவி என்பதை மறந்து விட்டாயா?..." சீதா பிராட்டியின் கதறலையும் பொருட்படுத்தாது வன்முறையால் கவர்ந்து சென்ற இராவணனை வழி மறித்து ஜடாயு என்னும் கழுகரசன், "இராவணா! ... என்னுடைய அறிவுரையைக் கேள்; இராமன் தர்மவான்; பேராற்றல் பொருந்தியவன்; அவனுடைய மனைவியைத் தூக்கிச் செல்வது முறையற்றது; அவளை விட்டு விடு; இலங்கை மன்னான நீயே தர்மத்தைக் கைவிட்டு நடக்கலாமா? உன்னை மக்கள் அற்பன் என்று எண்ணமாட்டார்களா? தர்மத்தை அனுஷ்டித்து அவளை விட்டு விடு; தீய வழியில் செல்லாதே?" என்றெல்லாம் கூறியும் சிறுமதி படைத்த இலங்காபுரி அரசன் இந்த பாவச் செயலாலேயே மடிந்தான்; சாகாப் பழியையும் சுமந்தான்.

(வால்மீகி இராமாயாணம், வர்த்தமானன் பதிப்பகம் தொகுதி 2 பக் 730-736)

16. இகழ்வார்ப் பொறுத்தல் தலை

1 சாமுவேல் 15:19 திருக்குறள் : பொறையுடைமை (16)

தாவீதரசர் புகழின் உச்சியிலிருந்த காலம். அப்சலோம் என்னும் பேர் கொண்ட அவருடைய குமாரர்களில் ஒருவன் ராஜாவுக்கு விரோதமாக செயல்பட ஆரம்பித்தான். அப்சலோம் தனக்காக இரதங்களையும், குதிரைகளையும், ஏவலாட்களையும், சேவகர்களையும் சம்பாதித்தான். காலைதோறும் ராஜபட்டணத்தின் ஒலிமுக வாசலில் அமர்ந்து ராஜாவினிடம் நியாயம் கேட்பதற்காக வரும் அனைவரையும் தானே வசப்படுத்தி ஒரு பெரிய மக்கள் கூட்டத்தையும் சம்பாதித்த பின்னர், ஒரு நாள் எப்ரோன் என்னும் பட்டணத்தில் தன்னைத்தானே சமஸ்த இஸ்ரவேலின் ராஜாவாகப் பிரகடனம் செய்து கொண்டான். தாவீதரசரைக் கொன்று தன் ராஜ்ய பாரத்தைத் திடப்படுத்திக் கொள்ள எருசலேம் பட்டணம் நோக்கி அப்சலோம் வருகிறான் என்பதைக் கேள்வியுற்ற தாவீதரசர் தமது உண்மையான ஊழியக்காரர்களை அழைத்துக் கொண்டு இரவோடிரவாக பட்டணத்தை விட்டுத் தப்பிச் சென்றார். அவர் மக்னாயீம் என்னும் பட்டணம் வரை செல்லும் வழியில் பகூரிம் என்னும் இடம் வந்தபோது முந்தின ராஜாவாகிய சவுலின் குடும்பத்தைச் சேர்ந்த சீமேயி என்னப்பட்ட மனிதன் தாவீதுக்கு எதிர்ப்பட்டான்.

தாவீதுக்கு எதிராக மிகக் கடுமையான தூஷண வார்த்தைகளை உச்சரித்து "தொலைந்துபோ, தொலைந்துபோ" என்று கூறி தாவீதின் மேலும், மிக பலசாலிகளான அவருடைய மனிதர்கள் மீதும் கற்களை எறிந்தான். அப்போது அபிசாய் என்னும் பேர் கொண்ட தாவீதரசரின் பலவான்களில் ஒருவன் அரசரை நோக்கி, "அந்த செத்தநாய் ராஜாவாகிய என் ஆண்டவனை தூஷிப்பானேன்? நான் போய் அவன் தலையை வாங்கிப் போடட்டுமே என்றான்." ஆனால் தாவீதரசரோ அவனைக் கொல்லச் சம்மதியாமல், என் கர்ப்பப் பிறப்பானவனே எனக்கு விரோதமாக எழும்பி விட்டபோது, இவன் என்ன செய்வான்... இவன் தூஷிக்கட்டும்; இறைவன் இவனுக்கு அனுமதி கொடுத்தார் என்றார். அந்தநேரம் அந்த புல்லறிவு படைத்த சிறுமதியோனின் வார்த்தைகளைப் பொறுத்துக் கொண்ட செயல் தாவீதரசரின் வாழ்வில் மிகச் சிறப்பினை ஏற்படுத்திற்று.

சில நாட்கள் கழிந்தது. அப்சலோம் தன் படைகளோடு ராஜாவுக்கு எதிர்த்து வந்தபோது, இறைவனின் தண்டனை அவன் மீது இறங்கி கொடுமையான விதத்தில் செத்துப்போனான். பின்பு தாவீது எருசலேம் பட்டணம் நோக்கித் திரும்பி வந்தபோது அதே சீமேயி

அரசருக்கு எதிர் கொண்டு வந்து, பாதங்களில் வீழ்ந்து தன்னை மன்னிக்கும்படி கெஞ்சினான். அப்போதும் அபிசாய், கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரைச் சீமேயி தூஷித்தபடியினால், அவனை அதற்காகக் கொல்ல வேண்டாமா என்றான். அப்போதும் தாவீது அந்த மனிதனை மன்னித்துவிட்டு தமது பயணத்தைத் தொடர்ந்தார். இந்த சம்பவங்களை நினைக்கும் போதெல்லாம் தெய்வப்புலவரின் அருள் நிறைந்த வார்த்தைகளே நினைவில் நிற்கின்றன.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை (திருக்குறள் 16:1)

தன்னையே வெட்டி குழிதோண்டுவோரையும் இப்பூமி தாங்கி நிற்குமாப் போல் சிறப்பான மக்கள் தம்மை இகழ்வோரையும் பொறுத்துக் கொள்வர் என்பது.

உண்ணாது நோற்பார் பெரியார் பிறர் சொல்லும்
இன்னாச் சொல் நோற்பாரின் பின் (திருக்குறள் 16:10)

உண்ணா நோன்பு காக்கும் பெரியோரை விடவும் தம்மைப் பழிப்போரைப் பொறுத்துக் கொள்பவரே மேலானவர் என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டபோது, அவரைப் பரிகாசம் பண்ணி, அவர்மேல் துப்பி, அவரை அடித்து இறுதியில் சிலுவையில் கொன்ற மக்களுக்காக இயேசு செய்த ஜெபம், தம்மை இகழ்வோரை அவர் பொறுத்து நின்ற மோலான செயலைப் பறை சாற்றிற்று. அப்பொழுது இயேசு, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்" (லூக்கா 23:24).

17. அழுக்காறு இலாத இயல்பு

(பொறாமை கொள்ளாத வாழ்வு)

எண்ணாகமம் 16-ம் அதிகாரம் திருக்குறள் : அழுக்காறாமை (17)

இஸ்ரவேல் மக்களின் வரலாற்றில் மோசே ஓர் ஒப்பற்ற தலைவர். தன் மக்களின் விடுதலைக்காக அவர் உள்ளத்தில் காணப்பட்ட ஆர்வத்தையும், அர்ப்பணிப்பையும் இறைவன் கண்டார்.எகிப்தின் சகல சாஸ்திரங்களிலும் மிக்க தேர்ச்சி பெற்றவரும், அரண்மனை சுகவாழ்வில் திளைத்திருக்கும் மேன்மை பெற்றவருமான மோசே, அவற்றையெல்லாம் துச்சமென உதறித் தள்ளி, அடிமைத்தனத்தின் நுகங்களுக்குள் அடைபட்டுக் கிடந்த தம்மக்களை விடுதலை செய்யும் ஏக்கத்துடன் இறங்கி வந்த மாமனிதர். மோசேயின் இந்த தியாகங்களையெல்லாம் மறந்து விட

இறைவன் ஒரு சாதாரண மானிடன் அல்ல. எகிப்தின் அரண்மனை வாழ்வைத் துறந்து ஓடி இப்போது நாற்பது ஆண்டுகள் ஆயிற்று. ஒரு நாள் இறைவன் மோசேயைச் சந்தித்து, மோசே, "இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் (அடிமைத்தனத்தின் வேதனைகளினால்) என் சந்நிதியில் வந்து எட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன். நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்திற்கு (எகிப்தின் அரசன்) அனுப்புவேன் வா என்றார்." பல தடுமாற்றங்களுக்குப் பின்னரே, மிகவும் பயத்துடன் இந்த விடுதலைப் பணியினை மோசே தன்மேல் ஏற்றுக் கொண்டார். இறைவன் அருளால் அவருக்கு உதவியாக மோசேயின் அண்ணன் ஆரோன் வந்து சேர்ந்தார்.

பலமிகுந்த பல போராட்டங்களுக்குப் பின்பு இஸ்ரவேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, தங்களுடைய மூதாதையர்களுக்கு இறைவன் வாக்குப் பண்ணியிருந்த கானான் தேசம் நோக்கி அவர்களை பல ஆண்டு காலம் வனாந்திர மார்க்கமாக, தினந்தோறும் இறைவனின் அற்புத அருள் பெற்று நடத்திக்கொண்டு வந்தார். இந்நிலையில் மோசே ஆரோன் என்ற இந்த இருதேவமனிதர்களுக்கு இஸ்ரவேலின் நடுவே காணப்பட்ட புகழ், மேன்மை இவற்றைக் கண்டு இருதயத்தில் பொறாமை, அழுக்காறு கொண்டவர்களாக சிலர் எழும்பினர். அவர்களுள் லேவி கோத்திரத்தில் பிறந்த கோராகும், ரூபானிய வம்சத்தில் பிறந்த தாத்தான் அபிராம், ஓன் என்னும் பெயர் கொண்டவர்களும், மேலும் மோசேயினால் தலைவர்களாக ஏற்படுத்தப்பட்ட இன்னும் இருநூற்றைம்பது பேரையும் கூட்டிக் கொண்டு மோசே, ஆரோன் ஆகிய தேவ மனிதர்களுக்கு முன்பு பொறாமையினால் ஆக்ரோஷமாக எழும்பினர். அவர்களுடைய உள்ளத்தில் எரிந்த பொறாமைத் தீயானது மக்களுக்குள் மாபெரும் கலவர சூழ்நிலையை உருவாக்கிற்று. விளைவு, அவர்களின் உள்ளத்தில் எழுந்த அந்த பொறாமையாகிய அழுக்காறு என்னும் கொடிய தீ அவர்களை பட்சித்துப்போட்டது. பூமியானது தன் வாயைத் திறந்து கோராகையும் அவன் கூட்டத்தாரையும் விழுங்கிப்போட்டது. விவிலியம் உரைக்கும் பயங்கரமான வார்த்தைகள், "... அவர்கள் நின்றிருந்த நிலம் பிளந்தது; பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும் அவர்கள் வீடுகளையும், கோராகுக்குரிய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப்போட்டது. அவர்கள் தங்களுக்கு உண்டானவை எல்லாவற்றோடும் உயிரோடே பாதாளத்தில் இறங்கினார்கள்; பூமி அவர்களை மூடிக்கொண்டது; இப்படி சபையின் நடுவிலிருந்து அழிந்து போனார்கள்." பொறாமை தன்னையுடையவர்களை எவ்விதம் அழித்துப் போடுகிறது என்பதற்கு

இந்நிகழ்வு எத்தனை பெரிய சாட்சி என்பதையறிந்து, **பொறாமை இல்லாத இதயம் தனக்கு அருளப்பட வேண்டும் என ஒவ்வொரு மனிதனும் கடவுளிடம் வேண்டிப்பெறுவது அவசியம்.** எனவேதான் வள்ளுவப்பெருந்தகையும்,

"ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு" (திருக்குறள் 17:11)

என்றும்,

"அழுக்காறு உடையார்க்கு அதுசாலும்; ஒன்னார்
வழுக்கியும் கேடின் பது" (திருக்குறள் 17:5)

என்றும் உரைத்தார்.

பொறாமை கொண்டோருக்கு கேடு விளைவிக்க வேறு பகைவர்கள் தேவையில்லை; அவர்கள் உள்ளத்திலுள்ள பொறாமையே அவர்களை அழித்து விடும் என்பது.

மேலும் சிந்தனைக்கு :

திருதராஷ்டிரரும் பாண்டுவும் சகோதரர். திருதராஷ்டிரனின் புதல்வர்கள் துரியோதனன் முதலான நூறுபேர்; பாண்டுவின் புதல்வர் யுதிஷ்டிரர் முதலான ஐவர். தனது புதல்வர்கள் தீயவர்கள் என்பதையறிந்த திருதராஷ்டிரர் நாட்டைப் பிரித்து காண்டவப் பிரஸ்தம் என்னும் பெயரில் பாதிராஜ்யத்தை தருமரிடம் ஒப்படைத்தார். தருமர் தமது நான்கு தம்பிகளுடனும், கண்ணபெருமான், வியாசர் ஆகியோரின் ஆசியுடன் இந்திரனால் அனுப்பப்பட்ட விஸ்வகர்மாவின் ஆற்றலில் 'இந்திரப் பிரஸ்தம்' என்னும் ஓர் ஒப்பற்ற மாநகரத்தை உருவாக்கினர். தருமர் சக்கிரவர்த்தியாக முடிசூட்டப்பட ராஜசூயயாகம் செய்யப்பட வேண்டும். அந்த யாகத்திற்காக அனைத்து தேச அரசர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். அப்போது அங்கு வந்து பாண்டவர்களின் இந்திரபிரஸ்தத்தின் அரண்மனைகள் ஒன்றில் தங்கியிருந்த துரியோதனன் அதன் அழகையும், பிரமாண்டமான அதன் அமைப்பையும், யுதிஷ்டிரருக்கு ஏற்பட்டிருந்த மாட்சிமையையும் கண்ணுற்றபோது உள்ளத்தில் பொறாமை என்னும் அழுக்காறு தொற்றிக் கொண்டது. அவனுடைய எலும்பை உருக்க ஆரம்பித்தது (நீதிமொழிகள் 14:30). அந்த பொறாமைத் தீதான் வளர்ந்து வளர்ந்து அதன் ஜீவாலையில் அஸ்தினாபுரம், துரியோதனாதிகளும், அவனைச்சார்ந்த அத்தனை மன்னர்களும், பெருமைக்குரிய பலரும் அழிந்து ஒழிந்தனர். **பாரதப் போருக்குக் காரணமே அங்கு தோன்றிய பொறாமைத் தீதான் என்பது மறுக்க இயலா உண்மை.**

18. நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றும்

(பிறர் பொருளை அநியாயமாகக் கவர்தல்)

1 இராஜாக்கள் 21-ம் அதிகாரம் திருக்குறள் : வெஃகாமை (18)

இஸ்ரவேலின் ராஜா ஆகாப். சமாரியாவில் அவருடைய அரண்மனை. அந்த அரண்மனைக்கு அருகில் நாபோத் என்னும் குடியானவன் வாழ்ந்து வந்தான். அரண்மனைக்கருகே அந்த நாபோத்துக்கு ஒரு பூர்வீக நிலம் இருந்தது. அதுமட்டுமே அவருடைய பிதாக்களின் சுதந்திரமாகையால் அதில் திராட்சைத் தோட்டம் பயிரிட்டு. தன் கண்போல பாதுகாத்து வந்தார். அரண்மனை உப்பரிகையின் மேல் உலாவும்போதெல்லாம் ஆகாபின் கண்கள் அந்த நிலத்தையும், நாபோத்தையும் பார்த்தன. ஒரு நாள் ஆகாப் ராஜா நபோத்தை அழைத்து, “உன் திராட்சத் தோட்டம் என் வீட்டிற்கு அடுத்திருக்கிறபடியால், அதைக் கீரைக் கொல்லையாக்கும்படி எனக்குக் கொடு, அதைப் பார்க்கிலும் நல்ல திராட்சைத் தோட்டத்தை அதற்குப் பதிலாக உனக்குத் தருவேன்; அல்லது உனக்கு வேண்டுமானால் அதின் விலைக் கிரயமான பணத்தைத் தருவேன் என்றான்.” ஆனால், நாபோத்தோ, “இது என் பூர்வீக நிலம்; என் பிதாக்கள் எங்களுக்கு விட்டுச் சென்றிருக்கும் குடும்ப சுதந்திரம்; ஆகையால் நான் என் காலத்தில் இதை விற்பதில்லை;” என்றுரைத்தார். ஏனெனில் இறைவனுடைய பிரமாணம் இஸ்ரவேல் புத்திரரின் சுதந்திரம் ஒரு கோத்திரத்தை விட்டு, வேறு கோத்திரத்திற்குப் போகாதிருக்கும்; இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின் சுதந்தரத்திலே நிலை கொண்டிருக்க வேண்டும்” என்றுரைக்கிறது (எண்ணாகமம் 36:7). தன்பூர்வ சுதந்திரத்தை விற்றுப்போடுவது அன்று சாபத்தின் அடையாளமாக விளங்கிற்று. இந்தப் பின்னணியிலேயே நாபோத் ராஜாவுக்கு தன் நிலத்தை விற்க மறுக்கிறார்.

ஒரு தேசத்தின் ராஜாவாக இருக்கின்றவர் அத்தேச சட்டப் பிரமாணங்களையும் மதிக்க வேண்டும். ஆனால், ஆகாப் ராஜாவோ அந்த நிலத்தை தனக்காகக் கவர்ந்து கொள்வதிலேயே மிகக் கருத்தாய் இருந்தார். அவருடைய மனைவியாகிய யேசபேல் மிக அருவருப்பான ஒரு செயல் மூலம், பொய்ச் சாட்சிகள் மூலம் நாபோத்தின் மீது தீதான காரியங்களையும், ராஜ துரோக குற்றத்தையும் சுமத்தி நாபோத்தை கல்லெறிந்து கொன்று விடுகிறாள். அதன்பின்பு ஆகாப் ராஜா

அநியாயமாக அந்த நிலத்தை அபகரித்துக் கொள்கிறார். ராஜாவாகிய ஆகாப், அவருடைய மனைவியாகிய யேசபேல் இருவரின் செயல்கள் இறைவனின் பார்வையில் மிகப்பெரிய பாவங்களாகியது. இறைவனும் தமது தீர்க்கராகிய எலியாவை அழைத்து, "நீ அவனைப் (ஆகாப்) பார்த்து : நீ கொலை செய்ததும் எடுத்துக் கொண்டதும் இல்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார். நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்." யேசபேலைக் குறித்தும் கர்த்தர், "நாய்கள் யேசபேலை அரண்மனை மதில் அருகே தின்னும்" என்றார். கர்த்தர் சொன்ன வார்த்தையின் படியே ஒரு யுத்தத்தின் போது ஆகாப் மரிக்க அவனுடைய இரத்தத்தை நாய்கள் நக்கினது. அதேபோல அநியாயமாகக் கவர்ந்து கொண்ட அதே நிலத்தில் நாய்கள் யேசபேலின் மாம்சத்தைத் தின்றன.

எனவே, அநியாயமாக பிறருடைய செல்வங்களைக் கவர்ந்து கொள்ள நினைப்போர் அது தேவ கோபத்தைக் கொண்டு வரும் என அறிந்து அத் தீமையை தங்களிடமிருந்து அகற்றிடவேண்டும்.

திருவள்ளுவரும் இதையே வெஃகாமை (அநியாயமாக பிறர் பொருளைக் கவராதிருத்தல்) என்னும் அதிகாரத்தில் வலியுறுத்துகிறார்.

நடுவு இன்றி நன்பொருள் வெஃகின், குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும், (திருக்குறள் 18:1)

அநியாயமாகப் பிறர்பொருளை விரும்புகின்றவனின் குடி அழியும்; அவன் மேல் பல குற்றங்களும் அமரும்.

இறல் ஈனும் எண்ணாது வெஃகின் விறல் ஈனும்
வேண்டாமை என்னுஞ் செருக்கு (திருக்குறள் 18:10)

பின் விளைவுகள் எண்ணாது பிறர் பொருளை இச்சிப்பது அழிவைத்தரும்; அவ்வாறு செய்யாதிருப்பது புகழைத் தரும்.

மேலும் சிந்தனைக்கு :

"அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும், நியாயமாய்வந்த கொஞ்ச வருமானமே உத்தமம்" (நீதிமொழிகள் 16:8)

19. புறங்கூறான் என்றல் இனிது

(புறங்கூறாமையே இனியது)

எஸ்தர் சரித்திரம் திருக்குறள் : புறங்கூறாமை (19)

மொர்தகாய் என்னும் பேர் கொண்ட ஒரு யூதன். ஆமான் என்னும் பேர் கொண்ட ஒரு ஆகாகியன். யூதர்களுக்கும் ஆகாகியர்களுக்கும் இடையே இனப்பகை பல காலமாக இருந்து

வந்தது. மொர்தகாய் வாயில் காப்போனாகவும், ஆமான் அரசின் பிரபுக்களில் விசேஷித்தவனாகவும் மேதிய பெர்சிய சாம்ராஜ்யத்தின் தலைநகர் சூசான் மாநகரில் இருந்தனர். ஆமான் அரண்மனையை விட்டு வெளியே போகிறபோதும், உள்ளே வருகிற போதும் அனைத்து வாயில் காப்போரும் ராஜகட்டளையின்படி ஆமானுக்கு முன்பாக வணங்கி நமஸ்கரித்து வந்தனர். ஆனால், மொர்தகாய் மட்டும் ஆமானை வணங்குவதையும் நமஸ்கரிப்பதையும் தவிர்த்து வந்தார். ஏன் இப்படிச் செய்கிறீர் என மற்றவர்கள் வினவியபோதெல்லாம், "நான் யூதன்; இந்த ஆகாகியனுக்கு முன்பு நான் பணியமாட்டேன்" என மொர்தகாய் கூறி வந்தார். இதைக் கண்ணுற்ற, கேள்வியுற்ற ஆமான் மிகுந்த மூர்க்க கோபமூண்டவனாய் இந்த மொர்தகாயையும், அவன் சார்ந்த யூத குலமக்களையும் ஒரே நாளில் கொன்று போட வகை தேடினான்.

இந்தியா முதல் எத்தியோப்பியா வரையிலான 127 நாடுகளையும் ஆண்ட மேதிய பெர்சிய சாம்ராஜ்ய சக்கிரவர்த்தியான அகாஸ்வேருவிடம் சென்று, மொர்தகாய் மீதான தன் சொந்த பழியைத் தீர்த்துக் கொள்வதற்காக, சாம்ராஜ்யத்தின் எல்லைகளுக்குட்பட்ட அனைத்து நாடுகளிலும் வாழ்ந்த யூத குலத்தைச் சார்ந்த அனைத்து மக்களையும் குறித்து தவறான விதத்தில் பேசினான். யூதமக்களை கலகக்காரர்கள் என்றும், ராஜாவின் சட்டங்களைக் கைக்கொள்வ தில்லையென்றும் தவறாகப்பேசி, புறங்கூறி, கோள் சொல்லி, அம்மக்களை அழித்துப்போட ராஜாவின் சம்மதத்தையும் வாங்கி விட்டான்.

மிகுந்த ஆணவமும் பெருமையும் கொண்டவனாய் ஐம்பது முழ உயரத்தில் ஒரு தூக்குமரத்தை தன் மாளிகையின் முற்றத்தில் நாட்டி வைத்து, அனைத்து யூதமக்களையும் கொன்றுபோடும் அதே நாளில் மொர்தகாயை இந்த தூக்குமரத்தில் தூக்கி கொன்று போடுவேன் என்று ஆமான் மார்தட்டிக் கொண்டிருந்தான். ஆனால், காரியங்கள் வேறுவிதமாக உருவெடுத்தன. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ நினைத்த ஆமானின் எண்ணங்கள் சிதறிப்போக இறைவன் திருவிளையாடினார்.

சிறிது காலத்திற்கு முன்பு, ராஜாவைக் கொன்றுபோட சில பிரதானிகள் சதி செய்ததை மொர்தகாய் கண்டு பிடித்து அரசருக்கு அறிவிக்கவே, விசாரணை முடிவில் மொர்தகாய் கூறியது உண்மை என அறிந்து இந்த விஷயம் மொர்தகாயின் பெயரால் ராஜாக்களின் நாளாகமப் புத்தகத்தில் (King's Diary) எழுதி வைக்கப்பட்டது. மொர்தகாயையும், யூதமக்களையும் அழித்துப்போடுவதற்காக ராஜாவிடம் அனுமதி வாங்க ஆமான் வெகு துரிதமாக வந்தார். அந்த இரவு நேரம், ராஜா நித்திரைவராமல் தவிக்கவே தனது நாளாகமக் குறிப்புகளை வாசிக்கும்படி கூற, அதில் மொர்தகாய் ராஜாவின்

உயிரைக் காப்பாற்றிய செய்தி வந்த இடத்தில் நிறத்தும் படி கூறி, ராஜாவின் உயிரைக் காத்த மொர்தகாய்க்கு என்ன மரியாதை செய்யப்பட்டது என ராஜா வினவினார். ஒன்றும் செய்யப்படவில்லை என்று குறிப்பை வாசித்தவன் கூறுவதற்கும், மொர்தகாயைக் கொல்ல அனுமதி வாங்கும்படி ஆமான் அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது. "அங்கே வருவது யார்?" என ராஜா கேட்க, "ஆமான் வருகிறார்," என்றுரைத்தவுடன், ராஜா ஆமானைப் பார்த்து, "ராஜா கனம் பண்ண விரும்புகிற மனிதனுக்கு என்ன செய்யவேண்டும்" என வினவினார். ஆமானோ, என்னைத் தவிர ராஜா வேறு யாரைக் கனம் பண்ண விரும்புவார் என நினைத்து, "ராஜா கனம் பண்ண விரும்புகிற மனிதனுக்கு ராஜவஸ்திரமும் ராஜ முடியும் தரித்து பட்டத்துக் குதிரைமேல் ஏற்றி அவனுக்கு முன்பாக பிரதானி ஒருவன் வாழ்த்துச் சொல்லி அனைத்து ராஜ வீதிகளிலும் உலாவரவேண்டும்" என்றுரைத்தான். இதைக்கேட்ட ராஜாவும், "ஆமானே, உடனே சென்று வாயில் காப்போனாகிய மொர்தகாயுவுக்கு அப்படியே செய்" என்றார்.

இது மட்டுமா, ராஜாத்தி எஸ்தர் மூலம் ஆமான் யூத மக்களுக்கு எதிராக மாபெரும் புறங்கூறி, கோள் சொல்லி ராஜாவை ஏமாற்றின செய்தி தெரிவிக்கப்பட்டதால், ராஜா உக்கிரகோபமூண்டவராய் மொர்தகாயைக் கொன்று போட ஆமான் நாட்டின தூக்குமரத்தில் அவனையே தூக்கிக் கொன்று, யூதர்களை ஒட்டுமொத்தமாகக் கொல்ல நினைத்த அவனுடைய குடும்பத்தினர் அனைவரையும் கொன்றுபோட ராஜா ஆணையிட்டார். புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் முடிவு இதுதான்.

எனவே பிறருக்கு விரோதமாக புறங்கூறாமையாகிய கோள் சொல்லாமை என்னும் பண்பே மிக உயர்ந்தது என்பதை மனிதர் அறிய வேண்டும். இந்த செய்தியையே திருவள்ளுவரும் சிறப்பாக வலியுறுத்துகின்றார்.

"அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது" (திருக்குறள் 19:1)

ஒருவன் நல்லறம் குறித்துப் பேசாவிட்டாலும், பிறர் குறித்து புறம்பேசாமல் இருந்தால் அதுவே வாழ்வில் இனிதானதாக விளங்கும்.

இந்த செய்திகள்தான் பல குறள்களில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது,

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்.

காணாதபோது பிறரைப் பழித்து வாழ்வதைவிட சாவதுமேல் என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

அடுத்தவர் முகம் காணா நிலையில் அவர்கள் குறித்து புறம் பேசுதல் எத்தகைய தீமைகளை ஏற்படுத்தும் என்பதற்கும், தன்மீது எத்தகைய துன்பங்களை அது ஏற்றிவரும் என்பதற்கும் இராமாயாண மந்தரைக் கூனியின் வாழ்வே சாட்சி. தர்மவானும், அனைத்துயிர்களாலும் போற்றப்பட்டவருமான இராமபிரான் குறித்து கைகேயிடம் மந்தரை பேசிய சூனிய வார்த்தைகள் எத்தனை கேடுகளை உண்டாக்கி விட்டது. மந்தரை பேசுகிறாள்.

இராமனைப்பற்றி,

அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர்க்கேனும்
பெறலருந்திருப் பெற்றபின் சிந்தனை பிரிதாம்
மறம் நினைந்துமை வலிகில ராயினும் மனத்தால்
இறலு றும்படி இயற்றுவர் இடையறா இன்னல்

"இன்று உன்னிடம் நல்லவன்போல் நடிக்கும் இராமன் நாட்டின் அரசனாகி செல்வங்கள் பல பெற்ற பின் தன்னை யாரென்று காட்டுவான்; உனக்கு பெரும் துன்பங்கள் விளைவிப்பான்" என சத்தியத்தையே புறங்கூறித் திரிக்கின்றாள் கூனிமந்தரை.

அவ்விதமே இராமனின் தாய் கோசலை பற்றி,

புரியும் தன்மகன் அரசெனின் பூதலம் எல்லாம்
விரியும் சிந்தனைக் கோசலைக்கு உடைமையாம்; என்றால்,
பரியும் நின்குலப் புதல்வற்கும் உனக்கும் இப்பார்மேல்
உரியது என்? அவள் உதவிய ஒருபொருள் அல்லால்

(கம்பஇராமாயாணம் மந்தரை சூழ்ச்சிபடலம் 69-70)

தன்மகன் அரசனானால் கோசலையின் எண்ணங்களும் தீதாகும்; பின்னர் நீயும் உன் மகன் பரதனும் அவள் கையையே எதிர்பார்த்திருக்க வேண்டியதாகும் என்பது,

20. சொல்லற்க பயனிலாச் சொல்

ஆதியாகமம் 16-ம் அதிகாரம் திருக்குறள் : பயனிலசொல்லாமை (20)

ஆபிரகாமின் மனைவி சாராள் அம்மையார். ஆபிரகாமும் சாராளும் மிக மனமொத்த தம்பதியர். ஆனால், திருமணமாகி பல ஆண்டுகளாகியும் மகப்பேறற்றவர்களாக வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் இறைவன் ஆபிரகாமை நோக்கி, ஆபிரகாமே, வா என் பின்னால், நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்தில் உன்னை ஆசீர்வதித்து உன்னைப் பெருகப் பண்ணுவேன். உனக்கு ஒரு சந்ததியை உண்டாக்கி அந்தச் சந்ததியின் மூலமாக இந்த பேருலகை ஆசீர்வதிப்பேன் என்றுரைத்தார். ஆபிரகாமும் தான் எங்கே போகிறோம் என்பதே தெரியாதபோதும்

இறைவனின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, விசுவாசித்து புறப்பட்டுப் போனார். இறைவன் காண்பித்த கானான் என்னும் நாட்டிற்குள் ஆபிரகாம் அடிவைத்தவுடன் அங்கே பஞ்சம் உண்டாயிற்று. அது ஒரு விசுவாசப் பரீட்சை என்பதை அறிந்து கொள்ளாத ஆபிரகாம் இறைவன் பக்கம் தன் கண்களைத் திருப்பாது, கண்களுக்குச் செழிப்பாகக் காணப்பட்ட எகிப்து தேசம் நோக்கி தேவ அனுமதியின்றி பிரயாணம் செய்யலானார்.

எகிப்திற்குச் சென்றபோது பேரழகு வாய்ந்த சாராளை தன் சகோதரி என்று ஆபிரகாம் கூறியதினிமித்தம் அவளை எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் தனக்கு மனைவியாக்கிக் கொள்ளப் பார்த்தார். ஆனால், இறைவனோ பார்வோன் மன்னனை எச்சரித்து எத்தீமையும் நிகழாவண்ணம் செய்து, சாராளை திரும்பவும் ஆபிரகாமிடம் சேர்த்து, மீண்டும் விட்டு வந்த கானான் நோக்கி பிரயாணம் செய்யச் செய்தார். எகிப்தின் அரசன் பார்வோன் சாராளை அனுப்பும் போது வெறுங்கையுடன் அனுப்பாமல் ஆடு, மாடுகளும் மற்ற மிருக ஜீவன்களும், வேலைக்காரரும் வேலைக்காரிகளுமான திரள் செல்வத்துடன் அனுப்பினான். அவ்விதம் சாராளுடன் வந்த எகிப்திய வேலைக்காரப் பெண்களில் ஒருத்திதான் ஆகார் என்னும் பேருடையாள். சாராள் அம்மையாரின் அருகிலிருந்து பணிவிடை செய்யும் பேறுபெற்றாள்.

உன் சந்ததியினால் பூமியே ஆசீர்வதிக்கப்படும் என இறைவனின் வாக்கைப் பெற்றிருந்த போதிலும், காலங்கடந்தபோது சாராளின் இருதயத்தில் நம்பிக்கையும் குறையலாயிற்று. எனவே ஒரு நாள் தன் பிரிய கணவர் ஆபிரகாமை நோக்கி, "நான் பிள்ளைபெறாத படிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்; என் வேலைக்காரப் பெண்ணை மணமுடித்து அவளால் என் வீட்டைக் கட்ட வாரும் என்றழைத்தாள். சாராளின் ஆசையை நிறைவேற்ற ஆபிரகாமும் செவிமடுக்க, அதனால் ஏற்பட்ட இணைப்பில் ஆகார் கர்ப்பமுற்றாள்".

தான் கர்ப்பவதியானதைக் கண்டபோது, தன் எஜமானியும், கனத்திற்குரியவருமான சாராள் அம்மையார் அந்த வேலைக்காரப் பெண்ணிற்கு அலட்சியமாகத் தென்பட்டாள். அதன் விளைவு அவள் தன் அற்ப வார்த்தைகளால் தன் எஜமானியை பரிகாசம் செய்தாள். சொல்லத்தகாத வார்த்தைகளைப் பேசி சாராளின் மனம் வெகுவாக நோகும்படி செய்தாள். அவள் பேசிய அந்த பயனிலாச் சொற்கள் அவள் வாழ்க்கையில் சொல்லொண்ணாத் துயரை ஏற்படுத்தி, வீட்டை விட்டு துரத்தப்படும் நிலைக்கு அவளைக் கொண்டு போயிற்று. மனிதனின் நாவு குறித்து விவிலியம், நாவும் நெருப்புதான், அது அநீதி நிறைந்த

உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும் இருக்கிறது என்றுரைக்கிறது. நாவை சரியான கட்டுப்பாட்டிற்குள் வைக்காத காரணத்தாலேயே ஆகார் என்னும் பெண் அனைத்தையும் இழந்து பலவித துன்பங்களுக்குள்ளானாள். எனவேதான் வள்ளுவரும்,

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும் (திருக்குறள் 20:1) என்றார்.

பயனற்ற, தீமையானவைகளைப் பேசுவார் அனைவராலும் அவமானத்திற்குள்ளாவார்கள் என்பது,
ஆகையால்,

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல் (திருக்குறள் 20:10)

பயன்மிகுந்த சொற்களையே பேசுதல் வேண்டும்; பயனற்ற சொற்களைப் பேசாது தவிர்க்க வேண்டும்.

மேலும் சிந்தனைக்கு :

"அவர்கள் தள்ளப்பட்டு, கீழே விழும்படி அவர்கள் நாவுகளே அவர்களைக் கெடுக்கும்" (சங்கீதம் 64:8).

"ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின் தொடரக்கடவன்" (1 பேதுரு 3:10,11).

21. தீய பயக்கும் தீயவை

ஆதியாகமம் 37-50 திருக்குறள் : தீவினைஅச்சம் (21)

யாக்கோபு என்னும் பேர் கொண்ட ஒரு வம்சத்தந்தைக்கு 12 புதல்வரும் ஒரு புதல்வியும் இருந்தனர். புதல்வர்கள் பன்னிருவரில் பதினோறாவது புதல்வனின் பெயர் யோசேப்பு. அழகானவன்; மிக துடுக்கானவன்; தந்தை யாக்கோபுக்கு மிகவும் பிரியமானவன்; இறைவனிடம் அன்பு கொண்ட அவனிடம் இறைவனும் மிக அன்பு கொண்டிருந்தார். எனவே அக்காலத்திற்குரிய தமது விருப்பங்கள் செயல்களை தரிசனம், சொப்பனம் மூலம் இறைவன் அவனுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். தந்தையாகிய யாக்கோபு இவன் மேல் கொண்டிருந்த பிரியத்தினிமித்தம் அந்நாட்களில் பெரும் செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகளும், இளவரசர்களும் அணியத்தக்க பலவர்ண ஆடைகளை இவனுக்காகச் செய்து, அவனுக்கு அணிந்து பார்த்து மகிழ்ந்து வந்தார். இது யோசேப்பின் மூத்த அண்ணன்மார் பத்துபேருக்கும் மிகவும் எரிச்சலை ஏற்படுத்திற்று; எரிச்சல் பொறாமையாக மாறினது; பொறாமை அவன் மீது மிகக் கசப்பு நிறைந்த வெறுப்பாக மாறிற்று.

யோசேப்பு அடிக்கடி சொப்பனம் கண்டு அதைக் கூறுவானாகையால் அவனுக்கு ‘சொப்பனக்காரன்’ என்ற பெயர் வழங்கி, அவன் சகோதரர் பரிகாசம் செய்து வந்தார்கள். ஒரு நாள் தன் தமையன்மாரைப் பார்த்து, இன்று ஒரு சொப்பனம் கண்டேன்; அதில் என் அரிக்கட்டு மத்தியில் நிற்க, உங்கள் அரிக்கட்டுகளெல்லாம் சுற்றி நின்று என்னை வணங்கின என்றான். மற்றொரு நாள், இன்று ஒரு சொப்பனம் கண்டேன், அதில் சூரியன், சநதிரன் மற்றும் பதினொரு நட்சத்திரங்களும் என்னை வணங்கினது என்றான். இந்த சொப்பனங்களினிமித்தம் நாங்களும், ஏன் தகப்பனும் தாயும் கூட உன்னை வணங்குவார்களோ? என்று கூறி அவன் மீது பொறாமையும் வெறுப்பும் கொண்டார்கள். ஆனால், தகப்பனாகிய யாக்கோபோ இந்த சங்கதிகளையெல்லாம் கவனித்து தன் மனதிலே வைத்து எண்ணலானார்.

யாக்கோபின் குடும்பம் ஆடுமேய்க்கும் தொழில் செய்து வந்தவர்கள். எனவே, ஒரு விசை பத்து சகோதரரும் தங்கள் ஆடுகளை மேய்க்கும்படி வீட்டிலிருந்து வெகுதூரம் சென்று பல நாட்கள் வெளியே தங்கியிருந்தார்கள். யாக்கோபு தன் மகன் யோசேப்பை அழைத்து, உன் அண்ணன்மார் ஆடுகளை மேய்க்கும்படி வெளியே சென்று நாட்கள் பல ஆகிவிட்டன; எனவே, நீ அவர்களுக்கு உணவு பதார்த்தங்களையும், தின்பண்டங்களையும் கொண்டு போய் கொடுத்து விட்டு அவர்களின் சுக செய்தியை விசாரித்து வா என்று கூறி அனுப்பினார். யோசேப்பு தூரத்தில் வரும்போதே அவனுடைய சகோதரர்கள் பார்த்து, இதோ சொப்பனக்காரன் வருகிறான். அவனைப் பிடித்து இங்கேயே கொன்று போடுவோம். அவனுடைய சொப்பனங்கள் எப்படி நிறைவேறும் என்று பார்ப்போம். தகப்பன் கேட்டால் அவனை ஏதோ காட்டு மிருகம் பட்சித்துப்போட்டது என்று கூறிவிடுவோம் எனத் திட்டமிட்டுக் கொண்டார்கள். யோசேப்பு அருகில் வந்ததும் அவனைக் கொன்று போட எழும்பியபோது ஒருவன், என்ன இருந்தாலும் அவன் நம்முடைய இரத்தமும் மாம்சமுமாய் இருக்கிறான். அவனைக் கொல்லாமல் இந்த குழியில் போட்டு விடுவோம் என்று கூறி பின் யோசேப்பை எகிப்துக்குச் செல்லும் வியாபாரிகளிடம் இருபது வெள்ளிக் காசுகளுக்கு விற்றுப்போட்டு, அவனுடைய பலவர்ண ஆடையைப் பறித்து ஒரு ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் தோய்த்து, ஏதோ துஷ்டமிருகம் உம்முடைய மகனைப் பட்சித்து விட்டது என்று கூறி தங்களுடைய தகப்பனை நம்பும்படி செய்து விட்டனர். இவையனைத்தும் யோசேப்பு பதினேழு வயதாக இருந்தபோது நடந்தது.

வியாபாரிகளால் எகிப்துக்குக் கொண்டு செல்லப்பட்ட யோசேப்பு போத்திபார் என்னும் ஒரு பிரதானி வீட்டில் அடிமையாக விற்கப்பட்டான். பின்னர் செய்யாத தவறுக்காக குற்றம் சாட்டப்பட்டு சிறைச்சாலையில் போடப்பட்டார். அங்கும் இறைவன் யோசேப்போடே இருந்தார். இந்த சமயத்தில்தான் எகிப்தின் ராஜா பார்வோன் ஒரே இரவில் இரண்டு வெவ்வேறு சொப்பனங்கள் கண்டு அவற்றிற்கு அர்த்தம் சொல்ல எகிப்தின் ஞானிகள், ஜோசியர்கள், சாஸ்திரிகள் ஒருவராலும் கூடாதபடியால் கலக்க முற்றிருந்தபோது, சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லும் ஆற்றல் யோசேப்புக்கு உண்டு என்பதையறிந்த ஒரு பிரதானி அதை ராஜாவிடம் கூற, ராஜாவும் யோசேப்பை அழைத்து, அவனால் சொல்லப்பட்ட அர்த்தங்களைக் கேட்டு ஆச்சரியமுற்று, இறைவனின் ஆவியையுடைய யோசேப்பு தான் இனி எகிப்தின் பிரதம மந்திரி என்று ஆணையிட்டார். இப்போது எகிப்தின் சகல அதிகாரம் படைத்த மாபெரும் மனிதனாக யோசேப்பு மாறிவிட்டார்.

பார்வோன் கண்ட சொப்பனத்தின்படி 7 ஆண்டுகள் தேசத்தில் விளைச்சல் மிக மிகுதியாயிருந்தது. யோசேப்பு வரப்போகும் 7 ஆண்டுகால பஞ்சத்தை எதிர்கொள்ள களஞ்சியங்களைப் பெரியதாகக்கட்டி கடற்கரை மணலத்தனையாக தானியங்களைச் சேர்த்து வைத்தார். கொடிய பஞ்சம் ஆரம்பித்தது. சகல தேசத்து மக்களும் பஞ்சத்தில் தானியம் கொள்ள எகிப்து நோக்கி வந்தனர். யாக்கோபின் மூத்த குமாரர்களும் தானியம் கொள்ள எகிப்து வந்தனர். அங்கே அதிபதியாய் இருக்கும் மனிதன் தாங்கள் அடிமையாக விற்றுப்போட்ட யோசேப்புதான் என்பதையறியாமல் பத்து சகோதரர்களும் வந்து யோசேப்பு முன்பு தண்டனிட்டுப் பணிந்து நின்றார்கள்.

தனக்கு முன்பாக பணிந்து நிற்பவர்கள் தன் சகோதரர்கள் தான் என்பதை அறிந்து கொண்ட யோசேப்பு இறைவன் தனக்குக் கொடுத்த சொப்பனத்தின் நிறைவேறுதலைக் கண்டார். அவர்களிடம் மிகக் கடுமையாக நடந்து கொள்வதுபோல் பாவனை செய்தார். அப்போது, “நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் வந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக் கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவி கொடாமற் போனோமே; ஆகையால் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரை ஒருவர் பார்த்து சொல்லிக் கொண்டார்கள்.”

அனைவருக்கும் மூத்தவனான ரூபன் அவர்களைப் பார்த்து : “இளைஞனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? நீங்கள் கேளாமற் போனீர்கள்;

இப்பொழுது இதோ அவன் இரத்தப்பழி நம்மிடத்தில் வாங்கப்படுகிறது என்றார்." இந்த சம்பவம் நடந்து முடிந்து 20 நீண்ட ஆண்டுகள் கடந்து போய் விட்டது. ஆனாலும், அவர்கள் செய்த அந்தச் தீச்செயலின் தீயானது அவர்களை இப்போது பொசுக்கிக் கொண்டிருக்கிறது.

இதனை மனுமக்கள் அறிந்து நடக்க வேண்டுமென்றே வள்ளுவப் பெருந்தகையும்,

"தீயவை தீய பயத்தலால் தீயவை

தீயினும் அஞ்சப் படும்" (திருக்குறள் 21:2) என்றும்

"எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை

வீயாது பின்சென்று அடும்" (திருக்குறள் 21:7) என்றும் உரைத்தார்.

அதாவது, தீயசெயல்கள் தீமையையே விளைவிக்கும் என்பதால் நெருப்பைக் காட்டிலும் அதற்கு அஞ்சவேண்டும். எவ்வளவு பெரிய பகைக்கும் தப்பிவிடலாம்; ஆனால் நாம் செய்யும் தீய செயல்களின் விளைவிலிருந்து தப்ப முடியாது என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

"நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் (உன்) வாசற்படியில் படுத்திருக்கும்" (பரி.விவிலியம் ஆதியாகமம் 4:7).

22. ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்

லூக்கா 10 : 30-37 திருக்குறள் : ஒப்புரவு அறிதல் (22)

இயேசு நாதர் கூறிய உவமைகளில் ஒன்று :

எருசலேம் என்னும் பட்டணம் யூதேயா நாட்டின் தலை நகரமாயிருந்தது. அங்கே வாழ்ந்த யூதர் என்னும் பெயருடைய மக்கள் உயர்சாதி மக்கள் என வழங்கப்பட்டனர். எருசலேமிற்குக் கீழே சற்று தொலைவில் எரிகோ என்னும் பட்டணம் இருந்தது. எருசலேமிலிருந்து எரிகோ பட்டணம் செல்லும் வழி காடுகளால் நிறைந்திருந்தது. அந்த வழியாகச் செல்வோரையும் வருவோரையும் கொள்ளையடித்துப் பிழைப்பதற்கென்றே அநேக கொள்ளைக்காரர்கள் அந்தக் காலத்தில் இருந்தனர். அந்நாட்களில் ஒரு நாள் யூதகுலத்தைச் சேர்ந்த ஒரு மனிதன் எரிகோ நோக்கிப் பயணமாகச் சென்றபோது, கள்வர்கள் சிலர் அவனைக் காயப்படுத்தி, குற்றுயிரும் கொலையுயிருமாகப் போட்டு, அவனுடைய உடைமைகள் அனைத்தையும் கொள்ளையடித்து விட்டுச் சென்றனர்.

பிரயாணமாகச் சென்ற அந்த மனிதனோ உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் காணப்பட்டான். அப்போது

தேவாலயத்தில் ஆசாரியப்பணி செய்யும் ஒருவன் அந்த வழியாக வந்து, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் மனிதனைக் கண்ணுற்றும், அவனுக்கு உதவி செய்ய மனமற்று இறைப்பணிக்கு செல்லும் நேரமாயிற்று என்று பக்கமாக விலகிச் செல்கிறான். சிறிது நேரம் கழித்து ஆலயப் பணிகளில் உதவிக் காரனான மற்றொருவனும் உதவி செய்ய மனமற்றவனாக விலகிச் செல்கிறான். இந்த இரண்டு பேருமே உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த மனிதனின் யூத குலத்தைச் சார்ந்தவர்கள்.

எருசலேமிற்கு மிக அருகில் சமாரியா என்னும் சிறிய கிராமம் இருந்தது. அங்கேயிருந்த மக்கள் யூதர்களால் தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தவர்கள். அருகில் வந்தால் தாங்கள் தீட்டுப்பட்டு விடுவோம் என யூதர்கள் கருதிய மக்கள். அந்த ஊரிலிருந்து ஒரு மனிதன் அவ்வழியே வந்தான். கள்வர்களால் கொள்ளையடிக்கப்பட்டு குற்றுயிராய்க் கிடக்கும் மனிதன் அருகில் வந்து, அவன்படும் துயரம் கண்டு, அவன் மேல் மனதுருகி, அவனுடைய காயங்களில் எண்ணெயும், திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் கழுதையின் மேல் ஏற்றி சத்திரத்தில் கொண்டு போய் பராமரித்து அவனுடைய உயிரைக் காப்பாற்றினான். இந்த மூவருள் இருவர் இறைப்பணி செய்கிறோம் என பெருமைப்பட்டுக் கொள்கிறவர்கள். ஆனால் மூன்றாம் மனிதனோ இறைவனுக்குத் தூரமானவன், தீண்டத்தகாதவனென்றெல்லாம் கருதப்பட்டாலும் அவனே உண்மையான மனிதன்; அவனே உயிருடையவன்; மற்ற இருவரும் மனிதத் தன்மையற்ற, செத்துப்போன நிலையிலுள்ளவர்களே! பிறனுடைய தேவையறிந்து அவனுடைய துன்பத்தில் உதவுபவனே உண்மையும், உயிரும் உடைய மனிதன்; அத்தகைய லட்சணமில்லா மனிதன் செத்தவனுக் கொப்பானவனே! திருவள்ளுவரும் மனிதரில் காணப்படும் இந்த நிலை குறித்தே,

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்" (திருக்குறள் 22:14)

என அழகுபட உரைக்கிறார்.

பிறமனிதனின் துன்பமறிந்து உதவுபவனே உயிருள்ள மனிதன்; அவ்வாறில்லா மனிதன் உயிருடன் உலாவினும் பிணமாகவே கருதப்படுவான்.

மேலும் சிந்தனைக்கு :

கிருஷ்ணபகவானும் குசேலரும் (சுதாமா) சாந்தீபமுனிவரின் ஆசிரமத்தில் கல்வி கற்ற குருகுல நண்பர்கள். குருகுலம் விட்டு கிருஷ்ணர் துவாரகை சென்று அதன் அரசனாக மிகச் செல்வச்

செழிப்புடன் விளங்குகின்றார். குசேலர் (கந்தல் துணிகளை உடுத்தியவர்) மிக்க வறுமையில் உழன்று, அன்றாடம் இரண்டு மூன்று வீடுகளில் யாசகம் பெற்று, அந்தப் பிச்சையில், துன்பத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவர். ஒரு நாள் தன் பழைய சிநேகிதனான கிருஷ்ணரைக் காணச் சென்று அவரிருந்த செல்வநிலைகண்டு பயந்து, அவருக்குக் கொடுக்க சில வீடுகளில் இருந்து பெற்று, அழுக்கான கந்தல் துணிகளில் முடிந்து கொண்டு வந்த அவலைக் கொடுக்கத் தயங்கி நின்றபோது, கிருஷ்ணர் வலிய அவரை வாரியணைத்துத் தழுவிக் கொண்டு, கந்தையென்றும், அழுக்கு நிறைந்த அவல் என்றும் பாராமல் அதைச் சுவைத்து அவருக்கு அருள்பாலித்து, குசேலரின் துன்பங்கள் நீங்க பெருஞ்செல்வம் படைத்து மகிழ்ந்தார். குசேலரின் துன்பம் கண்டு உதவிய அந்த செயல் கிருஷ்ணரின் பெரிய உள்ளத்தைக் காட்டுவதாக அமைந்தது.

(விபரமாக அறிய ஸ்ரீமத் பாகவதம், பத்தாம் ஸ்கந்தம், குசேலோபாக்கியானம்) காண்க.

23. அற்றார் அழிபசி தீர்த்தல்

1 ராஜாக்கள் 17:1-16 திருக்குறள் : ஈகை (23)

சமாரியா பட்டணத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தோரில் ஆகாப் என்னும் ராஜா இறைவனுடைய பார்வையில் மிகவும் பொல்லாதவனாகக் காணப்பட்டான். "உம்ரியின் குமாரனாகிய ஆகாப், தனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்" என விவிலியம் கூறுகிறது. அரசன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே என்னும் சொல்லுக்கேற்ப தேசமே இறைவனை மறந்து, தேவ கோபத்தினால் மிகப் பெரிய பஞ்சத்தைச் சந்திக்க வேண்டியதாயிற்று. எலியா என்னும் தேவ மனிதன் மூலம் தேசத்தில் பஞ்சத்தை இறைவன் அறிவித்தார். எலியா என்னும் தேவ மனிதனையோ கேரீத் என்கிற ஆற்றண்டையில் யாருடைய கண்களுக்கும் புலப்படா வகையில் கர்த்தர் மறைத்து வைத்து, காகங்களைக் கொண்டு போஷித்தும், கேரீத் ஆற்றில் காணப்பட்ட தண்ணீரைக் குடிக்கும் படி செய்தும் பராமரித்து வந்தார். தேசத்திலோ உணவு தண்ணீருக்கான பஞ்சம் மிகக் கடுமையாக இருந்தது." இந்நிலையில் எலியா தங்கியிருந்த கேரீத் ஆற்றின் தண்ணீரும் முழுவதும் வற்றிப் போயிற்று. தேவ வழி நடத்துதலின்படியே எலியா சாறிபாத் என்னும் ஊரண்டை வந்து சேர்ந்தார்.

சாறிபாத் என்கிற அந்தப் பட்டணத்தில் ஒரு விதவைப் பெண் இருந்தார். அவருக்கு ஒரு மகனும் இருந்தான். பஞ்சம் கொடிதாக, கொடிதாக அவளிடமிருந்த உணவுப் பொருட்களும் காலியானது. இறுதியில் அவளிடம் பானையில் ஒரு பிடிமாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயும் இருந்தது. அதை அடையாகச் செய்து சாப்பிட்டு விட்டுப் பின் தானும் தன் குமாரனும் செத்துப்போக எண்ணி, அதை சுடுவதற்கான சிறிது சுள்ளி விறகுகள் பொறுக்க பட்டணத்தின் வாயிலண்டை வந்தபோது எலியா அவளைப் பார்த்து, அம்மா எனக்கு குடிக்கிறதற்கு கொஞ்சம் தண்ணீர் தா, என்று கேட்டார். அவள் செல்லும்போது அப்படியே என் பசி தீர்க்க கொஞ்சம் அப்பமும் கொண்டு வா என்றார். இருப்பதோ ஒரு பிடி மாவும், கொஞ்சம் எண்ணெயும், அதில் அப்பம் சுட்டால் தனக்கும் தன் குமாரனுக்குமே போதாதென்கிற நிலை. இருப்பினும், எலியா கேட்டதற்கிணங்க அந்த விதவைத்தாய் எலியாவுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுக்கத் தீர்மானித்தாள். அவருடைய அந்த நல்ல தீர்மானம், முதலில் பசியென்று வந்தவரின் பசியைத் தீர்க்க நினைத்த பண்பு, துணிவு அவளுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதத்தை உண்டாக்கியது. பஞ்சம் தீரும் வரை அங்கே பானையில் மாவும், கலயத்தில் எண்ணெயும் குறைவுபடவில்லை. பசியென்று வந்தவரின் பசியைப்போக்கும் ஈகையே தனது முதற்கடன் என்று கருதிய அவளுடைய பண்பும் நலனும் தன் ஜீவனத்துக்கானதைச் சேர்த்து வைக்கும் இடமாயிற்று. இந்த உண்மைதான் 'ஈகை' என்னும் அத்தியாயத்தில் திருவள்ளுவரால் உரைக்கப்படுகிறது.

"அற்றார் அழிபசி தீர்த்தல், அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி" **(திருக்குறள் 23:6)**

ஏழைகளின் பசிதீர்த்தலே, ஒருவன் தன் செல்வத்தைச் சேர்த்து வைக்கும் இடமாகும்.

"பாத்தூண் மரீஇ யவனைப் பசி என்னும்
தீப்பிணி தீண்டல் அரிது" (திருக்குறள் 23:7)

பிறருக்கும் கொடுத்து தானும் உண்பவனை பசிநோய் அணுகாது என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (திருக்குறள் 33:2)

24. ஈதல் இசைபட வாழ்தல்

யோவான் 6:1-13 திருக்குறள் : புகழ் (24)

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் தமது ஊழியத்தைச் செய்து கொண்டிருந்தபோது அவருடைய உபதேசங்களைக் கேட்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் அவரிடம் வந்தார்கள். பல நாட்களாக அவர் பேசுவதைக் கேட்க அவரிடம் காத்திருந்தார்கள். "அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்ட மக்கள்தான் எப்பொழுதும் அவரைச் சூழ்ந்து கொண்டிருந்தார்கள்" (லூக்கா 4:22). அவருடைய போதகத்தைக் குறித்து, "இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால் ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" (மத்தேயு 7:28,29) எனவும் அவருடைய செயல்பாடுகள் குறித்து, "நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்" (அப்போஸ்தலர் 10:38) எனவும் திருவிவிலியம் உரைக்கின்றது.

இவ்வாறு இயேசு கிறிஸ்து ஊழியம் செய்து கொண்டிருந்த போது ஒரு விசை அவர் பேசி முடிக்க வெகுநேரமாயிற்று. திரள் கூட்டம் மக்கள் அங்கிருந்தனர். புருஷர் மட்டுமே சுமார் ஐயாயிரம் பேர் இருந்தார்கள். அவர்களுக்கு உணவு தரவேண்டும். இயேசு கூட்டத்திற்குள் சென்று எவ்வளவு உணவுபதார்த்தங்கள் இருக்கிறது என்று பார்த்து வரும்படி தமது சீடர்களிடம் கூறினார். அவ்வளவு பெரிய கூட்டத்தில் தங்களிடம் உள்ள உணவைக் கொடுத்து பகிர்ந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. அங்கே ஒரு சிறுவன் இருந்தான். அவனிடம் ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் இருந்தது. இயேசுவின் சீடர்களை அவன் அழைத்தான். அய்யா, என்னிடம் கொஞ்சம் அப்பமும் மீனும் இருக்கிறது, எடுத்துக் கொள்ளுங்கள் என்றான். இவ்வளவு பெரிய கூட்டத்தில் இந்த சிறுவனுக்கு மட்டும் தன்னிடம் உள்ள தன் உணவையும் மற்றவர்களுக்காகக் கொடுக்கும் மனம் இருந்தது ஆச்சரியம்! தன் பசியைக் குறித்து அவன் கவலைப்படவில்லை. அத்தனை பெரிய கூட்டத்திற்கு இந்த மிகச் சிறிய எண்ணிக்கையிலான அப்பங்களும் மீனும் எம்மாத்திரம். இதைப் பற்றியெல்லாம் அச்சிறுவன் யோசிக்கவில்லை. என்னிடம் உள்ளதை எடுத்துக் கொள்ளுங்கள் என்றான். **அவனுடைய எண்ணமும் இறைவன் இயேசுவின்**

வல்லமையும் இணைந்து அன்று பல்லாயிரக்கணக்கான மக்களின் பசியைத் தீர்த்து, திருப்தியடையச் செய்தது. இது போன்ற ஈகைதான் மனிதனுக்குப் பெருமைதரும். தன்னிடம் உள்ளதையெல்லாம் பிறருக்காகக் கொடுத்து விடும் உள்ளம். இதையேதான் திருக்குறளும் வலியுறுத்துகின்றது.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" (திருக்குறள் 24:1)

மக்களுடைய வாழ்வில் பெருமை சேர்ப்பது புகழ்; அப்புகழை ஈட்டித் தருவது ஈகை.

நூற்றுக்கணக்கான சிறுவர்கள் அன்று அங்கு இருந்திருக்க வேண்டும். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் இன்று நாம் நினைத்துப்பேசுவது ஈகையிற் சிறந்த அந்த சிறுவனைப் பற்றியல்லவா!

மேலும் சிந்தனைக்கு :

பாரதத்தில் கர்ணனுடைய ஈகை வெகுவாக போற்றப்படுகிறது. கர்ணன் மிகப்பெரிய வீரன் என்றாலும் அந்த வீரத்தையும் விஞ்சி நின்று அவருக்கு புகழ் சேர்ப்பது அவருடைய கொடைதான்!

25. புகழொடு தோன்றுக

மத்தேயு 26:1-13 திருக்குறள் : புகழ் (24)

பெத்தானியா என்னும் ஒரு சிற்றூர். எருசலேமுக்கு மிக அருகாமையில் அமைந்திருந்த ஊர். அங்கே ஓர் ஏழ்மைக் குடும்பம். தாயில்லை, தகப்பன் ஒரு தொழுநோயாளி; சகோதரன் சரீரத்தில் பலவேதனைகளுடையவன்; அவர்களுடன் இரண்டு சகோதரிகள். மூத்தவள் மார்த்தாள் என்று பெயர்; இளையவள் மரியாள் என்னும் பேருடையாள். எருசலேம் தேவாலயப் பண்டிகை காலங்களில் தலைநகரில் கூட்டம் அதிகமாக இருக்கும். எனவே சுமார் எட்டு மைல்கள் சுற்றளவில் அமைந்திருக்கும் கிராமங்கள் எருசலேமின் ஒரு பகுதி என்றே கருதப்பட்டது. இந்த சுற்றுப்புற கிராமங்களில் யாத்ரீகர்கள் இராத்தங்கி, காலையில் பண்டிகை ஆசரிப்பிற்காக அவர்கள் திரள் திரளாக எருசலேம் வருவார்கள்.

பெத்தானியாவிலிருந்த இந்த குடும்பத்துடன் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல பழக்கம் உண்டாயிற்று. ஆண்டவர் வரும்போதெல்லாம் தம்முடைய சீடர்களுடன் அங்கு தங்கி மக்களுக்கு உபதேசம் செய்வது வழக்கம். தகப்பனும், தமையனும் நோயாளி களானதால் மூத்தவள் மார்த்தாள் தன் திருமண வாழ்வைப் பற்றிக் கூட

கவலைப்படாமல் தன் தங்கை மரியாளுக்கு எப்படியும் திருமணம் செய்து விட வேண்டும் என்று விரும்பி, மிகவும் கஷ்டத்துடன் அந்நாட்டு வழக்கப்படி திருமண வரதட்சணைக்காக மிக விலையுயர்ந்த நளதம் என்னும் வாசனை தைலத்தை வாங்கி வைத்திருந்தாள்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து அங்கு வரும்போதெல்லாம் அவருடைய உபதேசங்களை மிக அதிகமாக விரும்பி கேட்கும் பழக்க முடையவள் தங்கையாகிய மரியாள். ஒரு விசை இவ்விதமாக ஆண்டவர் தங்கியிருந்தபோது அங்கே விருந்து உபசரிப்புகள் நடைபெறுகிறது. அப்போது மரியாள் தங்களுடைய ஏழ்மை நிலையிலும் சம்பாதித்து வைத்திருந்த விலையேறப்பட்ட வாசனை தைலத்தை உடைத்து ஆண்டவரின் பாதங்களில் ஊற்றி, தன் தலைமுடியால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள். இது இறைவன் பால் கொண்ட அன்பாலும் பக்தியினாலும் உந்தப்பட்டு செய்யப்பட்ட ஈகை என்பதால் இது மிகவும் கனத்திற்குரியதாக பாராட்டப்பட்டது. மனிதனை பாவ சாபங்களிலிருந்து மீட்க வந்த மீட்பர் அவர். தமது மரணத்தாலேயே இதைச் செய்து முடிப்பார் என்னும் சத்தியத்தை நம்பி, விசுவாசித்த மரியாள், இயேசு கிறிஸ்துவை கல்லறையில் அடக்கம் பண்ணும் போது பூசப்படும் வாசனை தைலத்தைப்போல் அவருடைய சரீரத்தை அடக்கம் பண்ணுவதற்கு அடையாளமான செயலாக இதைச் செய்திருக்கிறாள் என்று இயேசு உரைத்தார். தன்னுடைய வாழ்வைக் குறித்து சற்றும் கவலைப்படாமல் அவள் செய்த இந்த ஈகை அவளை புகழின் உச்சிக்குக் கொண்டுபோய் விட்டது. கர்த்தர், என்னைக் குறித்த "இந்த நற்செய்தி உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கெல்லாம் இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்."

இவளுடைய இந்த ஈகையினால் 2000 ஆண்டுகளாகியும் அவள் புகழ் மறையவில்லை. தினந்தோறும் உலகின் பலபகுதிகளில் இவளுடைய பெயரும், அவள் செய்த செயலும் நினைக்கப்படுகிறது. இவ்வித புகழுடன் அமைவதே உண்மை வாழ்க்கை; அவ்விதம் அமையாத வாழ்க்கையால் என்ன பயனுண்டாகும்? எனவேதான்,

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதில்லார்
தோன்றலின் தோன்றாமை நன்று" என தெய்வப்புலவர் உரைக்கின்றார்.

மனிதனாகப் பிறந்தோர் புகழுடன் வாழவேண்டும்; அஃதில்லா வாழ்க்கை பயனற்றது என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

நமது பாரத துணைக்கண்டத்தினுள் எண்ணற்ற அரசர்கள், சக்கிரவர்த்திகள் தோன்றியிருந்தாலும் சிபிச் சக்கிரவர்த்தி போன்ற புகழுடையோர் வெகு சிலரே. இந்த மாபெரும் புகழ்ச்சிக்குக் காரணம் தன்னிடம் அடைக்கலமாக தனது மடியில் விழுந்தது புறா தானே என்று கருதாமல் அதன் உயிரைக்காக்க, தன் தசைகளை மட்டுமின்றி தன்னையே ஒப்படைத்த அந்த ஈகை தானே காரணம். எனவேதான் கவிச்சக்கிரவர்த்தி கம்பரும் தனது காவியத்தில் பல இடங்களில் இந்நிகழ்வை நினைவுபடுத்தி அவருக்கு புகழ் சேர்க்கிறார். இதோ, சில கவிகளின் சிலவரிகள்.

இராமனது குலமுறை கூறிவருங்கால் விசுவாமித்திரர் சனக மன்னனிடம் கூறியது.

"…. இவர் குலத்தோன் மேற்பறவை
மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறாக வழங்கினனால்"

(குலமுறை கிளத்து படலம் 7)

இது தசரதனை நோக்கி கைகேயி சொன்னது.

"அரிந்தான் முன்னோர் மன்ன வன்றே அருமேனி
வரிந்தார் வில்லாய்!……." (கைகேயி சூழ்வினைப் படலம் 43)

கும்பகர்ணன் போரில் இறந்துபட நேர்ந்தபோது இராமனிடம் உருகி வேண்டியது.

"புக்கடைந்த புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க
மைக்கடங்கார் மதயானை வாள்வேந்தன் வழிவந்தீர்"

(கும்பகர்ணன் வதைப்படலம் 355)

26. பொருட்செல்வம் பூரியார் (இழிந்தவர்) கண்ணும் உள

லூக்கா 16:19-31 திருக்குறள் : அருளுடைமை (25)

இயேசு நாதர் உரைத்த ஒரு சம்பவம்

ஒரு பட்டணத்தில் மிக செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்த ஒரு மனிதன் இருந்தான். தன்னைச் சுற்றிலும் வாழ்ந்த மக்கள் நிலை குறித்து அவன் எப்பொழுதும் எள்ளளவேனும் நினைத்தானில்லை. அவனது மாளிகைக்கு முன்பு, வாயிலருகில் லாசரு என்னும் பேர் கொண்ட ஏழையான மனிதனொருவன் அமர்ந்திருப்பான்.

அவனுடைய சரீரம் முழுவதும் புண்களால் ரணமாகி சொல்லொண்ணா வேதனைகளுக்குட்பட்டவனாய், பிழைப்பதற்கான எவ்வித வேலையும் செய்ய இயலாத நிலையில், செல்வந்தனுடைய வீட்டிலிருந்து எறியப்படும் மிச்சமான உணவுத் துணிக்கைகளைப் பொறுக்கி உண்டு வாழ்ந்து வரலாயினன்.

இந்த இரண்டுபேர் குறித்தும் ஆண்டவர் குறிப்பிடும்போது, செல்வந்தன் இவ்வுலக வாழ்வில் மிகச் செழிப்பாக வாழ்வது குறித்தே கவலைப்பட்டானேயொழிய, தன்னைப் படைத்த இறைவன் குறித்தோ அல்லது தன்னைச் சுற்றிலும் தேவைகளுடன் வாழும் மனிதர்கள் குறித்தோ ஒரு சிறிதும் நினைத்தானில்லை. ஆனால் அந்த ஏழை மனிதனோ, தன்னுடைய இயலா, வறிய நிலையிலும், தினந்தோறும் தன்னைக் காப்பாற்றிவரும் இறைவனின் அன்பை எண்ணித் துதித்து வாழ்ந்து வந்தான். சிறிது காலம் சென்றது. இந்த இருமனிதரும் ஒரே நாளில் மரணமடைந்தனர்.

தன்னையே மையப்படுத்தி வாழ்ந்த சுயநலமிக்க அந்த செல்வந்தனின் ஆன்மாவை பிசாசின் தூதர்களாகிய பேய்கள் பாதாளத்திற்குள் கொண்டு சென்று அங்கு நரகாக்கினையில் வாதிக்கும்படி விடுகின்றனர். தன்னுடைய மிகக் கஷ்டமான நிலையிலும் இறைவனைப் போற்றி வாழ்ந்த லாசருவாகிய ஏழை மனிதனின் ஆன்மாவை இறைத்தூதர்கள் கொண்டு சென்று நீதிமான்கள் வாழும் 'ஆபிரகாமின்மடி' என்றழைக்கப்பட்ட பரதீசில் விட்டனர். எடுத்துரைக்க இயலாத வேதனையிலும் துன்பத்திலும் ஒரு மனிதன்; அதே வேளையில் மிக இன்பமான மோட்ச பாக்கியத்தினுள் மற்றொரு மனிதன். இருவரும் ஒரே இடத்தில் பூமியில் வாழ்ந்தபோது ஒருவனிடம் பொருளாகிய செல்வமிருந்தது; மற்றவனிடம் பக்தியாகிய அருளும் இறையன்பும் இருந்தது. இதயத்தில் அன்பில்லா நிலையில் எவ்வளவு தான் உலகப் பொருள் ஒருவனிடத்தில் இருப்பினும் அது இகழ்ச்சியுடையார்கண் காணப்படும் செல்வமேயாகும். ஒருவேளை இவ்வுலகில் செல்வமற்ற ஒரு மனிதனிடம் இறையருளும் அன்பும் இருக்குமேயானால், அதுவே செல்வங்களிலெல்லாம் சிறந்த செல்வமாகக் கருதப்படும். என்றென்றும் அழியாத ஒப்பற்ற வீடுபேற்றையளிப்பது இந்த அருட்செல்வமேயாகும். இதையே தெய்வப்புலவரும்,

"அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்

பூரியார் கண்ணும் உள" என்றார். (திருக்குறள்.25:1). அதாவது, இறையருளே அனைத்து செல்வங்களிலும் சிறந்தது; பொருட்செல்வம் என்பது இழிவான மனமுடையோரிடமும் உளது.

இவ்விதம் சொல்வதால் பொருட்செல்வமே தேவையற்றது என்று பொருளல்ல. இவ்வுலக வாழ்வில் நம்மிடம் உள்ள பொருட்கள் இவ்வுலகோடு நின்று விடும். இறையருளோ நமக்கு மறுஉலகையும் ஈட்டித்தரும் ஆற்றலுடையது. எனவே, வாழ்வில் பொருளோடு அருளையும் சேர்த்துக் கொள்வது ஈருலகு மேன்மையையும் நமக்காக வென்றெடுக்கும் எனக் கொள்தல் நலம்.

''அருளில்லார்க்(கு) அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு'' (திருக்குறள் 25:7)

மேலும் சிந்தனைக்கு :

அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை
பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை

இயேசு : "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மரிக்கும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக் கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்" லூக்கா.16:9.

27. இல்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை

மத்தேயு 20:28; மாற்கு 10:45 திருக்குறள் : அருளுடைமை (25)

இறைமைந்தன் இயேசு கிறிஸ்து இந்த உலகில் இறை அவதாரமாக இறங்கி வந்ததன் நோக்கம் குறித்து அவரே உரைக்கிறார். "அப்படியே, மனித குமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், **அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்** என்றார்". இந்த உண்மையை பல சமயங்களில் கிறிஸ்துவின் அப்போஸ்தலர் எடுத்துரைத்துள்ளனர். "**எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனிதனாகிய கிறிஸ்து இயேசு அவரே;** இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது" (1 தீமோத்தேயு 2:6). "வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, **தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார்**" (எபிரேயர் 9:12).

இயேசு கிறிஸ்து உலகில் சுமார் 33½ ஆண்டுகள் வாழ்ந்து, அதில் சுமார் 3½ ஆண்டுகள் இறைப்பணி செய்து, ஏற்றவேளை வந்தபோது தாம் மனுக்குலத்தின் பாவ நிவர்த்திக்காக மரணமடைய வேண்டுமென்றும், அதற்காக எருசலேம் மாநகரம் செல்லவேண்டுமென்றும் உரைத்தபோது அவருடைய சீடர்களில் மூத்த சீடராகிய பேதுரு குறுக்கிட்டு, அவ்வண்ணமாக நடைபெறக்

கூடாது, நடக்க விடமாட்டேன் என்றெல்லாம் கூறுகிறார். "மனிதகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்" (மத்தேயு 26:24) என்றார். மேலும் "அது முதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பலபாடுகள்பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீடர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்" (மத்.16:21). உடனே பேதுரு குறுக்கிட்டு, "அவரைத்தனியே அழைத்துக் கொண்டுபோய், ஆண்டவரே, இது உமக்கு நேரிடக் கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்து கொள்ளத் தொடங்கினான்" (மத்.16:22). ஆனால் கிறிஸ்துவோ உலக மக்களை பாவங்களிலிருந்து விடுவித்து மீட்கும் காருண்ய செயலிலேயே கருத்தாய் இருந்தார். தமது உயிரைக் குறித்து சிறிதேனும் கவலை கொள்ளவில்லை. மக்களுடைய நல்வாழ்வு, தீமையற்ற வாழ்வு, அதற்காகத் தாம் செய்து முடிக்க வேண்டிய பணி மட்டுமே அவர் கண்கள் முன் நின்றது. தமது இன்னுயிர் பற்றியோ, தாம் படப்போகின்ற இன்னல்கள் குறித்தோ அவர் கொஞ்சமும் எண்ணவில்லை. இதுபோன்ற செயல் செய்வார் இறையருள் நிரம்பப் பெற்றோராவர். அவர்களைக் கொண்டே இந்த உலகம் இன்னும் உய்வடைந்து வருகிறது. இதையே வள்ளுவப் பெருந்தகையும்,

> "**மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்(கு) இல்லென்ப**
> **தன்னுயிர் அஞ்சும் வினை**" (திருக்குறள் 25:4) என்றார்.

உலகிலுள்ள மக்களின் நன்மையையே வாழ்வாகக் கொண்டோர் தம்முடைய உயிர் பற்றிச் சிறிதும் பயப்படமாட்டார் என்பது.

மேலும் சிந்தனைக்கு :

i) நமது முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்களைக் கொடூரமாக 16 குண்டுகளால் சுட்டு கொன்ற பியந்த் சிங் என்பவனை மெய்க்காப்பாளனாக பணி நியமனம் செய்யும் வேளை அவன் குறித்து இரகசியக் குறிப்பு அனுப்பப்பட்டதாக அறிகிறோம். அவனுடைய செயல்பாடுகள் அத்தனை நேர்மையுடையதாகத் தெரியவில்லை. அவன் மூலம் அம்மையாரின் உயிருக்கு தீங்கு நேரிடலாம் என்ற குறிப்பைப் பார்த்து விட்டு, இந்திய மக்கள் அனைவரும் என் மக்கள்; ஆகவே மக்களில் நான் பட்சபாதம் காட்டமுடியாது. அந்த நபரையே மெய்க்காப்பாளனாக நியமனம் செய்ய அம்மையார் ஒப்புதலளித்ததாக செய்தி. இந்திய மக்களை நேசித்த அவர்களின் உள்ளத்தில் தன்னுயிர் அஞ்சும் நிலை இருந்ததில்லை.

ii) இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த வில்லியம்கேரி என்னும் மனிதர் இந்தியாவில் மிஷனரிப் பணி செய்யப் புறப்பட்டபோது, அநேகர், நீ அங்கு செல்லாதே; அது மிகவும் வெப்பம் நிறைந்த தேசம்; பல கொள்ளை நோய்கள் அங்கு உண்டு. தட்பவெட்பம், உணவுப்

பழக்கவழக்கங்கள் அனைத்தும் சரியிருக்காது என்றெல்லாம் அவரைத் தடுக்க முற்பட்டார்கள். அப்போது, வில்லியம் கேரி தன்னுயிரைப் பற்றி சிறிதும் கவலை கொள்ளாது, நான் அங்கே வாழ்வதற்காகச் செல்லவில்லை; சாவதற்காகவே செல்கிறேன் என்றாராம். அவருடைய பணியின் மூலமே ஆயிரமாயிரமாய் செத்துக் கொண்டிருந்த குழந்தைகள், 'சதி' என்னும் கொடிய பழக்கத்தால் எரித்துக் கொல்லப்பட்டுக் கொண்டிருந்த ஆயிரமாயிரம் பெண்கள் நமது நாட்டில் காப்பாற்றப்பட்டது வரலாறு.

28. மாமிசம் உண்ணாதிருத்தல்

ஆதியாகமம் 9:1-3; ஏசாயா 65:25 திருக்குறள் : புலால் மறுத்தல்(26)

"திருக்குறள் ஜைன மதக்கோட்பாடா?

"சில அறிஞர்கள் திருக்குறளில் ஜைன மதத்தின் தாக்கம் அதிகமிருப்பதாகக் கருதுகின்றனர். ஆனால் திருக்குறளை உற்று ஆராய்ந்து பார்க்கும்போது அது கிறித்தவப்போதனைகள் நிறைந்ததாகவே உள்ளது என்பதை பேராசிரியர் டாக்டர். மு. தெய்வநாயகம் போன்றோர் சமீப காலத்தில் மிக ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளனர்.

"திருக்குறளில் ஜைனமதக் கோட்பாடுகள் காணப்படுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டப்படும் கருத்து 'புலால் மறுத்தல்' 'மாமிசம் உண்ணாமை'-யை அதிகம் முக்கியப்படுத்துகிறது என்பதுதான். புலால் மறுத்தல் என்னும் கோட்பாடு ஒன்றினாலேயே திருக்குறள் ஜைன சமயத்தைத் தழுவி நிற்கும் நூலாகக் கருத முடியாது. உண்மையில், புலால் மறுத்தல் என்பது பரி.விவிலியத்தில் ஆதியிலேயே காணப்பட்ட ஒன்றுதான். முதல் மனிதனாகிய ஆதாம் முதல் நோவா என்பவரின் காலம் வரை சுமார் 1657 ஆண்டுகள் மனிதன் மாமிசம் உண்ணாதவனாகவேதான் வாழ்ந்துள்ளான். அதன் பின்னரே மனிதன் மாமிசம் உண்பதற்கு அனுமதி உண்டானதாக பரி. விவிலிய வரலாறு கூறுகிறது.

"இன்றும் கிறித்தவத்தில் ஒரு பிரிவாகக் காணப்படும் **ஏழாம் நாள் ஓய்வு ஆசரிக்கும் கூட்டத்தினர்** புலால் உண்பதில்லை. இது மட்டுமின்றி திருவள்ளுவர் புலால் மறுத்தலை முக்கியப் படுத்துவதற்கான மற்றுமொரு உறுதியான காரணமும் உண்டு. இதை அறிந்து கொள்ள சற்று வரலாற்றிற்குள் நுழைந்து செல்ல வேண்டியது அவசியமாகிறது" (தயவு செய்து காண்க ஆசிரியரின் 'திருக்குறளில் பரிசுத்த விவிலியச் சிந்தனைகள்' பக்.8-9)

"இந்தியாவிற்குள் நுழைந்த வெளிநாட்டவரில், முதலாவது வந்த பாரசீகர்களின் ஊடுருவல் கி.மு.6-ம் நூற்றாண்டில் ஏற்பட்டது. இந்த வெளிநாட்டினர் திராவிடப் பண்பாட்டிற்கும் கலாச்சாரத்திற்கும்

மாறுபட்ட வாழ்க்கை முறையைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. ஆதிதிராவிட இறைவழிபாடுகளில் பலி செலுத்தி வழிபடும் முறை இருந்தது. ஆனால் அது பண்பாட்டு ரீதியான, ஒழுக்கமுறைகளுக்குக் கட்டுப்பட்டதாக இருந்தது. இன்று நாம் காணும் குலதெய்வ வழிபாடுகளில் அதைத்தான் காண்கிறோம். ஆனால் வெளிநாட்டிலிருந்து ஊடுருவிய இந்த மக்கள் சோமபானம், சுராபானம் என்னும் மது வகைகளை மிகுதியாகப் பருகி, ஆடுகள், மாடுகள், குதிரைகள் போன்ற விலங்குகளைக் கொன்று அவற்றின் மாமிசத்தைச் சுட்டுத்தின்று, நாடோடிப் பாடல்களைப் பாடி ஆடிக்கொண்டு (Nomadic Songs) ஒழுக்கமற்ற பண்பாட்டுச் சீரழிவு ஏற்படும் விதத்தில் அவர்களின் வாழ்க்கைமுறை அமைந்திருக்க வேண்டும். எனவே, அப்போதே இந்த வாழ்க்கை முறைக்கு எதிர்ப்புண்டாக்கும் வகையில் இரண்டு புதிய மதங்கள், மார்க்கங்கள் தோன்றலாயின. அந்த எதிர்ப்பு இயக்கங்கள்தான் (Protestant Movement) பின்னர் சமணமதம் என்றும், பௌத்த மதம் என்றும் அறியலாயின.

"பௌத்த சமண சமயங்கள் பலி மறுப்பை முன் வைத்தபடியால் அவைகள் புலால் மறுத்தலையும் முன் வைத்தன. அதேபோல, தோமய்யர் பலி நிறைவேற்றுக் கோட்பாட்டை அறிமுகப்படுத்திய போது ஏராளமாகச் செலுத்தப்பட்டு வந்த பலிகளை நிறுத்த அவரும் புலால் மறுத்தலை முன் வைத்திருக்க வேண்டும். இதுவரையிலும் வெளிநாட்டவரான ஆரியர்கள் அனைவரும் புலால் உண்பவராக, மாமிசம் உண்பவராகவே இருந்து வந்துள்ளனர். 'ஆரியர்' என்னும் பொதுப்பெயர் வெளிநாட்டவருக்கு திராவிடர் கொடுத்ததேயன்றி, குறிப்பிட்ட சந்ததியைக் குறிக்கும் பெயரல்ல என்பது அறிஞர் கூற்று. முந்தின காலங்களில் பிராமணர்களும் மாமிசம் புசித்து வந்தனர். வேதங்களைச் சார்ந்த மதம் வெள்ளாடு, செம்மறியாடு, பசுக்கள், காளைகள், குதிரைகள் ஆகிய ஐந்து விதமான பலிகளை உள்ளடக்கியிருந்தது. பின்னர் பௌத்த சமண, வைணவ மதங்களின் தாக்கத்தாலேயே மாமிசம் உண்ணும் இந்தப்பழக்கம் நின்றுபோனது என டாக்டர். S. இராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

எனவே **பலி மறுப்புக் கோட்பாட்டை** ஏற்றுக் கொண்டவர்களும், **பலி நிறைவேற்றுக் கோட்பாட்டை** ஏற்றுக் கொண்டவர்களும் புலால் மறுத்தலை முன் வைத்தனர் என்பதை அறிய முடிகிறது.

ஆகையால், "பலி செலுத்தத் தேவையில்லா பலி நிறைவேற்றுக் கோட்பாட்டை வலியுறுத்தவும், விளங்கச் செய்யவும், மேலும் அப்போதிருந்த (இறைக்கோட்பாடில்லா) பௌத்த சமண மதங்களைச் சார்ந்த மக்களை இறைவழிபாட்டுடன் கூடிய பலி நிறைவேற்றுக் கோட்பாட்டிற்குக் கொண்டு வரவும் 'புலால் மறுத்தல்'

(மாமிசம் உண்ணாமை) கோட்பாட்டைக் கையிலெடுக்கிறார். திருவள்ளுவர் புலால் மறுத்தலை முக்கியப்படுத்துவதின் வரலாற்றுக் காரணம் இதுவே!"

(மேலும் விளக்கங்களுக்கு ஆசிரியரின் 'திருக்குறளில் பரிசுத்த விவிலியச் சிந்தனைகள்' - மக்னாயீம் வெளியீடுகள் அத்தியாயங்கள் 2-3 ஐப் பார்க்கவும் - பக்.16 கலாச்சார சீரழிவும் எதிர்ப்பு இயக்கங்களும்; பக்.27,32 'புலால் மறுத்தல் கோட்பாடு'.)

29. தவம்

1 தெசலோனிக்கேயர் 5:10 திருக்குறள் : தவம் (27)

1 பேதுரு 2:24

'தவம்' என்பதின் பொருள், துன்பங்களால் தான் வருந்த நேரிடினும், அத்துன்பங்கள் வழியாக பிறர் நலமடைய நாடுவதே என்பதாகும். திருக்குறளில் 'தவம்' என்னும் அதிகாரத்தில் இப்பொருள் பொன்னூல் போல் பத்து குறட்பாக்களையும் இணைத்து நிற்பது காணலாம்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு (திருக்குறள்27:1) என்னும் குறளை நோக்கின் தவம் என்பதின் பொருள் புரியும்.

இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலரான பவுலடிகளார், தான் இறைவனுடைய மீட்பின் நற்செய்தியை மனுமக்களுக்குப் பறை சாற்றும் படியே அதற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவன் என உரைத்தார் (ரோமர் 1:1). இந்த நோக்கத்தை நிறைவேற்றவே தனக்கு வாழ்வு கிடைத்திருப்பதாக எண்ணினார் (பிலிப்பியர் 3:12). இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பணியில், பாதையில் அநேக துன்பங்கள், பாடுகளை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. இதோ, அவர் தரும் பாடுகளின் பட்டியல் : "நான் அதிகமாய் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். **யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்து தரம் அடிபட்டேன்; மூன்று தரம் தடிகளால் அடிபட்டேன், ஒரு தரம் கல்லெறியுண்டேன், மூன்று தரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்.**

"அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்வரால் வந்த மோசங்களிலும், என் சுற்றத்தாரால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும்,

கள்ளச் சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேக முறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேக முறை உண்ணா நோன்புகளிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்" (II கொரி 11:23-27). இத்தனை பாடுகள், துன்பங்களையும் அவர்கள் மகிழ்வுடன் ஏற்றுச் சென்றதின் ஒரே காரணம், தான் விரும்புகின்ற நற்செய்திப் பிரகடனம் மக்களுக்குள்ளே வெற்றிகரமாகச் செல்லுகிறது என்பது தான். தான் ஏற்றுக் கொள்ளும் துன்பங்களின் வழியாகத் தான் விரும்பும் நற்செயல்துரிதமடைவதினால் இன்னும் பல பாடுகளையும் துன்பங்களையும் ஏற்றுக் கொள்ளவும் விருப்பமுடையவராக விளங்கினார். தாம் அறிவித்த நற்செய்தியினிமித்தம் சிறைப்படுத்தப்பட்டிருந்தபோது, "சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் நற்செய்தி பிரபலமாகும்படிக்கு உதவியாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்" என சிறையிலிருந்து எழுதுகிறார் (பிலிப்பியர் 1:12). இந்நிகழ்வுகளை வலியுறுத்தும் வண்ணமாகவே,

"வேண்டிய வேண்டியாய் செய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்" (திருக்குறள் 27:5)

என்னும் குறள் அமைந்துள்ளது. அதாவது, விரும்பியதை விரும்பிய வண்ணம் அடைகின்ற தன்மை தவத்திற்கு இருப்பதால், அந்த துன்பங்களின் வழியில் இன்னும் முயன்று நிற்கலாம் என்பதாகும்.

அதுமட்டுமல்ல, தவத்தின் வழியாக யோகாத்மா முயலும்போது தன் வாழ்விலும் அது மேன்மேலும் ஞானத்தை விளைவிக்கிறது என்பதையும் அறியலாம். பவுலடிகளார் இந்த தவத்தின் வழியாகச் சென்றபோது அவருடைய நோக்கம் சிறப்பாக நடந்தேறியது என்பதுடன் (கொலோசெயர் 1:6,23) அவருடைய தனிப்பட்ட வாழ்வும் மேலும் மேலும் இறையன்பிலும், தாழ்மையிலும் மேன்மையடைந்தது. தன்னுடைய இறைவாழ்வின் ஆரம்பத்தில் "நான் அப்போஸ்தலனல்லவா? என்று பெருமிதத்துடன் கூறி நின்றவர் (1 கொரி 9:1) பின்னர் தொடர்ந்து எழுதும்போது, நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்" என்றும், நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கு பாத்திரன் அல்ல என்று கூறும் விதத்தில் அவருடைய எண்ணம் சிறப்பாக அமைந்தது. இன்னும் சிறிதுகாலம் சென்ற பின்னர் தான் ஒரு அப்போஸ்தலர் என்னும் எண்ணமே அவரைவிட்டு நீங்கினது. இறைவனின் "பரிசுத்தவான்கள் எல்லாரிலும் சிறியவனாகிய நான்" என்கிறார். இன்னும் தவத்தின் வழியில் சென்ற அவர் இறுதியில் தன்னை "பாவிகளில் பிரதான பாவி நான்" என்றுரைக்கும் உன்னத நிலையடைகிறார் (1 கொரி 15:9 ; எபேசி. 3:8; 1 தீமோத்தேயு 1:15). தவத்தினால் வாழ்க்கையடையும் இந்த உன்னத நிலை குறித்தே வள்ளுவப் பெருந்தகையும்,

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" (திருக்குறள் 27:7) என்னும் குறளில் சுட்டுகின்றார். தங்கத்தைச் சுடச்சுட அது மிளிர்வதைப்போல், தவசீலர்களைத் துன்பங்கள் வருத்த வருத்த ஞான உணர்வு (தாழ்மை சிந்தை) மிகும் என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

"நான் போகும் வழியை அவர் (கர்த்தர்) அறிவார், அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்" (யோபு.23:10).

"அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு (தவம், துன்பம்), இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (1 பேதுரு 1:7).

30. தன்னுயிர் தானறப் பெற்றான்

(தன் உயிரை தனதென்று எண்ணாதவன்)

எபிரேயர் 11:25 திருக்குறள் : தவம் (27)

இந்த உலகம் பார்த்த மிகப்பெரிய மனிதருள் ஒருவர் மோசே. மோசே எபிரேய வம்சத்தைச் சார்ந்தவர். அவர் பிறந்த சமயத்தில் அவருடைய வம்சத்தினர் அனைவரும் எகிப்து நாட்டில் அடிமைகளாக வாழ்ந்து வந்தனர். இந்த அடிமைகள் எழுபதுபேராக எகிப்தில் நுழைந்தவர்கள் இப்போது பல லட்சம் மக்களாகப் பெருகின தோடல்லாமல், எகிப்தியரைக் காட்டிலும் சரீர பெலன் படைத்தவராயும் விளங்கினர். எனவே, இவர்களின் மக்கள் பெருக்கத்தைத் தடைசெய்ய வேண்டும் என்னும் நோக்கத்துடன், பிறக்கும் ஆண் குழந்தைகளனைவரையும் பிறந்தவுடனேயே கொன்று விடும்படி தன் வீரர்களுக்கு பார்வோன் கட்டளை பிறப்பித்தான். அந்த சமயத்தில் பிறந்த குழந்தைகளுள் ஒன்றுதான் மோசே என்பவர். தன் குழந்தையின் சௌந்தரிய முகத்தைக் கண்ட அதன் தாய் யோகெபேத் எப்படியோ மூன்று மாதமளவும் எகிப்திய வீரர் எவர் கண்களிலும் படாமல் ஒளித்து வைத்துக் காப்பாற்றினார். அதன் பின்னர் குழந்தையை மறைத்து வைக்கக் கூடாமல் எகிப்து ராஜாவாகிய பார்வோனின் மகள் வழக்கமாகக் குளிக்கும் இடத்தில் நைல்நதியில் தன் பிள்ளையை ஒரு பெட்டியில் அடைத்து வைத்து ராஜாத்தியின் முன்பு மிதந்து வரும்படி விட்டு விட்டாள்.

பெட்டியில் மிதந்து வந்த குழந்தையை எடுத்துப் பார்த்தபோது அதன் அழகில் தன் மனதைப் பறி கொடுத்தவளாக, எபிரேயக் குழந்தை என்று கண்டபின்னரும், அச்சிறு பாலகனைத் தன் மகனாகவே வளர்த்து வர குழந்தையின் தாயாகிய யேகெபேத்தையே வாடகைத் தாயாக அமர்த்தினாள். இப்போது யேகெபேத்தின் மடியில் பார்வோனுடைய குமாரத்தியின் மகன் சீரும் சிறப்புமாக எவ்வித பயமும் இன்றி வளர்ந்து வரலானான். தாய்ப்பால் மறக்கும் வரை தன் தாயின் மடியில் குழந்தை வளர்ந்தபோது, எபிரேய மக்களுடைய அடிமைத்தனம் குறித்தும், அதனால் அவர்கள் படும் வேதனைகளையும், இந்த அடிமைத்தனத்தின் நுகத்தை முறித்து தங்களை விடுவிக்கும் ஒரு இரட்சகன் வருவான் என்று ஏங்கி எதிர்பார்த்துக் காத்திருந்த எபிரேய மக்களின் பரிதாபம் குறித்தும், மோசேயும் இந்த இனத்தைச் சேர்ந்தவன்தான் என்ற விபரத்தையும், இந்த மக்கள் எதிர்பார்த்து ஏங்கிக் காத்திருக்கும் அந்த இரட்சகன் நீதான் என்றும் யேகெபத் தன் குழந்தைக்குத் தாலாட்டும் போதே இந்த உணர்வுகளையும் சேர்த்து ஊட்டினார்.

உரிய காலம் வந்தபோது மோசேயை யேகெபேத் பார்வோனின் குமாரத்தியினிடம் ஒப்படைத்தாள். அது முதல் மோசே பார்வோனின் அரண்மனையில் சகல ஆடம்பரங்களின் மத்தியில் இளவரசனாக, அனைத்துறைகளிலும் சிறப்பான பயிற்சி பெற்ற சிறந்த வீரனாக, எகிப்திய எல்லா சாஸ்திரங்களிலும் கற்றுத் தேர்ந்தவனாக விளங்கினார். அவர் வளர்ந்து வந்த விதம் பற்றி விவிலியம் ஒரே வசனத்தில் அழகாகக் குறிப்பிடுகிறது; "மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்" (அப்போஸ்தலர் 7:22). இவ்விதம் அரண்மனை சுகத்திலும், செல்வத்திலும் வளர்ந்து வந்த போதிலும் இளவயதில் தன் தாய் யேகெபேத் ஊட்டி வளர்த்த உணர்வுப் பாலின் நினைவுகளை மோசே ஒரு போதும் மறந்தாரில்லை.

அப்போஸ்தலர் 7:23-ல் வாசிக்கிறோம் : "அவனுக்கு (மோசே) நாற்பது வயதானபோது, இஸ்ரவேல் புத்திரராகிய (எபிரேயமக்கள்) தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் என்னமுண்டாயிற்று". இவ்வித எண்ணம் உண்டானதற்குக் காரணம், 'தான் தன்னுடையவனல்ல; எபிரேய மக்களின் விடுதலைக்காகவே வாழ்பவன்' என்னும் சிந்தைதான். பிற்காலத்தில் பல லட்சக்கணக்கான எபிரேய மக்களை அவர்கள் கட்டப்பட்டிருந்த அடிமைத்தளைகளை உடைத்தெறிந்து, மாபெரும் விடுதலைப் பயணத்தில் நாற்பதாண்டு காலம் நடத்தி, அவர்களுடைய முற்பிதாக்களுக்கு இறைவன் வாக்குப் பண்ணின தேசத்தில் நடத்தி, அந்த மக்களுக்குமட்டுமல்ல 'விடுதலை சித்தாந்தத்திற்கே' மாபெரும் வழிகாட்டியாக எங்குமுள்ள மக்கள் எல்லாராலும் புகழப்படுகிறார்

என்றால் தன் வாழ்வில் அன்றொருநாள் அவர் செய்த அந்த மாபெரும் தீர்மானம்தான். விவிலியம் இவ்விதம் உரைக்கிறது. "... மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் இறைவனுடைய மக்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்து கொண்டு... ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தை விட்டுப் போனான்..." (எபிரெயர் 11:24-27). எனவேதான் இன்றளவும் மோசே அனைத்து மக்களுக்குள்ளும் மிகச் சிறந்ததொரு மனிதராகப் போற்றப்பெறுகிறார். இந்த ஒப்பற்ற உண்மைதான் தெய்வப்புலவராலும் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது.

> "**தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய**
> **மன்னுயிர் எல்லாம் தொழும்**" (திருக்குறள் 27:8)

தன்னுயிர் தனதல்ல, பிறமக்களின் நன்மைக்கே என்றெண்ணி வாழ்பவரை உலகமாந்தர் அனைவரும் போற்றுவர் என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

அமெரிக்க வெள்ளை மனிதரான ஆபிரகாம் லிங்கன் தன் வாழ்வின் பல போராட்டங்கள், தோல்விகளுக்குப் பின் 1861-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அதிபராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார். வாழ்க்கையின் உன்னத நிலையை அடைந்தாயிற்று என்று கிடைத்த பெரிய பதவியினால் இறும்பூதெய்து அமர்ந்து விடாமல் அன்று நாட்டில் வாழ்ந்த பல லட்சக்கணக்கான கருப்பின நீக்ரோ அடிமை மக்களின் விடுதலையே தன் வாழ்வின் லட்சியமென அறிக்கையிட்டார். உடனே மனித அடிமைத் தனத்தை ஆதரித்து வந்த பதினொரு மாநிலங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கூட்டாட்சியிலிருந்து (Federal Set-up) விலகுவதாக அறிவித்தபோதும், ஒரு மாபெரும் உள்நாட்டு யுத்தத்தை நடத்தி முடித்து, அடிமைகள் அனைவருக்கும் விடுதலைப் பிரகடனத்தைச் (Emancipation Proclamation) சட்டமாக்கி, நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் பங்கமேற்படாமல் செயல்பட்ட அதிபர் ஆபிரகாம் லிங்கன், மோசே போன்ற ஒரு மாபெரும் மனிதராகவே, பிறர் நலன்காண தன் உயிர் தனதென எண்ணாப் பெருந்தகையராக இன்றும் மாண்புடன் விளங்குகிறார். சிறுமதிகொண்ட மனிதப் பதர் ஒன்றின் துப்பாக்கிக் குண்டிற்கு அவர் இறையான போதிலும், மனிதருள் மாபெரும் விளக்காக இன்றும் திகழ்கிறார். "**அப்படியே மனித குமாரனும் (இயேசு கிறிஸ்து) ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்**" (மத்தேயு 20:28; மாற்கு 10:45).

31. தன்நெஞ்சம் தானறிகுற்றம்

மத்தேயு 26:23-25 திருக்குறள் : கூடா ஒழுக்கம் (28)

இயேசு பெருமான் இவ்வுலகில் வாழ்ந்து மனுமக்களுக்கு இறையரசு குறித்து உபதேசம் செய்து வந்தபோது எப்பொழுதும் தம்முடனேயே இருக்கும்படி பன்னிரண்டு சீடர்களை தமக்காகத் தெரிந்து கொண்டார். இயேசுவிடம் அவ்விதம் வந்து சேர்ந்தவர்களுள் யூதாஸ் காரியோத் என்பவனும் ஒருவன். பன்னிருவருள்ளும் அவனுக்கு பிரதான இடமும் கொடுத்திருந்தார். அந்த சிறிய குழுவின் பொருளாளராக, பணவரவு செலவுகளையெல்லாம் நிர்வகிப்போனாக யூதாஸ் காரியோத் விளங்கினார். இயேசு பெருமான் செல்லுமிடமெங்கும் உடன் செல்லவும், தங்கவும், புசிக்கவும், ஊழியம் செய்யவும், அவருடைய உபதேசங்களைக் கேட்கும் பேறும் பெற்றிருந்தார். பார்வைக்கு நல்லவனாகத் தோன்றும் பொருட்டு வாழ்ந்து கொண்டிருந்தார்; ஆனால் தன் எண்ணங்களிலும், செயல்பாட்டிலும், நட்பிலும் களங்கமற்று விளங்கவில்லை.

இயேசு பெருமான் மீது பொறாமை கொண்டு, அவரைப் பிடித்து கொலை செய்ய வகைதேடிக் கொண்டிருந்த ஒரு ஆதிக்கக் கும்பல் அங்கே இருந்தது. அக்கும்பலுடன் இயேசுவின் சீடனாகிய யூதாஸ் நட்புக் கொண்டு, தன் நெஞ்சில் விஷச் செடிதனை நீர் ஊற்றி வளர்த்துக் கொண்டிருந்தார். இயேசுவைக் கொலை செய்ய வழிதேடிக் கொண்டிருந்தவர்களுக்கு இவரே வலியச் சென்று, அவர்கள் கொடுத்த 30 வெள்ளிக் காசுகளுக்காக தன்னை பிராண சிநேகிதனாகப் பாராட்டி தன்னுடன் வைத்துக் கொண்டிருந்த தன் எஜமானும், ஆண்டவருமாயிருந்த இயேசு பெருமானை வஞ்சகமாகக் காட்டிக் கொடுத்து, அவருடைய கொலைக்கு மிகப் பெரிய காரணமாகி, உலகில் என்றென்றும் அழியாத தீச்சொல்லுக்கும் பழிக்கும் உள்ளானார். அவர் கொண்டிருந்த கூடா நட்பே தன்னை நேசித்தவருக்கு விரோதமாகச் செயல்பட அவரைத் தூண்டிவிட்டது.

உலகில் அனைவராலும் போற்றப்பெறுகின்ற இறைமைந்தன் இயேசுவோடே கூட இருந்தும் அவன் தன் உள்ளத்தைக் குற்றச் செயலாகிய பாவத்திலிருந்து விடுவித்துக் கொள்ளவில்லை. அந்த வாழ்வு பயனின்றி விழுந்து போயிற்று. இதை 'கூடா ஒழுக்கம்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவப் பெருந்தகை மிக அருமையாக எடுத்தியம்புகிறார்.

"வானுயர்தோற்றம் எவன் செய்யும் தன்நெஞ்சம்
தானறி குற்றப் படின்" (திருக்குறள் 28:2)

தன்னுடைய மனதில் குற்றத்தை ஒளித்து வைத்துக் கொண்டு, மிக உயர்ந்த மனிதன் போன்ற தோற்றமுடையவனாக வாழ்வதால் என்ன பயனுண்டாகும் என்பதாகும்.

செந்நாப்போதர் இவ்வித வாழ்வுநெறி கொண்டோரை இன்னும் கடுமையான சொற்களால் சாடுகிறார். இப்படிப்பட்டோர் நற்காரியங்களில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளும் மனவலிமையற்றோர். இவர்கள் தங்கள் சுயலாபங்களுக்காக தங்கள் நல்லியல்புகளை இழந்து விடும் தன்மையுடையோர். இவர்கள் புலியைப்போல தங்களைக் காட்டிக் கொண்டாலும் அத்தகைய மனவலிமையற்றவர்கள். பசுவானது தன் உடம்பில் புலியின் தோலைப் போர்த்துக் கொள்வதால் புலியின் உறுதித் தன்மையை அடைந்து கொள்ளாதிருப்பதைப் போன்றது என திருவள்ளுவர் உரைக்கின்றார்.

"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று" (திருக்குறள் 28:3)

மனவலிமையில்லாதவன் தவவேடம் தரித்துக் கொள்வது, புலித்தோலைப் போர்த்து நிற்கும் பசுவின் தன்மையது.

மேலும் சிந்தனைக்கு :

நீற்றைப் புனைந்தென்ன? நீராடப்போயென்ன? நீ மனமே!
மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லை; மாமறைநூல்
ஏற்றிக் கிடக்கும் எழுகோடி மந்திரம் என்ன கண்டாய்!
ஆற்றில் கிடந்தும் துறையறியாமல் அலைகின்றையோ!

(பட்டினத்தார் பாடல்கள் பக்.344 - சித்தர் பாடல்கள் - பாவை பப்ளிகேஷன்ஸ்)

32. நெஞ்சில் துறவார்

(உள்ளத்தில் ஆசைகளை விடாதிருத்தல்)

11 தீமோத்தேயு 4:10 திருக்குறள் : கூடா ஒழுக்கம் (28)

அப்போஸ்தலராகிய பவுலடிகளார் ஒரு மிகச் சிறந்த இறைப்பணியாளர். யூதனாக அவர் பிறந்திருந்தபோதும், மிகச் சிறப்பான செல்வச் செழிப்புகளில் அவர் குடும்பம் வாழ்ந்து கொண்டிருந்தபோதும், பவுலடிகளார் அன்று 'நாய்கள்' என்றும் 'பேய்கள்' என்றும் யூதர்களால் கருதப்பட்ட புற இன மக்களிடம் சென்று இறைவனின் நற்செய்திப் பணி செய்வதையே தன் வாழ்வின் நோக்கமாகக் கொண்டார். ஐரோப்பா மற்றும் சிறிய ஆசியாவின் பல பகுதிகளுக்கும் தொடர்ந்து பிரயாணங்கள் செய்து பல திருச்சபைகளை ஏற்படுத்தி, பல்லாயிரக்கணக்கான புற இன மக்களை இறையரசுக்குள் வழிநடத்தினார். அவர் அவ்விதம் ஊழியம் செய்து வந்தபோது அநேகம் இளைஞர்களை இறைப்பணிக்குள் கொண்டு வந்தார். தீமோத்தேயு, லூக்கா, தீத்து, எப்பாப்பிரோ, தேமா போன்ற அநேகர் அவருடைய இறைப்பணிக் குழுவில் இருந்தனர்.

தாங்கள் கொண்டிருந்த பழைய உலகப்பற்றினை விட்டு, புதிதாகத் தரித்துக் கொண்டிருக்கும் இறையன்பிற்குள் பூரணமாக விளங்க வேண்டுமென்னும் பயிற்சியை பவுலடிகளார் இந்த இளைஞர்களுக்கு அளித்தார். அவ்விதம் பயிற்சி பெற்றவர்களுள் தேமா என்னும் பேர் கொண்ட மனிதனும் இருந்தார். ஆனால், தேமாவோ பவுலடிகளாரின் இறைப்பணிக்குழுவினருள் பிரதான இடத்தில் இருந்து வந்தபோதும் தன் பழைய வாழ்வின் ஆசாபாசங்களைத் தன் உள்ளத்திலிருந்து நீக்காமலேயே, புது வாழ்வில் நிலைத்திருப்பவர் போல் காட்டிக் கொண்டார். ஆனால், நாளடைவில் அவர் உள்ளத்தில் மறைந்திருந்த உலகப்பற்றும், உலகப் பொருட்கள் மேல் ஆசையும் புதுவாழ்வின் எல்லையை விட்டே அவரைத் துரத்தி, முடிவில் இந்த இறைப்பணிக் குழுவினரை விட்டுப்போய்விடுகிற நிலை ஏற்பட்டு விட்டது.

எனவேதான், ஒருவர் தாம் கொண்டிருக்கும் வாழ்வின் நோக்கம் அவர் தம் உள்ளத்தில் உறுதிப்பட வேண்டும். உள்ளத்தில் அவ்வித உறுதிப்பாடின்றி தன்னைப் பற்றற்றவர் எனக் காண்பிக்கும் வஞ்சக வாழ்வு இறுதியில் வெளிப்பட்டு நீங்காப் பழியை ஏற்படுத்திவிடும். தேமா குறித்து பவுலடிகளார் கூறுவதைப் பாருங்கள் : "நீ (தீமோத்தேயு) சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு; ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் (உலகப்பற்று) ஆசை வைத்து, என்னை விட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்திற்குப் போய்விட்டான்..." (11 தீமோத்தேயு 4:10) இத்தன்மை குறித்தே வள்ளுவரும்,

> **"நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து**
> **வாழ்வாரின் வன்கணார் இல்"** (திருக்குறள் 28:6)

உள்ளத்தில் வீண் ஆசைகளை அகற்றாமல், பற்றற்றவர் போல் வாழ்பவரைக் காட்டிலும் இழிந்த நிலையோர் யாருமிலர் என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

1. **அமரர் கல்கியின்** அழியாப் புகழ்பெற்ற சரித்திர நாவலான 'பொன்னியின் செல்வன்' - ல் சைவப்பெருமகனார் கண்டராதித்த சோழர், அருடைய தர்மபத்தினி செம்பியன் மாதேவி இருவரும் 'மதுராந்தகனை' தங்களது வளர்ப்பு மகனாக, சிவபக்தியில் சிறந்தோனாக வெகுகாலம் வளர்த்தார்கள். கணவரின் மறைவிற்குப் பின்னரும் தாயார் அவ்விதமே மகனை வளர்த்து வந்தார். மதுராந்தகனும் தான் சைவப் பற்றுடையோன் போலவே வெளிக்காட்டிக் கொண்டாலும், அவன் உள்ளம் உலகப்பற்றை நீக்காது, பிரபஞ்சத்தை ஆளவேண்டும் என்னும் ஆசையுடையவனாக விளங்குகிறான். அதனால் சீர்கெட்ட இழிவாழ்வே அவனது முடிவாயிற்று.

2. **பாம்பாட்டிச் சித்தரும்** இவ்வுண்மையைப் பாடுகிறார் :

எண்ணரிய புண்ணியங்கள் எல்லாம் செய்தும் என்?
ஏகன் அடி நெஞ்சமதில் எண்ணா விடிலே?
பண்ணரிய தவப்பயன் பத்தி இல்லையேல்
பாழ்படும் என்று துணிந்து ஆடு பாம்பே!

உள்ளமதில் இறை எண்ணம், பக்தி இல்லாமல் வெளிப்படையாக எத்தனை புண்ணியங்கள் செய்ததாகத் தோன்றினும் இறுதியில் தீயநிலையே வந்தெட்டும் என்பதாகும்.

3. **கம்பராமாயாணத்தில்** வரும் இராவணன் மந்திரப்படலத்தில் தன் தமையன் **இராவணனைப்** பார்த்து தம்பி **வீடணன்** கூறும்போது..

எண்பொருட்டு ஒன்றி நின்ற எவரும் எண்ணினால்
விண்பொருட்டு ஒன்றிய உயர்வும் மீட்சியும்
பெண்பொருட்டு அன்றியும் பிறிதுண்டாமெனின்
மண்பொருட்டு அன்றியும் வரவும் வல்லதோ?

"விண்ணவரும் வியந்து காண உயர்ந்த வாழ்வுகளை ஒருவன் அடைந்திருந்தாலும், எண்ணம் இழிந்ததாயின் அவன் இழிந்தவனேயாவன்..." என்றார்

கவிராஜ பண்டிதரின் விளக்கம் : கம்பன் நிலை (தமிழ் நிலையம்)

4. விவிலியம்: "ஒரு காரியம் உண்டு, அதைச் சொல்லுகிறேன்; சன்மார்க்கனையும் (நல்லவன்போல் தன்னைக் காண்பித்துக் கொள்பவன்) துன்மார்க்கனையும் (தீயவன்) அவர் (கர்த்தர்) அழிக்கிறார்." (யோபு 9:22).

"சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந் தீர்க்கும் காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன்" (பிரசங்கி 3:17).

33. கள்ளாமை காக்கத்தன் நெஞ்சு

(களவாடும் எண்ணத்தை நீக்குதல்)

11 ராஜா 5-ம் அதிகாரம் திருக்குறள் : கள்ளாமை (29)

சீரியா தேசத்தின் பிரதான படைத்தளபதி நாகமான் என்னும் பெயருடையான். சீரியாதேசத்தில் அரசனுக்கு அடுத்த நிலையில் அதிகாரம் படைத்தவனாகவும், பராக்கிரமசாலியாகவும் விளங்கிய அவனுடைய சரீரத்தில் தொழுநோய் பீடிக்கத் துவங்கியது. சில நாட்களில் அது வளர்ந்தும் விட்டது. இந்த நோய் அனைவராலும் அருவருக்கப்படும் வியாதி என்பதால் நாகமான் மிக்க கவலை கொண்டான். கவலை அவனுக்குள் நாளுக்குநாள் அதிகரித்து வந்தது.

ஒரு விசை சீரிய தேசத்துப் படைகள் இஸ்ரவேல் என்னும் நாட்டின் மீது படையெடுத்துச் சென்றபோது ஒரு சிறிய இஸ்ரவேல் தேசத்துப் பெண்ணை சிறைப்பிடித்து வந்தார்கள். அவள் இப்போது நாகமானின் வீட்டில் அவருடைய மனைவிக்கு பணிவிடை செய்யும் வேலைக்காரப் பெண்ணாயிருந்தாள். அவள் ஒருநாள் தன் எஜமானியைப் பார்த்து, "என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற இறைவாக்கினரிடம் செல்வாரானால் நலமாயிருக்கும். அவர் இவருடைய தொழுநோயை நீக்கி விடுவார் என்றாள்." நாகமானின் மனைவி, "இஸ்ரவேல் தேசத்துப் பெண் இன்ன இன்ன பிரகாரமாய்ச் சொல்லுகிறாள் என்று தன் ஆண்டவனிடத்தில் (கணவன்) அறிவித்தாள்." இச்செய்தி நாகமானின் உள்ளத்தில் மாபெரும் நம்பிக்கையை ஏற்படுத்தவே, இஸ்ரவேலிலுள்ள **எலிசா** என்னும் இறைவாக்கினரிடம் செல்ல தன் பரிவாரங்களை ஆயத்தப்படுத்தி, இறைவாக்கினருக்குப் பரிசுப் பொருட்களாக தன்கையிலே நானூறு கிலோ வெள்ளியையும், ஆறாயிரம் பொற்காசுகளையும், பத்து பாட்டாடைகளையும் எடுத்துக் கொண்டு பயணமானார். சமாரியா சென்ற நாகமானிடம் **எலிசா** தீர்க்கர் "நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு, அப்பொழுது உன்மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொன்னார்." அவ்வண்ணமே நாகமான் யோர்தானில் ஏழுவிசை ஸ்நானம் பண்ணி எழுந்தபோது அவருடைய சரீரத்தில் காணப்பட்ட தொழுநோய் முழுதும் மாறி அவருடைய மாம்சம் சிறுபிள்ளையின் மாம்சம் போல மிருதுவாக, சுத்தமாக மாறியது. இந்த அற்புதத்தைக் கண்ட நாகமான் தன் பரிவாரங்களுடன் திரும்பவும் தீர்க்கர் இல்லம் வந்து தன்னுடைய வெகுமதிகளை அவர் முன் வைத்து, தன் நன்றிக் காணிக்கையாக ஏற்றுக்கொள்ள இறைஞ்சி நின்றார். இறைவாக்கினர் எலிசாவோ தனக்கு எவ்வித பரிசும் வெகுமதியும் வேண்டாமென்று மறுத்து விட வேறுவழியின்றி தன் ரதத்தில் ஏறி சீரியா தேசம் நோக்கி நாகமான் செல்லத்துவங்கினார்.

இறைவாக்கினர் எலிசாவின் வேலைக்காரன் பெயர் கேயாசி என்பதாகும். நிகழ்ந்த நிகழ்வுகள் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த வேலைக்காரன் கேயாசி, தன் எஜமான் வேண்டாமென்று தடுத்துவிட்ட பரிசுப்பொருள்கள் மேல் ஆவலுற்று வஞ்சகமாக அப்பொருள்களைக் கவர்ந்து கொண்டுவர ஆசையுற்று நாகமான் பிறகே ஓடி, தன்னிடம் வந்துள்ள சிலருக்குக் கொடுக்க தன் எஜமான் வாங்கி வரச் சொன்னதாகக் கூறி நாகமானை ஏமாற்றி சில பொருள்களைப் பெற்று தன் தலைமேல் வைத்துச் சுமந்து சென்று தன் வீட்டில் ஒளித்து வைத்து விட்டு வந்தான். இதுகுறித்து தன் எஜமான் கேட்டபோது உண்மையை மறைத்து தான் எங்கும் செல்ல வில்லையென பொய்யுரைக்கவும் செய்தான். விளைவு நாகமானைப் பிடித்திருந்த அந்தத் தொழுநோய் கேயாசியைப் பிடித்துக் கொண்டது. இன்றும் கேயாசி பரிகசிக்கப்படும் ஒரு நபராகவே எண்ணப்படுகிறார்.

எனவேதான் வள்ளுவப்பெருந்தகை இவ்விதம் எச்சரிக்கின்றார்.

"எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கத்தன் நெஞ்சு" (திருக்குறள் 29:1)

பிறர் தன்னைப் பரிகசிக்கக் கூடாது என்று எண்ணுபவன், தானும் பிறர் பொருளை வஞ்சித்து கவர்ந்து கொள்ளாது தன்னைக் காக்கவேண்டும்.

"உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்" (திருக்குறள் 29:2)

பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ளவேண்டும் என்று உள்ளத்தில் எண்ணும் எண்ணமே தனக்கு தீமையைக் கொண்டு வரும் என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

கம்பராமாயாணம் 'இராவணன் மந்திரப்படலத்தில்' மற்றுமொருகாட்சி. இராவணன் தம்பி கும்பகர்ணன் தன் தமையன் வஞ்சகமாக இராமனுடைய மனைவி சீதாபிராட்டியை கவர்ந்து வந்து வைத்திருக்கும் தீச்செயல் அரக்கர் குலத்தையே அழிக்கும் செயல் என எச்சரிக்கும் விதம் அழகு.

ஓவியம் அமைந்தநகர் தீயுண உளைந்தாய்!
கோவியல் அழிந்ததென வேறுஒரு குலத்தான்
தேவியை நயந்துசிறை வைத்த செயல் நன்றோ
பாவியர் உறும்பழி இதிற் பழியும் உண்டோ?

என்று ஒருவன் இல்லுறை தவத்தியை இரங்காய்
வன்தொழிலினாய் மறைதுறந்து சிறைவைத்தாய்
அன்று ஒழிவதாயின அரக்கர் புகழ் ஐய
புன்தொழிலினால் இசைபொறுத்தல் புலமைத்தோ!

கவிராஜ பண்டிதரின் விளக்கவுரை :

"மன்னர்பெரும! உன் ஊரைத் தீ புகுந்து எரித்துவிட்டதாக உளைந்து வருந்துகிறாய்; நீ புகுந்து செய்திருக்கும் தீமையை நினைத்து பார்க்கவில்லை. பார்த்தால் தீயுண்ட காரணத்தைப் பூரணமாக அறிந்து கொள்ளலாம். வேறு ஒருவனுடைய இனிய மனைவியை வலிந்து கவர்ந்து கொண்டு வந்து சிறையில் வைத்திருக்கிறாயே! இது எவ்வளவு பாதகமான செயல்! இதை விடக் கொடிய பழியும் பாவமும் வேறு ஏதேனும் உண்டோ?"

"பிறருடைய பத்தினியை இச்சித்து எடுத்து வந்து என்றைக்கு இலங்கையில் நீ சிறைவைத்தாயோ, அன்றே அரக்கருடைய சீரும் சிறப்பும் பேரும் புகழும் ஒருங்கே அழிந்து ஒழிந்து போயின" (கம்பன் நிலை - தமிழ்நிலையம் தொகுதி 9 பக்.39-42.)

34. பொய்மையும் வாய்மையிடத்த

(பொய்கூறுதலும் உண்மையாகும்)

யோனா 3:10 திருக்குறள் : வாய்மை (30)

நினிவே என்னும் மகா விஸ்தாரமான பெரிய நகரம். அதுவே அன்றைய அசீரிய ராஜ்யத்தின் தலைநகர். சுமார் ஒரு லட்சத்து இருபதினாயிரம் பேர் அங்கே குடியிருந்தார்கள். அந்த மக்கள் மிகப் பொல்லாதவர்களாக வாழ்ந்து வந்தார்கள். இறைவனே அவர்களைக் குறித்து "அவர்களுடைய அக்கிரமம் என் சமூகத்தில் வந்து எட்டினது என்றார்" (யோனா 1:2). எனவே அந்நகரத்தை அடியோடு அழித்து விடுவது என இறைவன் தீர்மானித்தார்.

அப்போது இஸ்ரவேல் தேசத்தில் **யோனா** என்னும் பேர் கொண்ட ஒரு இறைவாக்கினர் இருந்தார். ஒரு நாள் இறைவன் அவரை அழைத்து "நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்கு போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி" என்றுரைத்தார். யோனாவோ, இறைவன் இப்போது இப்படித் தான் சொல்வார்; ஒரு வேளை என் பிரசங்கத்தைக் கேட்டு அந்த மக்கள் தங்களுடைய பாவ வழிகளை விட்டு மனந்திரும்பினால் அவர்களை அவர் மன்னித்து தாம் சொன்னபடி அழிக்காமல் விட்டுவிடுவார்; அப்படி நடந்து விட்டால் நானல்லவோ பொய்காரனாகக் காணப்படுவேன் என மனதில் எண்ணி நினிவே நோக்கி செய்யவேண்டிய தன் பிரயாணத்தை மாற்றி, தர்ஷீசுக்குப் போகும் கப்பலில் ஏறி ஓடிப் போகிறார். இறைவனோ யோனாவை விட்டபாடில்லை. மிகப்பயங்கரமான புயலை கடலில் அனுப்பியதின் மூலம் கப்பலிலிருந்து யோனாவைக் கடலில் தூக்கிப் போடும் நிலையுண்டாயிற்று. அங்கும் யோனா கடலில் அமிழ்ந்து மாண்டு போகாதபடி ஒரு பெரிய மீனுக்குக் கட்டளையிட அது யோனாவை விழுங்கி மூன்று நாட்களுக்குப் பின்னர் நினிவேயின் கரையில் கொண்டு போய் கக்கிப் போட்டது.

இப்போது இரண்டாம் விசையும் கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்கு வந்தது. அவன் எழுந்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான்; யோனா நகரத்தில் பிரவேசித்து "இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் (அழிக்கப்படும்) என்று கூறினான்."

யோனா நினைத்தபடியே நினிவே மக்கள் தங்களுடைய அழிவு குறித்த இறைவனின் எச்சரிப்பைக் கேட்டு, ராஜா முதல் சாதாரண மக்கள் வரை இரட்டுடுத்தி, சாம்பலில் அமர்ந்து, மிருக ஜீவன்கள் மேலும் சிவப்பு வஸ்திரங்களைப் பரப்பி, அனைவரும் தங்களுடைய அக்கிரமங்களுக்காக மனஸ்தாபம் கொண்டு தங்களைக் காக்கும்படி இறைவனிடம் வெகுமனத் தாழ்மையுடன் வேண்டினர். மனுமக்கள் மீது மிகுந்த மனஉருக்கம் கொண்ட இறைவன் 40 நாட்களில் அந்த மக்களை அழிப்பேன் என்று சொன்ன தம் வார்த்தையின் படி செய்யாமல் அவர்களைக் காப்பாற்றினார்.

இச்சமயம் இங்கே நாம் நோக்கும் காரியமென்னவெனில் இறைவனே தாம் ஒன்றைச் சொல்லி, அதைச் செய்யாமல் பொய்யுரைத்து விட்டாரே! இன்னும் நாற்பது நாட்களில் நினிவே அழிக்கப்படும் என்று கூறிய அவருடைய வார்த்தை பொய்யாகவல்லவோ காணப்பட்டு விட்டது? இது பொய்மை தானோ? அதற்கு திருவள்ளுவர் மிக அருமையாகப் பதில் சொல்கிறார்;

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" - திருக்குறள் 30:2

விளைவு குற்றமில்லாத நன்மையாக விளங்குமெனில் அவ்விடத்து ஒருவர் கூறும் பொய்யும் உண்மையென்றே கருதப்படும் என்பதாகும்.

தம்முடைய வார்த்தை பொய்யாகி விடுமோ என இறைவன் நினைத்திருந்தால் ஒரு லட்சத்து இருபதினாயிரம் மக்கள் அன்று அழிந்து ஒழிந்திருப்பார்கள். அவர்களைக் காக்கும் அந்த குற்றமில்லா நன்மை இறைவனுடைய பொய்மையை உண்மையில் வாய்மையாகவே மாற்றி விட்டது.

நாம் கூறுகின்ற வார்த்தைகளினால் விளையப்போகின்ற காரியமே நமது வார்த்தைகள் பொய்மையா அல்லது வாய்மையா என்பதை நிர்ணயிக்கும்.

உதாரணமாக, தன் மகன் ஈசாக்கைப் பலியிடும்படி ஆபிரகாமிடம் தேவன் உரைத்தபோது, அதற்காகவே தன் குமாரனை அழைத்துக் கொண்டு ஆபிரகாம் மோரியா மலை நோக்கிச் செல்கிறார். பிரயாணம் வெகுதூரம் வந்த பின்னர் திடீரென்று ஈசாக்கு தன் தகப்பனைப் பார்த்து, "இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றார். அதற்குஆபிரகாம் என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார் என்றான்" (ஆதியாகமம் 22:7-8).

இங்கே ஆபிரகாமின் வார்த்தைகள் நமது பார்வையில் அப்பட்டமான பொய் என விளங்கும். "உன்னைத்தான் பலி கொடுக்கப்போகிறேன், " என்று ஆபிரகாம் உரைத்திருக்க வேண்டும். அவ்விதம் கூறியிருந்தால் இளைஞனின் மனம் எத்தனை சஞ்சலப்பட்டு, வேதனையுடையதாக அந்தப் பயணம் மாறியிருக்கும்! எனவே, தன் மகனின் நன்மைக்காகக் கூறிய அந்த வார்த்தைகள் பொய்மைபோலத் தோன்றினாலும் அது பொய்யல்ல, வாய்மையிடத்தே காணப்படுவது. அதற்குப் பின்னர் ஆபிரகாம் நல்ல விசுவாச வார்த்தைகளைப் பேசி தன் மகன் தானாகவே தன்னை இறைவனுக்கு ஒப்படைக்கும் நிலைக்கு மாற்றியிருக்க வேண்டும். வள்ளுவப் பெருந்தகையின் வார்த்தைகளிலும் இதையே காணமுடிகிறது.

"வாய்மை எனப்படுவ(து) யாதெனில் யாதொன்றும்
தீமை இலாத சொலல்" - திருக்குறள் 30:1

யாருக்கும் யாதொரு தீமையும் விளைவிக்காத சொற்கள் தாம் வாய்மை அல்லது உண்மை என்று பொருள்படும்.

இத்தகைய சொற்கள் நம் வாயிலிருந்து பிறக்க வேண்டுமெனில் நமது உள்ளம் தூய்மையுடையதாக விளங்க வேண்டும். உள்ளத்தே தூய்மையுடையோர் எச்சமயத்திலும் குற்றமில்லா நல்ல வார்த்தைகளையே பேசுவார். **அவ்விதம் பேசப்படும் வார்த்தைகள் அவருடைய உள்ளத்தூய்மையை வெளிப்படுத்துவதாக அமையும்.**

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்" - திருக்குறள் 30:8

மேலும் சிந்தனைக்கு :

மாணிக்கவாசகப் பெருமான் வாதவூரைச் சேர்ந்தவராதலால் அவருக்கு திருவாதவூரார் என்னும் பெயர் வந்தது. இவரைப்பாண்டிய மன்னன் (வரகுண பாண்டியன்) தனக்கு முதலமைச்சராக ஏற்படுத்தி 'பிரமராயர்' என்னும் பட்டமும் கொடுத்து வைத்திருந்த காலை, வட தேசத்திலிருந்து ஆரியர் சிறப்பான குதிரைகளைக் கொண்டு வந்து தென்தேசத்தில் விற்கின்றனர் என்னும் சேதியறிந்து, மன்னன் இவரிடம் ஏழுகோடி பொன்னைக் கொடுத்து சிறந்த பரிகளை வாங்கி வருமாறு அனுப்பினார். மாணிக்கவாசகப் பெருமானோ சிவபக்தியில் தன்னையே மறந்தவர். பரிகள் வாங்கி வரச் சென்ற வழியில் (திருப்) பெருந்துறையிலுள்ள ஒரு சிவாலயத்தில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைக் கண்ணுற்ற வாதவூரார் தன்னிடம் அரசனால் ஒப்புவிக்கப்பட்ட அனைத்து செல்வத்தையும் ஆங்கே திருப்பணியில் செலவு செய்துவிட்டு, திருநீறுங்கோவணமுமே தரித்துக்கொண்டு சிவத்தொண்டு செய்து வரலானார். இச்செய்தியைக் கேள்வியுற்ற அரசன் வெகு சினங்க்கொண்டு வாதவூராரைப் பிடித்து வரும்படி ஆணையிட்டான். ஏவலர் மாணிக்கவாசகரிடம் தகவலுரைத்து உடனே மதுரை வரும்படி அழைக்க, வாதவூரார் தன் அகக்கண்கொண்டு இறைவனைத் தரிசித்து தன் நிலையுரைக்க, இறைவனும், "நீ வருந்தாதே, மன்னவன் பால் தூதரொடு சென்று ஆவணித் திங்கள் மூலநாளன்று நல்ல குதிரைகளெல்லாம் வந்து சேரும், தூதர் ஓலை கொணர்ந்தமையால் நான் விரைந்து முன்னே வந்தேன் என்று நீ அரசனுக்கு மொழிக" என்றார். மாணிக்கவாசகரும் அவ்வண்ணமே மொழிந்து அரசனை நம்பும்படி செய்தார். இச்சம்பவம் நோக்கும் போது வாதவூரார் தன் கண்களால் குதிரைகளைக் காணாத போது, அவை பின் வருகிறது என்று கூறியமை மாபெரும் பொய்மைக்

கூற்றே என்று தோன்றுகிறது. ஆனால் இது அவருடைய உள்ளத்தில் இறைவன்பால் கொண்டிருந்த மாபெரும் நம்பிக்கையின் வெளிப்பாடாக அமைந்தது. தமது அடியாரின் வார்த்தைகளை மெய்யாக்க இறைவனே குறித்த நாளில் காட்டு நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி அக்குதிரைகள் ஒன்றின்மேல் தானேயேறி மதுரை வந்த செயல் மாணிக்கவாசகரிடம் காணும் குறள்நெறியை உறுதி செய்கிறது எனலாம்.

"உள்ளத்தால் பொய்யா(து) ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்" - திருக்குறள் 30:4

உள்ளத்தில் பொய்யின்றி வாழும் ஒருவரது புகழ் உலக மக்களால் போற்றப்பெறும் என்பது.

"நரிகளெல்லாம் பெருங்குதிரையாக்கியவா றன்றேயுன் பேரருளே"

"நரியைக் குதிரையாக்கிய நன்மையும்" (காண்க, மாணிக்கவாசகப் பெருமான் வரலாறு - கா. சுப்பிரமணியன் - சாரதா பதிப்பகம்)

35. செல்லிடத்துக்காப்பான் சினங்காப்பான்

11 சாமுவேல் 16:5-10 திருக்குறள் : வெகுளாமை (31)
19 :16-23

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கின் என் காவாக்கால் என். - திருக்குறள் 31:1

தன்கோபம் எங்கு பலிக்கக் கூடுமோ அங்கு கோபத்தை அடக்குபவரே சினங்காப்பவராவார். தன் கோபம் பலிக்க இயலா இடத்தில் அமைதியிருந்தாலும் இல்லாவிட்டாலும் அதில் ஒரு சிறப்புமில்லை.

தாவீதரசர் தன் மகன் அப்சலோமால் வஞ்சிக்கப்பட்டு, நாட்டை விட்டு துரத்தப்பட்டபோது, தம்முடைய மிகப் பலவான்களான வீரர்களுடன் மக்னாயீம் நோக்கிச் செல்கிறார். அச்சமயம் சீமேயி என்னும் மனிதன் தாவீதரசரை தூஷித்துக் கொண்டும், பலவித கெட்ட வார்த்தைகளால் சத்தமிட்டுக் கொண்டும் எதிரே வருகிறான். அப்போது அபிசாய் என்னும் வீரன் அரசரை நோக்கி, "அந்தச் செத்த நாய் ராஜாவாகிய என் ஆண்டவனை தூஷிப்பானேன்? நான் போய் அவன் தலையை வாங்கிப் போடட்டுமே என்றான்." ஆனால் தாவீதரசரோ அப்போது தன் சினத்தை அடக்கிக் கொண்டு, "தாவீதை தூஷிக்கும்படி" இறைவனே அவனுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார் விட்டு விடு", என்று கூறுகிறாரே அதைத் தான் வள்ளுவப்பெருந்தகை **"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்"** என்றுரைக்கிறார்.

வஞ்சித்தெழுந்த அப்சலோம் யுத்தத்தில் மாண்டு போன பின்னர், தாவீதரசர் திரும்பவும் தன் தலைநகர் எருசலேம் நோக்கி வரும்போதும் அந்த சீமேயி மீண்டும் அரசருக்கு எதிர்ப்பட்டு, அவருடைய கால்களில் விழுந்து தன்னை மன்னித்து விட கெஞ்சுகிறான். அப்போதும் அபிசாய், "இறைவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரைத் தூஷித்த இவன் சாகவேண்டாமா?" என்று வெகுண்டெழ, அரசரோ மீண்டும் அமைதி காத்து "செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்" என்னும் குறள் நெறிக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்.

மேலும் சிந்தனைக்கு :

இராவணனும் இராமனும் நேருக்கு நேர் நிற்கின்றனர். போர்க்களம் தன்னில் இராவணனின் வில்லும்பாணங்களும் முறிந்து விழ நிலம் நோக்கி நிற்கின்றான். அப்போதே இராவணனை வதைத்திடும் வகையறிந்த போதும், இராமன் தன் சினங்காக்கும் செயல் இன்றளவும் மாவீரச் செய்கையாகப் போற்றப் பெறுகிறது.

இராவணன் நின்ற நிலை :

அறம்க டந்தவர் செயலிது என்றுஉல கெலாம் ஆர்ப்ப
நிறம் கரிந்திட நிலம் விரல் இணைந்திட நின்றான்
இரங்கு கண்ணினன் எவ்வழி முகத்தினன் தலையன்
வெறுங்கை நாற்றினன் விழுதுடை ஆலன்ன மெய்யன்.

இராமன் கருதியது :

நின்ற வன்நிலை நோக்கிய நெடுந்தகை இவனைக்
கொன்றல் உன்னிலன் வெறுங்கைநின் றான்எனக் கொள்ளா
இன்ற விந்தது போலும்உன் தீமைஎன்று இசையோடு
ஒன்ற வந்தன வாசகம் இனையவன் உரைத்தான்...

ஆளை யாஉனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை **இன்றுபோய்ப் போர்க்கு**
நாளை வாஎன நல்கினான் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல் (முதல்போர்)

36. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க

1 சாமுவேல் 20-ம் அதிகாரம் திருக்குறள் : வெகுளாமை (31)

இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தியருக்கும் இடையே ஒரு பெரும் போர் மூண்டது. அப்போது கோலியாத் என்னும் பெலிஸ்திய அரக்கன் இஸ்ரவேலரில் ஒருவனைத் தெரிந்தனுப்பி தன்னுடன் துவந்த யுத்தம் செய்வதற்கான அழைப்பு விடுத்தான். சவுல் ராஜா முதற்கொண்டு எந்தவொரு வீரனும் கோலியாத்துடன் துவந்த யுத்தம் செய்வதற்கு முன் வராமையால் 40 நாட்கள் அந்த இராட்சதன் சவால் விடுத்து வந்தான்.

இறுதியில் இடைச்சிறுவனான தாவீது களம் வந்து கோலியாத்துடன் யுத்தம் செய்து அவனைக் கொன்றான். இந்த வெற்றிச் செய்தி கேட்ட இஸ்ரவேலின் பெண்கள், "சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றதோ பதினாயிரம்" என்று தேசமெங்கும் பாடலாயினர். இதைக் கேள்வியுற்ற சவுல்ராஜா தாவீதின் மீது பொறாமை கொண்டு அவனைக் கொன்று விடத் திட்டம் தீட்டி அவன் மீது வெகு சினம் கொண்டார். முறையற்ற இந்த சினம், கோபம் சவுல் ராஜாவின் வாழ்வையே சூனியமாக்கி இறுதியில் அவருடைய உயிரையும் கொன்று போட்டது. தாவீதின் மீது சினம் கொள்ளாமல் தன் அருகில் வைத்துக் கொண்டிருந்தபோதெல்லாம் வெற்றிமேல் வெற்றி பெற்ற சவுல் ராஜா, தான் கொண்ட முறையற்ற கோபத்தினால் இறை ஆவியையும், உதவியையும் இழந்து இறுதியில் மடிந்தே போனார். எனவே தான் வள்ளுவப் பெருந்தகை,

"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்" என்றார். - திருக்குறள் 31:5

அதாவது, தன்னை ஒருவன் காத்துக் கொள்ள விரும்பினால் தன் கோபத்தை அடக்க வேண்டும்; அவ்வாறு செய்யாவிடில் அந்தகோபம் இறுதியில் தன்னையே கொன்று விடும் என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

மகாபாரதத்தில் ஓர் அற்புதக் காட்சி! பாண்டவர்களின் தூதுவராக கண்ணபிரான் அஸ்தினாபுரம் அரச சபை மண்டபத்தில் நிற்கிறார். பாரதப்போரைத் தடுத்து சமாதானம் நிலவிட பாண்டவர்களின் ராஜ்ஜியத்தைத் திரும்பக் கொடுக்கக்கோரி, இறுதியில் ஐந்து கிராமங்களை மட்டுமாவது கொடுத்து விடும்படி துரியோதனனிடம் கண்ணபிரான் கூற, ஐந்து கிராமங்களை அல்ல, ஐவருக்கும் ஊசி முனையளவும் இடம் தருவதில்லை என்று இறுமாப்புடன் கூறினான் துரியோதனன். அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல், கோபத்தால் வெகுண்டெழுந்த துரியோதனன் சமாதான தூதுவனாக வந்த கண்ணபிரானையே சிறைப்பிடித்துக் கட்டி அதன் மூலம் பாண்டவர்களுக்கு யுத்த அறைகூவல் விடுக்க எண்ணி அவ்வாறு செயல்பட ஆரம்பித்தான். அந்த முயற்சியில் துரியோதனன் தோற்றதுடன் அவன் கொண்ட அந்த முறையற்ற சினமே இறுதியில் அவன் அழிந்து போவதற்கான வித்தாயிற்று என்பது பாரதக் கதை!

37. மாசற்றார் கோள்

1 சாமுவேல் 24, 26-ம் அதிகாரங்கள் திருக்குறள் : இன்னாசெய்யாமை (32)

இஸ்ரவேலின் முதலாவது ராஜாவாகிய சவுல் இப்போதெல்லாம் தன்னுடைய ராஜ்யபாரம் குறித்தோ, தன் நாட்டு மக்களின் நல்வாழ்வு குறித்தோ, தனது நாட்டின் இராணுவ வலிமை பற்றியோ கவலைப்படும் நிலையிலில்லை. அவருடைய ஒரே பாரம் தாவீது என்னும்

இளைஞனைக் கண்டு பிடித்து கொலை செய்வது தான். இந்த இளைஞனைக் கொலை செய்யும் பொருட்டு பலசாலிகளாகிய 3000 வீரர்களைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, தாவீது எங்கெல்லாம் ஒளிந்து திரிவதாகச் செய்திகள் வருகிறதோ அங்கெல்லாம் தேடித் துருவிப்பார்ப்பதே இப்போது ராஜாவின் பணியாக மாறிப்போனது. அப்படியென்ன தவறிழைத்து விட்டான் இந்த இளைஞன் தாவீது! நாற்பது நாட்கள் இஸ்ரவேலின் ராஜாவுக்கும் இராணுவத்திற்கும் சவால் விட்டுக் கொண்டிருந்த கோலியாத் இராட்சதனைக் கொன்று இஸ்ரவேலை விடுவித்தது தவறா? சவுல் ராஜாவின் ராணுவத்தில் தளபதியாக செயலாற்றி சென்ற விடமெல்லாம் சவுலுக்காக வெற்றி வாகை சூடி வந்தது தாவீதின் குற்றமா? சவுல் ராஜாவின் குமாரனான யோனத்தானிடம் மிக ஆழ்ந்த நட்புக் கொண்டு விளங்கினது குற்றமா? மக்களிடமும் சவுலின் ஊழியக்காரரிடமும் பிரியமாக நடந்து கொண்டது தவறா? என்ன குற்றத்திற்காக தாவீதைக் கொன்றுபோட இப்படி வெறி கொண்டலைகிறார். அதற்கு விவிலியம் தரும் ஒரே காரணம் தாவீது மீது சவுல் ராஜாவுக்கு ஏற்பட்ட பொறாமையும், பயமும் தான்.

தாவீதின் வளர்ச்சி சவுல் ராஜாவின் மனதில் பெரும் பயத்தை உண்டு பண்ணியது. தன் ராஜ்யபாரத்தை தாவீது அபகரித்துவிடக் கூடும் என்னும் அச்சமே! தாவீதோ அப்படிப்பட்ட மனிதனல்ல. சவுல் ராஜாவுக்கும் அவருடைய சேனைக்கும் தப்பி அரணிப்பான காடுகள், மலைகள் ஊடே பதுங்கியிருந்த நாட்களில் ஒரு விசை தாவீதும் அவனுடைய பலவான்களாகிய மனிதரும் தங்கியிருந்த இடத்தினருகில் இருந்த கெபி ஒன்றில் சவுல்ராஜா இளைப்பாறும்படி சென்றார். அதைக்கண்ட தாவீதின் மனிதர், "இதோ, நான் உன் சத்துருவை உன் கையில் ஒப்புக் கொடுப்பேன்; உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாயாக என்று கர்த்தர் உம்மோடே சொன்ன நாள் இதுதானே என்றார்கள்... தன் மனிதரைச் சவுலின்மேல் எழும்ப ஒட்டாமல், அவர்களைத் தடைபண்ணினான் (தாவீது)." தாவீது அவ்விதம் தன் மனிதரைத் தடைசெய்வதற்கு பயன்படுத்திய வார்த்தைகள் சான்றாண்மைக்கு சாட்சியம் கூறும் சத்திய வார்த்தைகள். ஒருபுறம் இரவும் பகலும் தன்னை இடைவிடாமல் துரத்திவரும் சத்துரு. மறுபுறம் இப்போது இந்த சத்துருவைக் கொன்று விட்டால் இஸ்ரவேல் ராஜ்யம் தன் வசமாகும் நிலை; அத்துடன் குன்றாத செல்வமும், ராஜபோக வாழ்வும் தன்னைச் சூழ்ந்து நிற்கும் என்ற எண்ணம். இந்நிலையூடே தாவீதின் வார்த்தைகள், "அவன் தன் மனிதரைப் பார்த்து கர்த்தர் அபிஷேகம் பண்ணின என் ஆண்டவன்மேல் என் கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக; அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று சொல்லிய வார்த்தைகளைக் கவனிக்கும்போது திருவள்ளுவரின் பொய்யா மொழியே நினைவிற்கு வருகிறது.

**"சிறப்புஈனும் செல்வம் பெரினும் பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசற்றார்கோள்"** - திருக்குறள் 32:1

சிறப்புமிக்க செல்வம் தன்னைத் தேடிவருவதாக இருப்பினும், அதைப்பெறுவதற்காக மற்றவருக்கு துன்பம் விளைவிக்கும் செயலைச் செய்யாதிருத்தலே சான்றோரின் வாழ்வு நெறியாகும்.

மேலும் சிந்தனைக்கு :

பரதன் அயோத்தியில் இல்லாதவேளை தன் சிற்றன்னை கைகேயியின் கூற்றால் இராமன் வனம் செல்ல நேர்ந்தது. அயோத்தி திரும்பிய பரதன் நேரிட்டவைகளனைத்தையும் கேட்டபோது உள்ளம் கொதித்தான், சொல்லொண்ணா துயரடைந்தான். தன் அன்னையின் செயலால் சக்கரவர்த்தியாகும் சிறப்பு தன்னிடம் வந்துற்றது என அறிந்தும், அச்செல்வத்தால் ஏற்படும் சிறப்பைப் பெற்றால் தன் தமையனின் உள்ளத்திற்கு மாபெரும் துன்பம் உண்டாகுமோ என அஞ்சி, தன் தமையனை நாடிச் சென்று அவனுடைய பாதரட்சைகளைப் பெற்று வந்து, பதினான்கு ஆண்டுகளின் முடிவில் நீ திரும்பவந்து அயோத்தியின் சக்கிரவர்த்தியாகுமட்டும் நான் மரவுரி தரித்து உன்வரவை எதிர்நோக்கியிருப்பேன்; குறித்த காலத்தில் நீ வரவில்லையெனில் தீ வளர்த்து என் உயிரை மாய்ப்பேன் என்று கூறி நின்ற பரதனின் நிலையும் வள்ளுவப் பெருந்தகையின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதே!

38. இன்னா செய்தாரை ஒறுத்தல்

ஆதியாகமம் 50:20-21; 42:21-22 திருக்குறள் : இன்னாசெய்யாமை (32)

பதிமூன்று ஆண்டுகள் உருண்டோடி விட்டன. யாக்கோபின் 11வது குமாரனாகிய யோசேப்பை அவருடைய மூத்த பத்து சகோதரரும் எகிப்துக்குப்போகும் வியாபாரிகளிடம் 20 வெள்ளிக்காசுகளுக்கு விற்றுப்போட்டார்கள். இந்த நிகழ்வு நடந்து முடிந்து பதிமூன்றாண்டுகள் ஆகி இப்போது யோசேப்பு முப்பது வயது நிரம்பியவர். எகிப்து நாட்டின் பிரதான மந்திரியாக விளங்குகிறார். இந்நிலை வந்தெய்து முன்னர் அவர் கடந்து வந்த பாதைகள் மிக துயரமும், துன்பமும் நிறைந்தவை. எகிப்தில் வரும் என்று யோசேப்பு முன்னறிவித்த ஏழாண்டுகள் கொடிய பஞ்சம் துவங்கினபோது, எகிப்தின் மக்களும், அண்டை நாடுகளிலிருந்தும் உணவிற்காக திரளான மக்கள் யோசேப்பிடம் வந்தனர். அவ்விதம் வந்த மக்கள் கூட்டத்தில் யோசேப்பின் பத்து மூத்த சகோதரர்களும் இருந்தனர். தங்கள் முன் சிங்காசனத்தில் அமர்ந்திருப்பது தங்கள் இளவல் தான் என்பதை அவர்கள் எங்ஙனம் அறிவார்கள்? ஆனால் யோசேப்போ தன் முன் வந்து நிற்போர் தன்னுடைய சகோதரர்கள் தான் என்பதை அறிந்து

கொண்டு, தாங்கள் முன்பு செய்தவைகளை நினைத்துப் பார்க்கச் செய்யும் எண்ணத்தில் அவர்களைச் சற்று கடுமையாக நடத்தினார். தாங்கள் அவ்விதம் கடுமையான விதத்தில் நடத்தப்பட்டபோது அவர்களுடைய எண்ண அலைகள் பல வருடங்கள் தாண்டி பின்னோக்கிச் சென்றது. இதோ, அந்த பத்துபேரும் பேசிக் கொள்கிறார்கள்: "நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக் கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாமற் போனோமே; ஆகையால் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரை ஒருவர் பார்த்துச் சொல்லிக் கொண்டார்கள். அப்பொழுது ரூபன் (அனைவருக்கும் மூத்தவன்) அவர்களைப் பார்த்து : இளைஞனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? நீங்கள் கேளாமற்போனீர்கள்; இப்பொழுது, இதோ, அவன் இரத்தப்பழி நம்மிடத்தில் வாங்கப்படுகிறது என்றான்."

இதனை வாசிக்கும்போது திருவள்ளுவரின் அழியா வார்த்தைகளே நினைவில் நிற்கின்றன:

"பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்" - திருக்குறள் 32:9

அதாவது. மனமறிய பிறருக்கு துன்பம் விளைவிக்கின்ற செயலை நாம் முன்பு செய்தால், அத்துன்பம் தவறாமல் பின்பு நம்மேல் வந்து வருத்தும் என்பதாகும்.

அண்ணனான வாலி வானர குல வேந்தனாய் விளங்கியிருந்த போது அவனுக்கு இளவரசனாக அனைத்து நிலைகளிலும் இணக்கமுள்ள தம்பியாய் வாய்த்தவனே சுக்கிரீவன். பலவகையிலும் நலமாய்த் தமையனுக்குப் பணிந்து இவன் நடந்து வருங்கால் இடையே சிறிது இகல் (பகைமை) விளைந்தது. சுக்கிரீவன் பால் யாதொரு பிழையும் இல்லா திருந்தும் அந்த அண்ணன் உள்ளம் திரிந்து உருத்து வெறுத்து அல்லல் பல செய்தான்; முடிவில் அவனிடமிருந்து இவன் தப்பிப் பிழைத்து மதங்கமலைச் சாரலில் ஒதுங்கியிருந்தான். இவனுடைய மனைவி பெயர் ரூமை நல்ல அழகி. அவளையும் வாலி கவர்ந்து கொண்டான். யாவும் இழந்து அவல நிலையில் இவன் வாழ்ந்து வந்தான். அந்த நிலையிலேதான் இராமனை இவன் காணநேர்ந்தான். வாலி என்னும் பெயருடைய அந்த அதிசய வீரன் தன் தம்பியைப் பகைத்துத் தகாத துன்பங்களை முற்பகல் (முன்பு) செய்ய, இராமபிரான் என்னும் உருவில் பிற்பகல் (பின்னர்) அத்துன்பங்கள் வாலியின் மேல் வந்துற்றதெனலாம்.

முற்பகல் பிறர்க்கு இன்னா செய்தல் பிற்பகல் அது தன்னிடத்தே பயக்கும் என்பது இயற்கை இறை நீதி. இதையே மேலே கண்ட குறளும் (32:9) விவிலியத்தில் காணும் ஓவியமும், வாலி வதைப்படல உண்மையும் உணர்த்தி நிற்கிறது. இந்நிலையில் ஒருவரால் தனக்குத் துன்பம் நேரிட்டாலும் சான்றோர் அதற்குப்பதில் என் செய்வர் என்பது வள்ளுவப்பெருந்தகையின் ஆழ்ந்த உள்நோக்கு. **இன்னா செய்தாரையும் பொறுத்து அவர்பால் நன்மைகள் பயப்பதே சான்றோர் நெறி என்கிறார்.**

பத்து தமையன்மாரும் பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இளவலுக்கு ஆற்றிய துன்பமே இப்போது தங்கள் மேல் ஒற்றியுள்ளது என கருதிய போதிலும், சான்றோனாகிய யோசேப்பின் செயல் வள்ளுவரின் கருத்துக்கு ஒப்பளிப்பதாக உள்ளது. இதோ, யோசேப்பு பேசும் வண்ணம் நோக்குவோம். "யோசேப்பு அவர்களை (பத்து சகோதரர்) நோக்கி பயப்படாதிருங்கள்; நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; இறைவனோ, இப்பொழுது நடந்து வருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடேகாக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப் பண்ணினார். ஆதலால், பயப்படாதிருங்கள்; நான் உங்களையும், உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான். திருக்குறள் இந்த சான்றாண்மையை எவ்விதம் உரைக்கிறது பாருங்கள்"

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்" - திருக்குறள் 32:4

அதாவது, தனக்குத்துன்பம் செய்தாரின் செயலைப் பொறுத்துக் கொண்டு அவருக்கும் நன்மை பாராட்டுவதே அவருக்கு நாம் தரும் தண்டனையாகும்.

"உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர் கொடு, அதினால் நீ அவன் தலையின்மேல் எரிகிற தழல்களைக் குவிப்பாய் (மிகப்பெரும் தண்டனையான வெட்கம்); கர்த்தர் உனக்குப் பலனளிப்பார்" (நீதி மொழிகள் 25:21;22)

மேலும் சிந்தனைக்கு :

இராமபிரானுக்கு இராவணன் செய்த துன்பச் செயல்கள் கொஞ்சமா? தன் அருமை மனைவி சீதாபிராட்டியை வஞ்சமாகக் கவர்ந்து கொண்டு போனதின் விளைவு எடுத்தியம்பவியலாது. அப்படியிருந்தும் போரில் நேருக்கு நேர் நின்றபோது, இராவணனை நிராயுதபாணியாக்கியவேளை தன் சினமனைத்தையும் ஒருத்திரட்டி எதிரியைக் கொன்று வீழ்த்தியிருக்கலாம். இன்றுபோய் நாளை வா!

என்று முதல் நாள் போரில் இராவணனை இரக்கங் கொண்டு போகவிட்டவன் முடிவிலும் அவனைக் கொல்ல விரும்பாமல் எப்படியும் தப்பிப் பிழைக்கும் வழியைத் தெரிந்து கொள்ளும் அவகாசம் கொடுத்து நிற்பது இராமனுடைய சீறிய நெறி. எதிரியைக் கொல்லவேண்டும் என்றோ, அல்லது விரைந்து வெல்ல வேண்டும் என்றோ இந்த வீரன் செயலாற்றவில்லை. எந்த வகையிலாவது எதிரி உள்ளம் திருந்தி உணர்வு தெளிந்து உய்வு பெறவேண்மென்றே அவன் கொதித்துத் தொடுக்கின்ற அஸ்திரங்களையெல்லாம் இவன் கடுத்துத் தடுத்தானேயன்றி அடுத்து ஒன்றும் ஆற்றவில்லை.

அறுத்ததும் தடுத்ததும் அன்றி ஆரியன்
செலுத்து ஒரு தொழில்இடை செய்தது இல்லை

கைதுறந்த படையினன் கண்ணகன்
மெய்துறந்த உணர்வினன் வீழ்தலும்
எய்திறம் தவிர்ந்தான் இமையோர்களை
உய்திறம் துணிந்தான் அறம் உன்னுவான்

இராமனின் இக்காருண்ய செயலே இராவணனுக்குப் போதுமான தண்டனையாயிற்று.

தம்மைப் பல பரிகாசங்கள், நிந்தைகள் புரிந்து, இறுதியில் சிலுவையில் அடித்துப்போட்டவர்களுக்காகவும் உலக இரட்சகர் வேண்டினாரே, "**தந்தையே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியார்களே**" - இந்த வார்த்தைகளை அக்கயவர்கள் உணர்ந்திருந்தால் இதைவிட வேறு தண்டனையேதும் இருக்க முடியுமோ?

39. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்

(இருப்பதை பலருடன் பகிர்ந்து கொள்தல்)

11 ராஜாக்கள் 7-ம் அதிகாரம் திருக்குறள் : கொல்லாமை (33)

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் தன் இராணுவத்தை யெல்லாம் கூட்டிக் கொண்டு வந்து இஸ்ரவேலின் தலைநகரமாகிய சமாரியாவை முற்றுகையிட்டான். அதினால் சமாரியாவிலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. பஞ்சத்தின் கொடுமை குறித்து விவிலியம் இவ்விதம் கூறுகின்றது; "ஒரு கழுதைத்தலை எண்பது வெள்ளிக் காசுக்கும், புறாக்களுக்கு போடுகிற காற்படி பயறு ஐந்து வெள்ளிக்காசுக்கும் விற்கப்படுமட்டும் அதை முற்றுகையிட்டார்கள். இஸ்ரவேலின் ராஜா அலங்கத்தின் மேல் நடந்து போகையில், ஒரு பெண் அவரைப் பார்த்துக் கூப்பிட்டு, ராஜாவாகிய என் ஆண்டவனே, இரட்சியும் என்றாள். அதற்கு அவன்: கர்த்தர் உன்னை இரட்சிக்காதிருந்தால் நான் எதிலிருந்து எடுத்து உன்னை

இரட்சிக்கலாம்? களஞ்சியத்திலிருந்தா, ஆலையிலிருந்தா என்று சொல்லி, ராஜா பின்னும் அவளைப் பார்த்து; உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவள் : இந்தப் பெண் என்னை நோக்கி : உன் மகனைத் தா, அவனை இன்று தின்போம்; நாளைக்கு என் மகனைத் தின்போம் என்றாள். அப்படியே என் மகனை ஆக்கித் தின்றோம். மறுநாளில் நான் இவளைநோக்கி : நாம் உன் மகனைத் தின்ன அவனைத்தா என்றேன். அவள் தன் மகனை ஒளித்து விட்டாள் என்றாள். அந்தப் பெண்ணின் வார்த்தைகளை ராஜா கேட்டவுடனே, அலங்கத்தின்மேல் நடந்து போகிற அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டான் (மிகுந்த துக்கத்தின் செயல்)." பஞ்சத்தின் கொடுமையை விவரிக்க இதைக் காட்டிலும் என்ன கூறமுடியும்!

அன்று இரவு சமாரியா பட்டணத்தின் வெளியே ஒலிமுக வாசலில் தொழுநோயாளிகளின் ஒதுக்குப்புற பள்ளத்தாக்கில் நான்கு தொழுநோயாளிகள் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள் : "நாம் இங்கேயிருந்து சாகவேண்டியது என்ன? பட்டணத்திற்குள் போவோமென்றாலும் பட்டணத்தில் பஞ்சம் உண்டாயிருக்கிறதினால் அங்கே சாவோம்; நாம் இங்கே இருந்தாலும் சாவோம் (பட்டினியால்); ஆகையால் இப்பொழுது சீரியருடைய இராணுவத்திற்குள் போவோம் வாருங்கள்; அவர்கள் நம்மை உயிரோடே வைத்தால் பிழைக்கிறோம்; நம்மைக் கொன்றால் சாகிறோம் என்று சொல்லி, சீரியருடைய இராணுவத்திற்குப் போக இருட்டோடே எழுந்திருந்து, சீரியருடைய பாளையத்திற்கு வந்தார்கள்."

இந்த நிகழ்விற்கு முந்தின காலைநேரம் இறைவாக்கினர் எலிசா நாளை இந்த பஞ்சம் நீங்கி மக்களுக்கு மிகுதியான உணவு உண்டாயிருக்கும் என இறை ஆவியினால் ஏவப்பட்டு அறிவித்திருந்தார். அவர் இவ்விதம் அறிவித்த அன்றிரவு தான் இந்த நான்கு தொழுநோயாளிகளும் தாங்கள் இருந்த இடம் விட்டு சீரியரின் திரளான இராணுவம் தங்கியிருந்த பாளையம் நோக்கி நடந்தார்கள். இறைவன் ஒரு மாபெரும் அற்புதம் நிகழ்த்தினார். இந்த நான்கு தொழுநோயாளிகள் நடந்து சென்றது சீரியருடைய செவிகளில் இரதங்களின் இரைச்சலாகவும், குதிரைகளின் இரைச்சலாகவும், மகாஇராணுவத்தின் இரைச்சலாகவும் கேட்கும்படி இறைவன் செய்ய சீரியரோ தங்கள் உடைமைகள், உணவுகள், கூடாரங்களில் தட்டுமுட்டுகள் என அனைத்தையும் அப்படியே போட்டுவிட்டு பயம் கொண்டு திகிலடைந்தவர்களாக உயிர் தப்பினால் போதுமென ஓடிவிட்டார்கள்.

இந்த நிகழ்வின் கதாநாயகர்களான நான்கு குஷ்டரோகிகளும் வந்து பார்த்தபோது அங்கே சீரியரில் ஒருவருமில்லை. எங்கு பார்த்தாலும் உணவுகள் திரளாக இருந்ததைக் கண்ணுற்றார்கள்.

பலநாட்கள், மாதங்கள் பட்டினி கிடந்த வேட்கை தீர புசிக்க முற்பட்டபோது, அவர்கள் ஒருவரைப்பார்த்து ஒருவர் கூறிக் கொண்டார்கள்; அய்யோ, நாம் செய்கிற இந்தக் காரியம் நல்லதல்ல; பட்டணத்தின் மக்கள் பட்டினியால் மடிந்து கொண்டிருக்கிறார்கள்; இது நற்செய்தி அறிவிக்கும் நேரம்; நாம் உடனே சென்று பட்டணத்தின் காவலர்களுக்கு இதை அறிவிக்கவேண்டும் என்று கூறிப் புறப்பட்டார்கள். அவர்கள் கண்ட உணவினை பட்டணத்து மக்கள் அனைவரும் புசித்து மகிழவேண்டும் என்று அவர்கள் கொண்ட எண்ணம் சான்றோர்கள் வகுத்த அனைத்து ஒழுக்கநெறிகளுக்கும் தலைபோன்றது. திருவள்ளுவரின் குறள் மொழிகள் இதற்கு வலுவான சாட்சியமாகத்திகழ்கின்றது.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. - திருக்குறள் 33:2

தன்னிடம் உள்ளதை பலருடனும் பகிர்ந்து உண்ணுதலே சான்றோர் வகுத்த நெறிகளிலெல்லாம் தலைசிறந்தது என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

"திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளாரிடம் காணப்பட்ட தலையாய பண்பு ஏழையர்க்கு இரங்குதல்

உடையார் உண்ணவும் வறியார்
உறுபழியுழந்து வெந்துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ
எள்ளலேன் உள்ளம் எரிகின்றது உடம்பும்
எரிகின்றது என் செய்வேன்
வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன். (பிள்ளைப்பேறு 62 (3471))

பசியென்னும் தீப்பிணியைப் போக்கப் பெரிதும் விரும்பி சத்திய தருமச் சாலையை நிறுவினார் அடிகள். பசித்தவர்க்கெல்லாம் அன்று தொட்டு உணவு வழங்க ஏற்பாடு செய்தார். **அன்று உணவு சமைக்க ஏற்றப்பட்ட அடுப்பு இன்றும் எரிந்த வண்ணம் உள்ளது.**"

திருவருட்பா மூலமும் உரையும், தொகுதி 1 வர்த்தமானன் பதிப்பக வெளியீடு - பக்.5-6.

40. புல்லறி வாண்மை

(அறிவற்றவர்களின் இழிதன்மை)

1 ராஜாக்கள் 11-ம் அதிகாரம் திருக்குறள் : நிலையாமை (34)

ராஜாவாகிய சாலமோன் என்றாலே மிகப்பெரிய ஞானவான் என உலகறியும். அவருடைய ராஜ்யபாரத்தின் காலத்தில், ஒரு நாள் இருபெண்கள் உயிரோடிருந்த ஒரு குழந்தையையும், செத்துபோன

ஒரு பிள்ளையையும் கொண்டு வந்து சாலமோன் ராஜாவின் முன்பு கிடத்தி, உயிருள்ள பிள்ளையின் மீது இருவரும் உரிமை கொண்டாடி நின்றார்கள். இரண்டுபேரும் ஒரே நாளில் பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள். ஒருத்தி புரண்டு படுத்தபோது தன் குழந்தை மீது படுக்க அது மரித்துப் போயிற்று. அடுத்தவள் அயர்ந்து தூங்கின நிலையில், இவள் செத்துப் போன தன் குழந்தையை அடுத்தவள் அருகில் கிடத்திவிட்டு உயிரோடிருந்த அவள் குழந்தையைக் களவாடி தன் அருகே போட்டு படுத்துக் கொண்டாள். விடிந்ததும் செத்துப்போன பிள்ளையைத் தன் அருகில் கண்ட பெண், இது தன் குழந்தையில்லை எனக்கண்டு, உயிரோடிருக்கும் குழந்தை மீது உரிமை கொண்டாட இப்போது வழக்கு ராஜாவாகிய சாலமோன் முன்பு வந்தது.

இரண்டு பெண்களுமே உயிரோடிருக்கும் ஒரு குழந்தையின் மீது உரிமை கொண்டாட, DNA Test போன்ற வசதிகள் இல்லாத அக்காலத்தில் ராஜாவின் தீர்ப்புக்காக அனைவரும் ஆர்வத்துடன் காத்திருக்கும்போது, ராஜா இவ்விதம் ஆணையிட்டார்: "உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாகப் பிளந்து, பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்றான்." அப்பொழுது உயிரோடிருந்த குழந்தையின் உண்மைத் தாயானவள் உள்ளம் பதற, துடிதுடித்தவளாய், "அய்யோ, என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்லவேண்டாம்; அதை அவளுக்கே கொடுத்துவிடும் என்றாள்; மற்றவள் அது எனக்கும் வேண்டாம், உனக்கும் வேண்டாம், பிளந்துபோடுங்கள் என்றாள்" இதைக் கண்ணுற்ற அரசன் உள்ளம் பதறித் துடிதுடித்தவளே பிள்ளையின் உண்மைத்தாய்; பிள்ளையை எடுத்து அவளிடம் கொடுங்கள் என்றார். ராஜா தீர்த்த இந்த நியாயத்தை இஸ்ரவேலரெல்லாரும் கேள்விப்பட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு தேவன் அருளின ஞானம் ராஜாவுக்கு உண்டென்று கண்டு, அவனுக்குப் பயந்தார்கள்.

சாலமோன் ராஜா கொண்டிருந்த தெய்வீக ஞானத்திற்கு இது ஒரு சிறிய எடுத்துக்காட்டேயாகும். இறைவன் அளித்த இந்த ஞானமே நிலையானது என்பதை ஞானியான சாலமோனும் மறந்தார். இவருடைய ஞானம் இவருக்கு ஏராளமான செல்வத்தை அவரிடம் சேர்த்தது. "சாலமோனின் நாட்களில் வெள்ளி ஒரு பொருளாய் எண்ணப்படவில்லை" என்னும் வார்த்தைகள் இதை உறுதிப்படுத்தும். செல்வம் ஒரு மனிதனிடம் சேருவது தவறல்ல; மனிதன் செல்வத்தை ஈட்டுவதும் தவறல்ல; மாறாக, செல்வமே நிலையானது, அதுவே புகழைச் சேர்க்கும் என இறுமாந்திருப்பதும், அதின்மேல் தன் இருதயத்தை வைத்திருப்பதுவுமே பேராபத்தானது. செல்வத்தை அது இருக்கவேண்டிய இடத்தில் வைத்துப் பார்க்காது, அது நடத்தின

விதத்திலெல்லாம் நடக்க சாலமோன் தன் இருதயத்தைச் சாய்த்தார். ஆயிரம் மனைவியரை மணந்தார்; தோப்புகளையும் மாட மாளிகைகளையும் உண்டாக்கினார். தான் மணந்த பலதேசத்துப் பெண்களைத் திருப்திபடுத்த வேண்டி ஒன்றான மெய்தேவனை விட்டு கண்ட இடங்களிலெல்லாம் விக்கிரகங்களை உண்டாக்கி, இறைவனுடைய பிரமாணங்களுக்கு விரோதமாக அவற்றையெல்லாம் நமஸ்கரித்து வீணான ஆராதனை செய்து தன் இருதயத்தைக் கெடுத்து தனக்கு சகல ஞானம் செல்வம் தந்த இறைவனையும் அவமானப்படுத்தினார். இறுதியில் தேவ கோபத்தைச் சாபமாக ஏற்று அறிவற்ற, இழிந்த ஒரு மனிதனைப்போன்று கருதும் நிலையடைந்தான். அதற்குக் காரணம் பொய்யாப் புலவரின் வார்த்தைகள் கூறும் நிலைதான்.

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. - திருக்குறள் 34:1

அதாவது நிலையில்லாதவற்றை நிலையானது என எண்ணுவது அறிவிலிகளின் தன்மையாகும் என்பது.

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல் - திருக்குறள் 34:3

நிலையில்லா செல்வத்தை ஒருவன் பெற்றால் அதுகொண்டு நிலையானதை உண்டு பண்ணும் அறங்களைச் செய்தல் வேண்டும் என்பதே.

மேலும் சிந்தனைக்கு :

"செல்வம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்" - சங்கீதம் 62:10

"செல்வம் என்றைக்கும் நிலையாது" நீதிமொழிகள் 27:24

"பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" (1 தீமோத்தேயு 6:10)

"மாணிக்கமா மணிமுடி வாகு வலயம்
மார்பில் தொங்கும் பதக்கங்கள் மற்றும் பணிகள்
ஆணிப்பொன் முத்தாரம் அம்பொன் அந்தக் கடகம்
அழிவான பொருளென நின்று ஆடு பாம்பே!" -42

"மலைபோன்ற செம்பொற்குவை வைத்திருப்பவர்
மறலிதான் வருகையில் வாரிச் செல்வரோ?
அலையாமல் அகத்தினை அத்தன் பால்வைத்தோர்
அழியார் என்றே நீ துணிந்து ஆடு பாம்பே!" -44

(பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள்)

41. இன்மை உடைமை
(பற்றில்லா நிலை)

11 தீமோத்தேயு 4:10; மத்தேயு 26:14-16 திருக்குறள் : துறவு (35)

இறைவனின் அருளும் ஆசியும் பெற்ற இறைப்பணியாளர் பவுல் அடிகளார். அவரைக்கொண்டு இறைவன் தம்மையும், தம் நோக்கங்களையும் வெளிப்படுத்த பல ஆற்றல் மிகு செயல்களைச் செய்தார். ஏற்கனவே சிறப்பான கல்வியறிவு உடையவராயிருந்த பவுலடிகளை இறைவன் மிக உன்னத நிலையில் பயன்படுத்தி, யூதரல்லாத பிற இனத்தவர் மத்தியில் இறை வெளிப்பாட்டைக் கொடுக்க பயன்படுத்தப்பட்ட பாத்திரமாக விளங்கச் செய்தார். இதினிமித்தம் இவர் மூலம் இறை வெளிப்பாடு பெற்ற அநேக இளைஞர்கள் இவர் பின் செல்ல விளைந்தனர். அவர்களுள் தீமோத்தேயு, தீத்து, லூக்கா, தேமா போன்றோர் சிறப்பானவர்கள். உலகத்தின் மீது கொண்ட பற்றுகள் அகற்றி, இறைவன் மீது அளவிலா பற்றுக் கொண்டோராய் இறைப்பணி நிலையிலே தம்மை நிறுத்திக் கொண்டவர்கள்.

தாங்கள் கொண்ட பணி நோக்கில் அற்ப சுகங்களையும், ஆடம்பர வாழ்வினையும், பாலியல் மோகத்தையும், பணம் செய்யும் ஆவலினையும் வெறுத்து நிற்கும் நோன்பு நிலையை 'தவம்' என்று வள்ளுவப்பெருந்தகை குறிப்பிடுகிறார். அத்தகைய தவத்திற்காக தங்கள் வாழ்வை இலக்காக்கியோர் எச்சூழ்நிலையையும் நிதானத்துடன் நோக்கி, தாங்கள் கொண்ட கருத்தின் மீதே பற்றுக் கொண்ட நிலையில் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வித கருத்தற்ற நிலை ஏற்பட இடம் கொடுக்கும் பட்சத்தில், தான் கொண்ட நோக்கம் சிதறி, நோன்பு முறிந்து, தவம் கெட்டு, நீங்காப் பிழை அமரும் நிலை வந்தடையும். இந்நிலைதான் பவுலடியார்களிடம் சீடராயிருக்கும் பெருவாழ்வு பெற்ற தேமா என்னும் மனிதனிடம் தலைதூக்கிற்று. அதன் விளைவு, உலகப்பற்று உள் வளர்ந்து, ஊழியப்பற்று புறமிழந்து, ஆன்மீகத்தில் வறியவனாகிவிடும் சூழ்நிலை உருவெடுத்தது. முடிவில் தவம் குலைந்தது; சுகம் மேலோங்கியது; பணி சிறுத்து; நடை தளர்ந்தது. தேமா குறித்து பவுலடியார் உரைக்கும் வார்த்தைகளுள் தான் எத்தனை வேதனையும் துயரமும் வெளிப்படுகிறது! "தேமா இவ்வுலகின்மேல் ஆசை வைத்து, என்னை விட்டுப்பிரிந்து... போய் விட்டான்." வார்த்தைகள் சுருக்கமானதாயினும் அதனுள் வெளிப்படும் துக்கம் பெரிது.

இதேபோன்ற நிலையினைதான் இயேசு நாதரைக் காட்டிக் கொடுத்தயூதாசின் நிலையும். அன்பினால் தன்னை ஆட்கொண்டு அனைவரிலும் உயர்நிலை தந்து, நற்போதனைகளால் பேணி வந்த இன்ப நாதனை கேவலம் 30 வெள்ளிக் காசுகளுக்காக காட்டிக் கொடுத்த கயமைத்தனம் நோக்கின், தான் கொண்ட பணியிலும்,

கருத்திலும் கொண்டிருந்த பற்று, தவத்தை விட உலகின் மேல் கொண்ட பற்றே அதிகமானது என்பதை அறியலாம். முடிவு, தன்வினைத் தன்னைச்சுடும், முற்பகல் செய்த பிறர்க்கின்னா பிற்பகலில் தன் மேல் தானே வரும் என்பதற்கிணங்க யூதாஸ் நான்றுகொண்டு செத்துப்போனான். நல்வினை பொருட்டு உலகறிய வேண்டிய மனிதன், தீவினை பொருட்டு உலகறிந்தவனான மடைமையை என்ன வென்று சொல்வது! இவையெல்லாம் வாழ்வில் தோன்றாதிருக்க வேண்டுமெனில் திருவள்ளுவரின் போதனைகளை மனதில் இருத்த வேண்டும்.

"இயல்பாகும் நோன்பிற் கொன்(று) இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து" - திருக்குறள் 35:4

பற்றற்றிருத்தலே தவத்தின் இயல்பு; இந்நிலை மாறும்போது மயக்கம் (நடைபிறழ்தல்) உண்டாகும் என்பது.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

வாழ்வில் பற்றற்ற நிலையடைய, பற்றேதும் இலாத இறைவனை மனிதன் பற்றிக் கொள்தல் வேண்டும் என்பது.

மேலும் சிந்தனைக்கு :

"வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல" - திருக்குறள் 1:4

ஓடாமல் ஓடி உலகைவலம்வந்து சுற்றித் தேடாமல்
என்னிடமாய்த் தெரிசிப்பது எக்காலம்?
அஞ்ஞானம் விட்டே, அருள்ஞானத்து எல்லை தொட்டு
மெய்ஞ்ஞான வீடுபெற்று வெளிப்படுவது எக்காலம்?

பத்திரகிரியார் பாடல்கள் - சித்தர்பாடல்கள் - பாவை பப்ளிகேஷன்ஸ் பக்.410 - பாடல்கள் 98,100

42. மெய் உணர்தல்

(உண்மை அறிதல்)

யோவான் 8:32; 7:24 திருக்குறள் : மெய் உணர்தல் (36)

உண்மையை அறிந்து கொள்தல் என்பது மனிதனுக்கு இறைவன் கொடுத்திருக்கும் மிகப் பெரிய ஆற்றல். எதையும் உற்றுணர்ந்து, அதன் மெய்த்தன்மையை அறியும் ஆற்றலையே பகுத்தறிவு என்று நாம் கூறுகிறோம். எப்பொருள் எத்தன் மைத்தாயினும் அல்லது எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அதன் மெய்ப்பொருளை, உண்மை நிலையை உணர்வதே அறிவு.

விவிலியத்தில் பவுலடியாரும் இவ்விதம் கூறுகிறார். "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:21). ரிக்வேத சுலோகம் ஒன்றும் இதனையே வலியுறுத்துகிறது; "எல்லா திசைகளிலிருந்தும் நமக்கு உயர் கருத்துக்கள் வரட்டும்" (இந்து சமயநெறி - தி. தயானந்தன் பிரான்சிஸ் - பக்.9). ஏனெனில் மனிதனை அவன் சிக்கியிருக்கும் பாவ மலத்தினின்று விடுவிக்கவும், அவனை நல்நெறிப்படுத்தவும் வல்லமை பெற்றது சத்தியம் என்னும் உண்மையே! இறைவன் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் இதை உறுதிப்படுத்துகிறது. "**சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்; தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல் நீதியின்படி (உண்மையின்படி) தீர்ப்புச் செய்யுங்கள் என்றார்.**"

சத்தியத்தின்படியும் நீதியின்படியும் எதையும் ஆராய்ந்து பார்த்து நன்மையானதைப் பற்றிக் கொள்வதே மெய்ஞ்ஞானம். (பிரகதாரண்யகா உபநிடதத்தில் கூறப்பட்டிருக்கும் உன்னதமான ஜெபத்தின் மூலக்கருத்தே உண்மை (சத்தியம்) என்பது தான்:

"From the unreal lead me to the real
From darkness lead me to light
From death lead me to immortality"

(Upanisads. T.M.P. Mahadevan. P.142)

இறைவா,

பொய்மையிலிருந்து என்னை வாய்மைக்குள் நடத்து
இருளிலிருந்து என்னை வெளிச்சத்திற்கு நடத்து
மரணத்திலிருந்து என்னை நித்திய வாழ்வுக்குள் நடத்து.

அசத்தியத்தை சத்தியம் என்று காணும் நிலையை விளக்கிக் காட்ட பகவான் இயேசு கிறிஸ்து, 'கல்லறை'யை உவமையாக்கியுள்ளார். வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனிதருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள், உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" (மத்தேயு 23.27,28). சத்தியத்தின் மேல் நாட்டமில்லாத மக்கள் இப்படியே பொய்மை வாழ்வில் திருப்தியடைந்தவர்களாய் வாழ்ந்து இறுதியில் தங்கள் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்கிறார்கள். இவ்விதம் வாழ்வதே பிறவித்துன்பம் நம்மைச் சூழ்வதற்கு வழியாகிறது.

உபநிடதங்களும், பகவத்கீதையும் வாழ்வில் சத்தியத்தைத் தேடி, நாடிச் செல்வதை நான்கு நிலைகளாகச் சித்தரிக்கின்றன. முதல் நிலையை 'தமஸ்' என்றும், இரண்டாம் நிலையை 'ரஜஸ்' என்றும், மூன்றாம் நிலையை 'சத்வம்' என்றும், நான்காம் நிலையை 'துரியா' என்றும் வகைப்படுத்துகிறது.

தமஸ் - சுபாவத்தின்படியே, இறைநாட்டமின்றி, சரீரநாட்டமும், அதைத்திருப்தி செய்வதிலுமே வாழும் வாழ்க்கை (Waking State).

ரஜஸ் - இறைநாட்டம் உண்டு; ஆனால் சுபாவ நாட்டத்திலிருந்தும் விடுபட இயலாமல் தத்தளிக்கும் போராட்ட வாழ்க்கை நிலை (Dreaming State).

சத்வம் - இறைநாட்டம் மேலோங்கி, சரீர நாட்டம் ஒடுங்கி, இறையன்பில்லயித்திருக்கும் நிலை (Deep Sleep State).

துரியா - இறைவனோடு ஒன்றிவிட்ட நிலை (Union with God).

Note : "Deep sleep terminates and the self returns to the dream and the waking states. In 'turiya' there is a permanent union with Brahman" (Dr.S. Radhakrishnan) - An Anthology P.231.)

மனித வாழ்வின் இந்த நான்கு நிலைகளை **விவிலியம்...**

1. சுபாவமனிதன் (Natural State) 1 கொரி 2:14; யூதா 19
2. மாம்சீகமனிதன் (Carnal State) ரோமர் 8:6-8
3. ஆவிக்குரிய மனிதன் (Spiritual State) 2 பேதுரு 1:4
4. கிறிஸ்துவுடனிருத்தல் (Union with God State) 11 தீமோ 4:6-8. பிலிப்பியர் 3:12-15. என விவரிக்கிறது.

எனவே, மனிதன் பொய்மையை விட்டு வாய்மைக்கும், உண்மையல்லாததை உண்மையென்றும் விளைகின்ற நிலைமாறி சத்திய மார்க்கம் இன்னதென்று அறிந்து நீடுவாழ்வை அன்பர்கள் அனைவரும் பெற்றிடும் நாட்டம் பெறவேண்டும். இதை அடைந்து கொள்ள விழையாதபோது பிறவித்துன்பத்தில் அமிழ்ந்து இறுதியில் நரகாக்கினையையும் அடைதல் வேண்டும்.

இந்த எச்சரிப்பின் வார்த்தைகளே திருக்குறளில் மேலோங்கி நிற்கிறது.

"பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு" - திருக்குறள் 36:1

பொய்மையை வாய்மை என்று எண்ணி வாழ்வோர் பிறவித்துன்பத்தில் சிக்கி உழல்வர் என்பதாகும்.

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு" - திருக்குறள் 36:2

பொய்மை அகற்றி மெய்ப்பொருள் உணர்வோர் வாழ்வில் இருள்நீங்கி இன்பம் அடைவர் என்பது,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு" - திருக்குறள் 36:5

நாம் காணும் பொருள் எவ்வித தோற்றத்தையுடைய தாயினும் அதன் உண்மைத் தன்மை அறிவதே சிறப்பு என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

அசத்தோமா சத் கமய,
தமசோமா ஜோதிர் கமய
மிருத்திமா அமிர்தம் கமய..

இந்து மதத்தைச் சார்ந்த என் சகோதரர்கள் கூறும் வேதங்களுக்கெல்லாம் தாயாக விளங்கும் 'காயத்திரி' மந்திரத்தை உச்சரிப்பதன் நோக்கமும் புத்தி நெறிப்படுத்தப்படவேண்டும் (உண்மை நிலையடைதல் என்பதே!)

"ஓம் பூர்புவஸ்ஸுவ
தத்ஸவிதுர் வரேணியம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ நஹ பிரசோதயாத்"

"எல்லா பாவங்களையும், அறியாமையையும் போக்குபவரே! வணக்கத்திற்குரியவரே! உலகைப்படைத்த கடவுளே! உமது புகழை நாங்கள் தியானிக்கிறோம். நீங்கள் எங்கள் புத்தியை நெறிப்படுத்த வேண்டும்" (சிவானந்தர் - நன்றி : தினமலர்) (விளக்கங்களுக்கு காண்க Jewel in the Lotus - Sri M.P.113-144)

43. தூய்மை என்பது அவாவின்மை

(பரிசுத்தம் என்பது ஆசையற்றிருத்தல்)

லூக்கா 7:36; 8:2 திருக்குறள் : அவாஅறுத்தல் (37)

யூதேயாவில் மக்தலா என்னும் ஒரு பட்டணம். அங்கே உலக சிற்றின்பங்களில் ஆசையும், மோகமும் கொண்டு வாழ்ந்து வந்த ஒரு பெண். விபச்சாரமயக்கத்திலும், வேசித்தனத்திலும் வாழ்வைக் கழிக்கும் ஒரு பெண்ணை ஏழு பிசாசுகள் பிடித்தவள் என்று கூறும் வழக்கம் அந்நாட்டில் இருந்தது. அவ்விதம் காணப்பட்டவளே

மரியாள். மக்தலாவைச் சேர்ந்தவளாதலால் மகதலேனா மரியாள் என்னும் பேர் கொண்டவளானாள். உலக ஆசை மயக்கத்தாலும், ஆடம் பரப்பிரியத்தாலும் தன் வாழ்வையே அசுத்தமாக்கிக் கொண்டிருந்த மகதலேனா மரியாளின் இருதயமோ வேதனையால் துவண்டது; சமாதானமின்றி, மெய்சந்தோஷம் அனுபவிக்க இயலாமல் மிகவும் துன்பத்தினூடே வாழ்ந்து வந்த அவளுக்கு யார் மூலமாகவோ இறைவன் இயேசு குறித்தும் அவர் அருளும் மெய் சமாதானம் குறித்தும், அவருடன் சந்திப்பை ஏற்படுத்திக் கொள்கின்ற மக்களின் தூய வாழ்க்கை குறித்தும் கேள்வியுற்றாள். அச்சமயத்தில் தான் அந்தப் பட்டணத்தில் வசித்து வந்த மதத்தலைவர் ஒருவருடைய வீட்டில் விருந்துண்ணுமாறு இயேசு அழைக்கப்பட்டிருந்தார். விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தன்னுடைய பட்டணத்தில் இயேசு வந்திருக்கிறார் என்னும் சேதி கேட்ட மரியாள் எழுந்து விரைந்து அந்த பரிசேயனான (மதத் தலைவர்) சீமோனின் வீட்டிற்குள் துணிந்து சென்றாள்; இறைவன் இயேசுவின் பாதம் அமர்ந்தாள்; தன் உள்ளத்தில் பாவ உணர்வு பொங்கியெழ, மிகுதியாக கண்ணீர் வடித்து, தன் கண்ணீரால் இறைவன் பாதங்களை நனைத்து, மற்றோரை கவர்ந்திழுக்க, பாவச் சேற்றில் எண்ணற்றோரை வீழ்த்த பயன்படுத்திய தன் அழகிய நீண்ட கூந்தலால் இறைவனின் பாதங்களைத் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தம் செய்தாள். தான் கொண்டு வந்த பரிமள தைலத்தை உடைத்து ஊற்றி இறைவனின் பாதங்களை பூசை செய்தாள்.

மகதலேனா மரியாளின் உள்ள வேட்கையையும், பாவம் நீங்கி தூய்மை பெறவேண்டி, எவையெல்லாம் இதுவரை தன் ஆசையாக, வாழ்வில் ஆவலாக விளங்கிற்றோ அதையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு இறைவன் அருளும் சாந்தியையும், அமைதியையும் வாழ்வில் பெற்றிட அவள் கொண்டுள்ள உறுதியையும் கண்டு அவளை நோக்கி, "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது... உன் விசுவாசம் (நம்பிக்கை) உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்" வாழ்வில் தூய்மையையும், பரிசுத்தத்தையும் அடைய விரும்புவோர் எவராயினும் இவ்வுலக ஆசையைத் துறந்து முன் வாழ்வின் தீமையான வழிகளை வெறுத்து இறைவனின் அன்பை நாடிட வேண்டும். அவ்விதம் செய்யவில்லையெனில் இப்பிறவித் துன்பத்தை நம்மை விட்டு அகற்ற முடியாது. பிறவியாகிய இப்பெருங்கடலை நீந்திக் கடந்து இறைவன் பாதம் அடைய விழைவோர், ஆசையைத் துறத்தல் வேண்டும். இதையே 'அவா

அறுத்தல்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவப் பெருந்தகை உறுதிபட எடுத்துரைக்கிறார்.

> **"அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்**
> **தவாஅப் பிறப்பீனும் வித்து"** - திருக்குறள் 37:1

பிறவித்துன்பத்தைத் தவிர்க்க விரும்பும் எவரும் ஆசையை ஒழிக்கவேண்டும் என்பதாகும்.

> **"தூய்மை என்பது அவாவின்மை மற்றது**
> **வாஅய்மை வேண்ட வரும்"** - திருக்குறள் 37:4

பரிசுத்த, உண்மை நிலை அடைய விரும்புவோர் எவரும் ஆசைகளைத் துறத்தல் வேண்டும் என்பதே!

மேலும் சிந்தனைக்கு :

"சகோதரரே... ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் இறைவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக் கடவோம்..." (பவுலடிகளார் பிலிப்பியர் 3:13-15).

தம்மைக் கணவன் விட்டுவிட்டுச் சென்று விட்டான் என்பதறிந்த **காரைக்கால் அம்மையார்** சதைப்பற்றுமிக்க தம்முடைய ஊனுடம்பை ஒழித்து எலும்புடம்மை அருளும்படி இறைவனிடம் வேண்டி, அவ்விதமே, காண்பதற்கழகில்லாத வெற்றுடம்பை எய்தி, உலக ஆசைதனை முழுவதும் வெறுத்து, இறைவனின் அன்பின் வெள்ளத்தில் நீந்துகிறார்.

> "எனக்கினிய எம்மானை, ஈசனையான் என்றும்
> மனக்கினிய வைப்பாக வைத்தேன்; - எனக்கவனைக்
> கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்
> உண்டோ எனக்கரிய(து) ஒன்று"

"என் உயிருக்கு இனிமை தரும் எம்பெருமானாகிய ஈசனையான் என்றைக்கும் மனத்துக்கு இனிய பெருஞ் செல்வமாகப் பொதிந்து வைத்தேன். அவனையே எனக்கு உரிய பிரானாகக் (கடவுளாக, தலைவனாக) கொண்டேன். அப்படிக் கொண்டவுடன் நான் மாறாத இன்பத்தை அடைந்தேன். இனிமேல் எனக்குக் கிடைப்பதற்கு அரியதாகிய பொருள் ஒன்று உண்டோ?"

(காண்க, பன்னிரு திருமுறைகள் தொகுதி 17 பக் 49 - வார்த்தமானன் பதிப்பக வெளியீடு).

44. ஊழிற் பெருவலியாவுள

(வினைப் பயனை விட பலம் வாய்ந்தது என்ன)

1 சாமுவேல் 28:5-8; 31: திருக்குறள் : ஊழ் (38)

'ஊழ்' என்பதற்கு வினைப்பயன் எனப்பொருள் கொள்வர் அறிஞர். தான் செய்த செயல் தன்னிடத்தே திரும்பும் என்பதாகும்.

இஸ்ரவேலின் முதல் அரசர் சவுல் என்பார். தன் தகப்பன் கீசு என்பாரின் வீட்டில் இளைஞனாக இருந்தபோது எந்த சிறப்பான பணிகளையும் செய்தறியாத மனிதன். இஸ்ரவேலிலேயே அவரைப் போன்ற உயரமான, வாட்டசாட்டமான மனிதர் எவருமிலர். அப்படியிருந்தும் ஒரு கோழையைப் போல, வீரதீரம் எதுவுமின்றி வாழ்ந்து வந்தவர். காணமல்போன கழுதையைத் தேடிக் கண்டு பிடித்து வர இவர் அனுப்பப்பட்டார் என்று இவரைக் குறித்து சொல்லப்பட்டிருக்கும் சேதியே இவரின் வாழ்வு நிலை குறித்து அறியச் செய்யும். கழுதையைத் தேடிப்போகும் போது கூட இவருடைய பாதுகாப்பிற்காக மற்றொரு வேலைக் காரனையும் தகப்பன் அனுப்புகிறார். இவ்விதம் சிறுமையுற்ற மனிதனாக இருந்தபோது இறைவன் தமது இரக்கத்தால் இவரை அரசராக்கினார். சாமுவேல் தீர்க்கர் இவருடைய இந்நிலை குறித்து இவ்விதம் கூறுகிறார் : "நீர் உம்முடைய பார்வைக்கு சிறியவராய் இருந்தபோது அல்லவோ இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர்; கர்த்தர் உம்மை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணுவித்தாரே."

இறைவனுக்குப் பயந்த மனிதனாக சவுல் அரசர் விளங்கிய வரை அவருடைய காரியங்கள் மிகவும் வெற்றியாகவே அமைந்தது. தான் பெற்று வந்த வெற்றிகளின் காரணமாக ஆணவமடைந்தபோதோ இறைவனின் ஆவி அவரைவிட்டு விலகி, பெலவீனமான மனிதராக விளங்கினார். அச்சமயம்தான் கோலியாத் என்னும் இராட்சதன் இஸ்ரவேலை யுத்தத்திற்கழைத்தான். அவனை எதிர்க்கத் துணிவின்றி சவுல் அரசரும், அவருடைய இஸ்ரவேல் சேனைகளும் "மிகவும் பயப்பட்டார்கள்" அவ்வேளையிலே தாவீது என்னும் இளைஞன் அங்கே வந்து கோலியாத் என்னும் அரக்கனை தனது கவணில் பொருத்தப்பட்ட ஒரு கூழாங்கல்லால் அடித்துக் கொன்றுபோட இஸ்ரவேலே ஆர்ப்பரித்தது.

தன் மானம் காத்து, இஸ்ரவேலின் ஆபத்தை நீக்கி, மாபெரும் வெற்றியை ஈட்டித் தந்த தாவீதின் மீது சவுல் அரசருக்கு பொறாமை உண்டாயிற்று. சவுல் அரசர் பயத்தினால் கலங்கித் தவித்த வேளையில் இவருக்கு உதவி செய்த தாவீது இப்போது கலங்கித் தவிக்கின்றார். சவுல் அரசர் தனது ஈட்டியாலேயே தாவீதை கொன்றுபோட இரண்டு

விசை முயற்சித்தார். தாவீதோ சவுல் அரசரை விட்டு நீங்கி, அவர் பார்வையில் படாவண்ணம் தான் தோற்கடித்த அதே பெலிஸ்திய தேசத்தின் ராஜாவிடம் அடைக்கலம் கொண்டு வாழலானார்.

நிகழ்ந்தது என்ன! நாள் வந்தது, பெலிஸ்தியர் படை இஸ்ரவேலைச் சூழ்ந்தது; இப்போது முன்னின்று போரிட தாவீது அங்கே இல்லை. தன்னுடைய செயல்களால் தாவீதைக் கொன்றுபோட சவுல் அரசர் எத்தனித்தபோது தாவீதின் உள்ளம் எவ்வளவு தத்தளித்ததோ, கலங்கினதோ அதேவண்ணம் இப்போது சவுல் அரசர் தத்தளிக்கின்றார், பயப்படுகின்றார். “பெலிஸ்தர் கூடிவந்து, சூநேமிலே பாளயமிறங்கினார்கள்; சவுலும் இஸ்ரவேலர் எல்லாரையும் கூட்டினான்; அவர்கள் கில்போவாவிலே பாளையமிறங்கினார்கள். **சவுல் பெலிஸ்தரின் பாளையத்தைக் கண்டபோது பயந்தான்; அவன் இருதயம் மிகவும் தத்தளித்துக் கொண்டிருந்தது.** அது மட்டுமல்ல, எந்த தன்னுடைய ஈட்டியினால் தாவீதைக் குத்திப்போட இரண்டு விசை முயற்சித்தாரோ, இப்போது அதே ஈட்டியினால் தன்னைக் குத்திக் கொண்டு மடிந்தார். சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலத்தது, வில்வீரர் அவனைக்கண்டு நெருங்கினார்கள்; அப்பொழுது சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்டு, தன் ஆயுததாரியை நோக்கி அந்த பெலிஸ்தர் வந்து என்னைக் குத்திப்போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு என்றான்; அவனுடைய ஆயுததாரி மிகவும் பயப்பட்டதினால், அப்படிச் செய்யமாட்டேன் என்றான்; **அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான்” அன்றை தினம் சவுல் தன் ஈட்டியாலேயே குத்திக் கொண்டு செத்தான்.**

இதையே திருவள்ளுவர் ‘ஊழ்’ எனக் குறிப்பிடுகிறார்.

“ஊழின் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்” - திருக்குறள் 38:10

வினைப்பயனை விட வலிமை வாய்ந்தது ஒன்றமில்லை; எவ்வகையிலும் அது வந்து வாய்க்கும் என்பதாகும்.

மேலும் சிந்தனைக்கு :

“நீதியை விதைக்கிறவனோ மெய்ப்பலனைப் பெறுவான்”
நீதிமொழிகள் 11:18

“அநியாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான்”
நீதிமொழிகள் 22:8

“மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்”
கலாத்தியர் 6:7

நூலின் ஆசிரியரைப்பற்றி...

Rev. Dr. R. தனராஜ் 1974-ல் சென்னை கிறித்துவக் கல்லூரியில் வரலாற்றில் பட்டப்படிப்பை முடித்த பின், தமிழக அரசின் தொழில் வணிகத்துறையில் இருபது ஆண்டுகள் பணி முடித்து, 1996-ல் கர்த்தருடைய தெளிவான அழைப்பின்பேரில் தனது 45-வது வயதில் முழு நேர இறைப்பணியாளராக கிராமங்களின் மத்தியில் தமது பணியைத் தொடர்ந்தார். கிராமங்களில் வாழும் மக்களுக்காக 1979-ம் ஆண்டிலிருந்து அவர் நடத்திவரும் **மக்னாயீம் முகாம்** நூற்றுக்கணக்கான மக்களுக்கு ஆசீர்வாதமாக இருந்து வருகிறது.

சமீப காலத்தில், இந்தியாவில் தேவ எழுப்புதல் ஏன் தாமதமாகிறது என்னும் கேள்வி இவர் உள்ளத்தில் பலமாக எழும்பவே, அதற்கான காரணங்களைக் கண்டு, அந்தத் தடைகளை நீக்குவதற்காக தூய ஆவியானவராகிய கடவுளின் ஒத்தாசையினால் பல முயற்சிகள் எடுத்து வருகிறார். அத்தகைய முயற்சிகளின் வரிசையில் இந்த புத்தகமும் ஒன்று.

"இந்தியாவில் நற்செய்தி அறிவிக்கும் பணியில் நேர்ந்த சுணக்கத்திற்குக் காரணமே கிறிஸ்தவர்களிடம் நமது சொந்த இலக்கியங்கள்மீதும், நாம் ஊழியம் செய்யும் மக்களின் பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் குறித்த அறியாமையும் ஒவ்வாமையுமேயாகும்!" - என்றுரைக்கும் இவர், "தோமாவழி கிறிஸ்தவக் கையேடாகிய உலகப் பொதுமறை, செந்நாப்போதரின் 'திருக்குறள்' ஆதிக் கிறிஸ்தவத்திற்கும், நவீன ஐரோப்பிய வழி கிறிஸ்தவத்திற்குமிடையே பாலமாக நின்று இந்திய திராவிட மக்களனைவரையும் ஒருங்கிணைக்கிறது என்கிற சத்தியத்தைப் பறைசாற்றும் ஒரு முயற்சியாக இந்நூல் வெளிவருகிறது" என்றும் தமது அறிமுக உரையில் குறிப்பிட்டுள்ளார்.

M. சுந்தர் யேசுவடியான்...

நூலாசிரியரின் இந்த நூலின் தனிச்சிறப்பு என்னவெனில், தோமா வழி வந்த ஆதி இந்தியக் கிறிஸ்தவ இலக்கியமாகிய திருக்குறளையும் பைபிளையும் பயன்படுத்தி இந்திய மக்களுக்கு நற்செய்தி அறிவிக்க இயலும் என்பதாகும். இந்த நூலில், பாயிரம் மற்றும் 44 குறட்பாக்களையும் அவற்றிற்கு இணையான பைபிள் வசனங்களையும் தொகுத்து, விளக்கப்பட்டதுடன், மேலும் சிந்தனைக்கான இதர வெளியீடுகளையும் நூலாசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார். இந்த நூல் இந்த வரிசையில் இனி வரும் நூல்கள் எப்படி அமையவேண்டும் என்பதற்கு ஒரு முன் மாதிரியாக தனிச்சிறப்புடன் அமைந்துள்ளது.